பக்கங்கள்: 20
விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2048 | சித்திரை 25, திங்கட்கிழமை 08.05.2017 | கதிர் 183

Facial, Straightening, Bleaching, Face Massaging, Threading
Hair Dressing
Ladies & Gents
வெலா சலூன்
இல.8, நவீன சந்தை, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 077 658 4453, 021 205 4116

# அரசின் இன்றைய போக்கு மந்தகதியே! அதற்காக ஆட்சியை கவிழ்க்க முடியாது!!

## தொலைக்காட்சிப் பேட்டியில் சுமந்திரன் எம்.பி.



கொழும்பு, மே 08

நல்லிணக்கத்தை ஏற்படுத்துவோம் எனக் கூறி ஆட்சிக்கு வந்த மைத்திரி - ரணில் கூட்டு அரசின் போக்கு - நடவடிக்கை மிகவும் மந்தகதியிலேயே செல்கிறது. தமிழ் மக்களின்அபிலாஷைகள் ஏதும் இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை. அதற்காக இன்றைய ஆட்சியைக் கவிழ்க்கும் வகையிலான நடவடிக்கைகளில் நாம் ஈடுபட முடியாது. அவ்வாறான நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவும் முடியாது.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

பக்கம் 18 >>>

# தமிழருக்கு துயரமான நாள் மே 18 முல்லைத்தீவுக்கு அந்நாளில் வராதீர்!

## ஜனாதிபதியிடம் கோருகிறார் கூட்டமைப்பு எம்.பி.நிர்மலநாதன்

முல்லைத்தீவு, மே 08

முள்ளிவாய்க்கால் நினைவு தினமான மே 18 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முல்லைத்தீவுக்கு வருவதைத் தவிர்த்து பிறிதொரு தினத்தில்வருகைதரவேண்டும் என, தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளு

பக்கம் 18 >>>

## ஹெரோயினுடன் யுவதி தெஹிவளையில் கைது

கொழும்பு, மே 08

ஹெரோயின் போதைப் பொருளுடன் 21 வயதுடைய யுவதி தெஹிவளைக் கடற்கரைப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் இருந்து 7.38 கிராம் ஹெரோயினைப்பொலிஸார்கைப்பற்றினர்.

ஏற்கனவே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நபரின்

பக்கம் 18 >>>

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை கேளிக்கை தினமாக மாற்றாதீர்கள்

## முல்லை. சிவில் அமைப்புக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, மே 08

முள்ளிவாய்க்கால் பேரவலத்தை நினைவு கூரும் தினத்தில்விளையாட்டுக்களைநடத்தி அதைக் கேளிக்கை நிகழ்வாக மாற்றவேண்டாம்எனமுல்லைத்தீவு மாவட்ட சிவில் அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

முல்லைத்தீவில் உள்ள சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் ஒழுங்குசெய்த ஊடக சந்திப்பொன்று நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் கள்ளப்பாடு பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்றது. இதன்

பக்கம் 18 >>>

## தொழிற்சங்கப் போராட்டங்கள் மூலம் நல்லாட்சியைக் கவிழ்க்க முடியாது!

### பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதி

கொழும்பு, மே 08

தொழிற்சங்கப் போராட்டங்கள் மூலம் நல்லாட்சி அரசைக் கவிழ்க்க இடமளிக்கப் போவதில்லை. அரசாங்கத்தைக் கவிழ்ப்பதன் மூலம் நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது.

- இவ்வாறு கூறுகிறார்

பக்கம் 18 >>>

## 'கடவுளே எங்களுக்கு வழிகாட்டு!'

### முல்லை. கவனவீர்ப்பில் உறவுகள் ஓலம்



முல்லைத்தீவு, மே 08

''எத்தனை, எத்தனை போராட்டங்களைச் செய்துவிட்டோம். எங்கள் உறவுகளைத் தேடி எங்கெங்கோ எல்லாம் அலைந்து திரிந்து விட்டோம். ஆனால், இதுவரையும் அரசின் பதில் ஏதுமின்றி நாளாந்தம்

பக்கம் 18 >>>



## லஞ்சம் பெற்ற 21 அரச அதிகாரிகள் பொலிஸ் வலையில்!

கொழும்பு, மே 08

இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் 21 அரச அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதுவரையான காலப் பகுதிக்குள் இலஞ்சம் பெற்றுள்ள

பக்கம் 18 >>>

## சாவகச்சேரி கனகம்புளியடியில் வாள்வெட்டு; மூவர் படுகாயம்

### நேற்று மாலை வேளையில் சம்பவம்

சாவகச்சேரி, மே 08

சாவகச்சேரி - மட்டுவில், கனகம்புளியடிச் சந்திப் பகுதியில் நேற்று ஞாயிறு மாலை 4.30 மணியளவில் வாள்வெட்டுச் சம்பவம் ஒன்று நிகழ்ந்துள்ளது. சம்பவத்தில் மூவர் தலை, வயிறு, கை, கால்களில்வெட்டுக் காயங்களுக்குஇலக்காகியுள்ளனர்.

கைதடி நுணாவிலைச் சேர்ந்த வேணுகோபால் சுகந்தன் (வயது 22), கைதடி - நுணா

பக்கம் 18 >>>

# அரசமைப்புத் திருத்தமா? புதிய அரசமைப்பா?

### மோடி வந்து சென்ற கையோடு அறிவிப்பார் மைத்திரி

கொழும்பு, மே 08

புதிய அரசமைப்பை உருவாக்குவதா அல்லது அரசமைப்பைச் சீர்திருத்தம் செய்வதா என்பதுதொடர்பாக அடுத்த இரு வாரங்களில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெளிவான அறிவிப்பு ஒன்றை வெளியிடுவார் என நம்பத்தகுந்த வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போன்ற சிறுபான்மைக் கட்சிகள் அரசமைப்பை

பக்கம் 18 >>>

அலப்பு அருணாசலம்



ஏதோ சமாளிச்சு ஒட்டி உறவாடி விசயத்தை ஒப்பேத்துவோம் என்கிறாரோ தம்பி சுமந்திரன்....!

தமிழ்பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர்



# நியமனம் வழங்கக் கோரி ஜனாதிபதிக்கு வடக்கு சுகாதாரத் தொண்டர்கள் கடிதம்

கிளிநொச்சி, மே 08

சுகாதாரத் தொண்டர்களாகப் பணியாற்றிய காலப்பகுதியின் அடிப்படையில் நிரந்தர நியமனத்தை வழங்குமாறு கோரி வடக்கில் சுகாதாரத் தொண்டர்கள் ஜனாதிபதிக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

## 4 வவுனியாவில் ஆவது நாளாக போராட்டம்

நிரந்தர நியமனம் வழங்கக்கோரி வவுனியாவில் சுகாதாரத் தொண்டர்கள் 51 பேர் முன்னெடுத்து வரும் போராட்டம் நேற்று நான்காவது நாளாகவும் தொடர்ந்தது.

இந்தநிலையில் சுகாதாரத் தொண்டர்களாக சேவையாற்றிய காலப்பகுதி அடிப்படையில் நிரந்தர நியமனத்தை வழங்குமாறு கோரி வடக்கில் சுகாதாரத் தொண்டர்களாகப் பணியாற்றியவர்கள் ஜனாதிபதிக்குக் கடிதத்தை அனுப்பி வைத்துள்ளனர்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

சுகாதாரத் தொண்டர்கள் ஆகிய நாம் 1994 ஆம் ஆண்டு தொடக்கம் போர் காலத்தில் மற்றும் நலன்புரி நிலையங்கள் முதல்கொண்டு இன்று வரை எதுவித வேதனமுமின்றி தொண்டர் அடிப்படையில் நிரந்தர நியமனத்தை எதிர்பார்த்து செயற்பட்டு வருகின்றோம். கடந்த 2015.03.21 அன்று நிரந்தர நியமனம் வழங்கும் போது நிறுவனம் ஒன்றின் கொடுப்பனவுடன் கடமையாற்றிய தொண்டர்களுக்கு இந்தச் சமயம் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டது. இருந்தபோதும் தகுதியிருந்தும் 2015 ஆம் ஆண்டு நிரந்தர நியமனம் கிடைக்கவில்லை. அடுத்த கட்டத்தில் நிரந்தர நியமனம் வழங்குவதாக வாக்குறுதி வழங்கப்பட்டது.



தற்போது ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் 6 பாடங்கள் சித்தியடைய வேண்டும் என்ற காரணத்தை கூறி இம்முறையும் நிரந்தர நியமனம் வழங்குவதிலிருந்து தட்டிக்கழிக்க முயற்சிக்கின்றனர். வட மாகாணத்தைப் பொறுத்த வரையில் கடந்த 30 வருடகாலமாக நடைபெற்ற போரால் எங்களின் கல்வியைச் சரியாகத் தொடரமுடியவில்லை.

எனவே, சுகாதாரத் தொண்டர்களாகச் சேவையாற்றிய காலப்பகுதி அடிப்படையில் நிரந்தர நியமனத்தை வழங்கவும் என்பதுடன்-

கடந்த கால ஆட்சேர்ப்பு முறைப்படி சுகாதாரத் தொண்டர்களை நிரந்தர நியமனத்துக்கு அரசு கவனத்தில் கொள்ள வேண்டும், சுகாதாரத் தொண்டர்களின் சுகாதார சேவைகளை அதிக கல்வித் தகுதி பாராது அனுபவ ரீதியான சுகாதாரத் தொண்டர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கவும், சுகாதாரச் சேவை உதவியாளர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு புதிய ஆண் சேவையாளர்களை உள்வாங்காது தற்போது பல வருடங்களாக சுகாதாரசேவையில் தொண்டாற்றிய பெண் சுகாதாரத் தொண்டர்களை உள் வாங்கவும்-

வடமாகாண சபையால் மத்திய அரசுக்கு புதிய சுற்றறிக்கையின்படி சேவைக்கால அடிப்படையில் சுகாதாரத் தொண்டர்களை நிரந்தர நியமனம் வழங்குவதற்கான சிறப்புப் பிரேரணை மனுமூலம் ஆட்சேர்ப்பு நடவடிக்கையை செய்வதற்காக நடவடிக்கை எடுக்க ஒழுங்குகள் செய்யவும், சுகாதாரத் துறை சம்பந்தப்பட்ட சுகாதார அமைச்சின் ஊடாக வரும் சுகாதாரத் தொண்டர்களின் பெயர்ப்பட்டியலின் படி நிரந்த நியமனம் வழங்கும் போது அவர்களை மட்டும் உள்வாங்கவும்,

அரசியல் செல்வாக்குள்ள சில அரசியல் பிரதிநிதிகளினால் சுகாதார சேவைக்காக வரும் பெயர் விவரங்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டாம், வயது எல்லை பாராது சேவைக் கால அடிப்படையில் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவும், நல்லாட்சி அரசே சுகாதாரத் தொண்டர்களுக்கு நிரந்தர நியமனம் கொடுங்கள், மதிப்பிற்குரிய ஜனாதிபதி அவர்களே தங்களின் சாதகமான முடிவு வரும் வரை எமது கவனவீர்ப்புப் போராட்டம் வடமாகாணத்தில் தொடரும்-

ஆகியவற்றை உங்களுக்கு வலியுறுத்தி நிற்கும் நாம் எமது கோரிக்கைகளுக்கு நல்லாட்சி அரசில் எமது சேவைக்கான முடிவு வேண்டும் என்றுள்ளது. (எ-100)

# பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்ட குற்றவாளிகளின் சொத்துக்கள் பறிமுதல்!

பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபட்டு குற்றவாளியாக அடையாளம் காணப்படுவோரின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

குற்றவாளிகளுக்கு 20 வருடங்களுக்கு குறையாமல் சிறைத்தண்டனை மற்றும் அவர்களின் அனைத்துச் சொத்துக்களும் அரசுடைமையாக்குவதற்கான சட்டத்தை அரசு பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் அறிவித்துள்ளது.

அத்துடன் வரலாற்றுச் சிறப்பு மிக்க மற்றும் தொல்பொருள் பெறுமதியான இடங்களை அழிப்பது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் குற்றமாகும்.

இந்தச் சட்டம் பழைய பயங்கரவாதத் தடை சட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

இதனைத் தவிர இலங் கையின் இறையாண்மைக்கு பாதிப்பு ஏற்படுத்த முயற்சிப்பது மற்றும் செயற்படுவது குற்றமாகும்.

74 பக்கங்களைக் கொண்ட புதிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் அரசாங்க இரகசியங்களை வெளிப்படுத்துவது தண்டனைக்குரிய குற்றமாக அறிவிக்கப்பட்டுள்ளது. விமானத்தில், கடத்தல் மேற் கொள்ளப்படும் நடவடிக்கை பயங்கரவாதக் குற்றங்களாகும்.

இந்தப் புதிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பயங்கரவாத செயற்பாடுகளை விசாரிப்பதற்காக பொலிஸ் மா அதிபருடனான பயங்கரவாத எதிர்ப்பு நிறுவனம் நிறுவ வேண்டும், அதற்கு விசேட விசாரணைக் குழு ஒன்றை உள்ளடக்க வேண்டும்.

இதற்கு மேலதிகமாக பயங்கரவாதச் செயற்பாடு தொடர்பில் கைது செய்யப்படுபவர்கள் தொடர்பில் இந்த நாட்டு மனித உரிமை ஆணைக்குழுவில் உடனடியாக அறிவிக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# லண்டனில் இலங்கைத் தூதரகம் முன் நேற்று கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம்!

லண்டன், மே 08

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் படுகொலை செய்யப்பட்டமையைக் கண்டித்தும் அவர்களின் இழப்புக்கு நீதி கோரியும் லண்டனில் அமைந்துள்ள இலங்கைத் தூதரகத்துக்கு முன்னால் நேற்று பெரியளவில் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.



## யாழ். பல்கலை மாணவர்கள் படுகொலைக்கு நீதி கோரி

கடந்த ஆண்டு யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மூன்றாம் வருட மாணவர்கள் இருவர் கொக்குவில் குளப்பிட்டிப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தனர்.

அந்த சம்பவத்தைக் கண்டித்தும், மாணவர்களுக்கு நீதி வேண்டி தமிழர் வாழும் தேசம் எங்கும் பல்வேறு கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

அந்தவகையில் நாடுகடந்த தமிழீழ அரசாலும் லண்டனில் உள்ள பல்வேறு அமைப்புக்களாலும் இலங்கைத் தூதரகத்துக்கு முன்னால் நேற்றுக் காலை கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தநிலை தொடருமாக இருந்தால் இலங்கை அரசு மாபெரும் போராட்டம் ஒன்றை எதிர்கொள்ள வேண்டி வரும்' என்றார். இதில் மாணவர்களின் படுகொலைக்கு நீதி வேண்டும் என்ற கோஷங்களை எழுப்பியவாறு பல்லாயிரக் கணக்கானோர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர். (எ)



# இணைப் பேச்சாளர் பதவியிலிருந்து அமைச்சர் ராஜித நீக்கப்படலாம்?

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன அமைச்சரவை இணைப் பேச்சாளர் பதவியிலிருந்து நீக்கப்படக்கூடும் என்று தெரிவிக்கப்படுகிறது.

நல்லாட்சி அரசை வலுவாக முன்னெடுப்பதற்கு ராஜித சேனாரத்ன அமைச்சரவை இணைப் பேச்சாளர் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் கோரஉள்ளனர்.

அமைச்சர் ராஜித தொடர்பில் அவர்கள் முறைப்பாடு செய்ய உள்ளனர் என்று பெயர் குறிப்பிட விரும்பாத சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவித்துள்ளார்.

இதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்களின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ளும் பேச்சுகள் தற்போது நடத்தப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் அமைச்சர் ஜோன் செனவிரத்னவை, அமைச்சர் ராஜித பகிரங்கமாகத் திட்டியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அமைச்சர் ராஜித சேனாரத்னவின் கருத்துக்கள் அரசை நெருக்கடிக்குள் ஆழ்த்தும் வகையில் அமைந்துள்ளன என்று ஆளும் கட்சி அமைச்சர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (எ)

# மஹிந்தவின் பொலிஸ் பாதுகாப்பு நேற்று மீண்டும் குறைக்கப்பட்டது

## 50 பொலிஸார் விலக்கப்பட்டனர்

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்டிருந்த பொலிஸ் பாதுகாப்பு நேற்று மீண்டும் குறைக்கப்பட்டுள்ளது.

அவரது பாதுகாப்புக்காக வழங்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களில் மேலும் 50 பேர் நேற்று விலக்கிக்கொள்ளப்பட்டனர்.

விலக்கப்பட்ட ஐம்பது பொலிஸாரில், பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் இருவர், சப் இன்ஸ்பெக்டர்கள் ஐவர், பெண் பொலிஸார் மூவர் உள்ளடங்குகின்றனர்.

மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புக்கென பொலிஸ் உத்தியோகத்தர்கள் 199 பேர் நியமிக்கப்பட்டிருந்தனர். அவர்களில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் 42 பேரும் நேற்று 50 பேரும் விலக்கிக்கொள்ளப்பட்டனர். தற்போது அவரது பாதுகாப்புக்காக 107 உத்தியோகத்தர்கள் மட்டுமே உள்ளனர்.

ஏற்கனவே 42 பொலிஸார் விலக்கிக்கொள்ளப்பட்டமைக்கு மஹிந்த சார்பு கூட்டு எதிரணியினர் போர்க்கொடி தூக்கியுள்ள நிலையில், அதிரடியாக மீண்டும் பாதுகாப்புக் குறைக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# வீதிச் சமிக்ஞை கம்பத்தை தூக்கி நிறுத்திய சிறுவர்கள்



வவுனியா, மே 08

வவுனியா, சிந்தாமணி ஆலய வீதியில் அமைக்கப்பட்டிருந்த வீதி குறியீட்டு சமிக்ஞைகள் விசமிகளால் நேற்று சேதமாக்கப்பட்டதை அடுத்து சிறுவர்கள் இணைந்து அதைச் சீர் செய்துள்ளனர்.

மேற்படி வீதியில் போக்குவரத்துச் சமிக்ஞை குறியீடு வீழ்ந்து கிடந்ததை அவதானித்த சிறுவர்கள் தாங்களாக முன்வந்து மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில் அதைத் தூக்கி நிறுத்தினர்.

இதை அவதானித்த பலரும் அந்தச் சிறுவர்களின் செயலைப் பாராட்டினர். (ம-100)

# இலங்கை வரும் இந்தியப் பிரதமர் 24 மணிநேரமே இங்கு தங்குவராம்

## வியாழன் மாலை வந்து வெள்ளி மாலை திரும்புவார்

எதிர்வரும் வியாழக்கிழமை இலங்கைக்கு வரவிருக்கும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி 24 மணி நேரம் மட்டுமே இங்கு தங்கியிருப்பார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐ.நா வெசாக் கொண்டாட்டங்களில் பங்கேற்பதற்காக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வரும் 11ஆம் திகதி மாலை இலங்கைக்கு வரவுள்ளார். அவர் மறுநாள் 12ஆம் திகதி நடைபெறும் ஐ.நா வெசாக் நிகழ்வுகளில் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

அதன் பின்னர் கண்டிக்குச் சென்று தலதா மாளிகையில் வழிபாடு நடத்தும் இந்தியப் பிரதமர், டிக்கோயாவில் இந்தியாவின் உதவியுடன் அமைக்கப்பட்ட மருத்துவமனையை திறந்து வைப்பார். அன்று மதியம் கண்டியில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்தியப் பிரதமருக்கு மதியபோசன விருந்தளிப்பார்.

அங்கிருந்து மாலைவேளை கொழும்பு திரும்பும் இந்தியப் பிரதமர் உடனடியாகவே புதுடெல்லிக்குப் புறப்பட்டுச் செல்வார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம)

# மட்டு. தாண்டவன்வெளியில் விபத்து; கார் சேதம், எவருக்கும் பாதிப்பில்லை

மட்டக்களப்பு-திருகோணமலை வீதியில், தாண்டவன்வெளியில் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் வாகனம் முற்றாக சேதமடைந்தபோதிலும் அதில் பயணித்தவர்கள் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர்.

நேற்று மாலை இந்த விபத்து இடம்பெற்றது. லொறியும் காரும் ஒன்றுடன்ஒன்று மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் கூறினர்.

இந்த விபத்துக் குறித்து மட்டக்களப்புப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)

# தமிழக மீனவர் விவகாரம் இன்று டில்லியில் கூட்டம்

## இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா பங்கேற்பு

இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டு வருகின்ற நிலையில், அது தொடர்பாக ஆராய்வதற்காக இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ் இன்று புதுடில்லியில் கூட்டம் ஒன்றுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்படுதல் மற்றும் அவர்களின் படகுகள் விடுவிக்கப்படாமை போன்ற விடயங்கள் இதன் போது ஆராயப்படவுள்ளன.

இதேவேளை, இலங்கையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமது மீனவர்களின் விடுதலையில் தலையிடுமாறு பாண்டிச்சேரியின் முதல்வர் வி. நாராயணசாமி இந்திய வெளிவிவகார அமைச்சரைக் கோரியுள்ளார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ம)

# ஊழல், மோசடிகளை முறைப்பாடு செய்ய உருவாக்கப்பட்ட அலுவலகம் மூடப்பட்டது

## தேவையற்ற பிரச்சினைகளைத் தடுப்பதே காரணமாம்

கொழும்பு, மே 08

நல்லாட்சி அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட ஊழல், மோசடிகள் தொடர்பான பொது மக்கள் முறைப்பாட்டு அலுவலகம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கு அமைய மூடப்பட்டுள்ளது எனத் தெரியவந்துள்ளது.

நல்லாட்சி அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் கடந்த அரசாங்கத்தின் ஊழல், மோசடிகள் தொடர்பில் பொதுமக்கள் தங்களுக்குத் தெரிந்த தகவல்களை முறைப்பாடாக பதிவு செய்ய புதிய அலுவலகம் ஒன்றை உருவாக்கியிருந்தது.

கொழும்பு, கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள அலரிமாளிகைக்கு அருகில் அமைந்திருந்த இந்த அலுவலகத்திற்கான வசதிகள் பிரதமர் அலுவலகத்தில் இருந்து வழங்கப்பட்டன.

ஆரம்ப காலங்களில் இதன் அங்கத்தவர்களாக ஆளுங்கட்சியினர் மற்றும் ஜே.வி.பி.யின் முக்கியஸ்தர்கள் செயற்பட்டிருந்தனர்.

எனினும் பின்னர் ஜே.வி.பியினர் விலகிக் கொண்டதன் காரணமாக ஆளுங்கட்சியினர் மாத்திரமே இதன் விசாரணை நடவடிக்கைகளில் பங்கெடுத்திருந்தனர்.

இதன் காரணமாக அநாவசியமான பிரச்சினைகள் உருவாகலாம் என்று பிரதமரின் ஆலோசகர்கள் சுட்டிக்காட்டியதற்கு இணங்க தற்போது அந்த அலுவலகத்தை மூடிவிட பிரதமர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

இலஞ்ச, ஊழல் ஆணைக்குழு, நிதிமோசடிப் பிரிவு என்பன சரிவர இயங்கிக் கொண்டிருப்பதன் காரணமாக அதற்குப் புறம்பாக இன்னொரு அலுவலகம் தேவையில்லை என்று பிரதமர் கருதியதன் காரணமாகவே குறித்த அலுவலகம் மூடப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம)

# இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டு; மூன்று பொலிஸார் பணிநீக்கம்

கம்பஹா பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் சப் இன்ஸ்பெக்டர் மற்றும் இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் 30 ஆயிரம் ரூபா இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டின்பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கம்பஹா உடுகம்பொல பிரதேசத்தில் இடம்பெற்ற களவுச் சம்பவம் ஒன்று தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்காதிருக்க, இந்த 30 ஆயிரம் ரூபா லஞ்சம் பெறப்பட்டுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இந்த மூன்று சந்தேக நபர்களும் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ம)

# மின்சாரம் தடைப்படும்

இலங்கை மின்சார சபை

CEYLON ELECTRICITY BOARD

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ். பிரதேசத்தில் உடுத்துறை, கொடுக்குழாய், ஆழியவளை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு இராணுவ முகாம் ஆகிய இடங்களிலும் –

கிளிநொச்சி பிரதேசத்தில் மாங்குளம் ஒரு பகுதி, மன்னகுளம், பெரியார்குளம் கனகராயன்குளம் ஒரு பகுதி, IRCON ஆகிய இடங்களிலும் –

மன்னார் பிரதேசத்தில் மடுக்கரைப் பிரதேசம் ஆகிய இடங்களிலும் –

மின்சாரம் தடைப்படும் என மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# மழையுடன் கூடிய காலநிலை எதிர்வரும் 12 வரை தொடரும்

யாழ்ப்பாணம், மே 08

நேற்று வியாழக்கிழமை தொடங்கிய மழையுடன் கூடிய காலநிலை எதிர்வரும் 12 ஆம் திகதி வரை தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்தது.

கடந்த சில மாதங்களாக வாட்டி வதைத்த வெயிலின் கொடுமை தாங்க முடியாமல் மக்கள் தவித்த நிலையில் நேற்று மதியம் 12.30 மணி தொடக்கம் அரை மணித்தியாலம் யாழ். குடாநாட்டின் சில இடங்களில் மழை பெய்தது.

இந்த மழையினால் ஆங்காங்கே வெள்ளம் தேங்கியதையும் காணமுடிந்தது. வெயிலால் தவித்த மக்கள் மழையைக் கண்டதும் மகிழ்ச்சியில் திளைத்தனர். (ம)



சுழிபுரம் மேற்கு கலைமகள் இலவசக் கல்வி நிலையத்தில் நலன் விரும்பி ஒருவரால் நிர்மாணிக்கப்பட்ட சரஸ்வதியின் திருவுருவச் சிலை நேற்று முன்தினம் சனிக்கிழமை சமயக் கிரியைகளுடன் திறந்துவைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்கள், ஆசிரியர்களின் ஒரு பகுதியினரையும் திறந்துவைக்கப்பட்ட சரஸ்வதிசிலையையும் படங்களில் காணலாம். (ம)

காலைக்கதிர்



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## மேதினம் சொல்லும் செய்தி

மே தினம் வந்துதான் போனது. தென்னிலங்கைப் பத்திரிகைகள், ஊடகங்கள் எல்லாம் அது குறித்துத்தான் ஒரே பேச்சு. குறிப்பாக, மூன்று பிரதான அரசியல் கட்சிகளினதும் கூட்டங்களுக்குத் திரண்ட பொது மக்களின் எண்ணிக்கை குறித்துத்தான் ஞாயிறு வார இதழ்கள் எல்லாம் கருத்துரைகள் வெளியிட்ட வண்ணம் இருந்தன.

இந்த மே தினத்துடன் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசியலில் புனர் ஜென்ம - விஸ்வரூபம் - எடுத்துவிட்டார் அநேகமாக அனைத்துப் பத்திரிகைகளினதும் மதிப்பீடுகள் அமைந்துள்ளன.

மஹிந்த தலைமையிலான கூட்டு எதிரணி தனது மே தினத்தை காலிமுகத்திடதில் நடத்துவதற்கு அனுமதி கோரிய போது அரசுத் தரப்பு பெரும் பிகு ஏதும் பண்ணாமல் அந்த இடத்தை வழங்க முன் வந்தது. இவ்வளவு பரந்த பிரதேசத்தை மஹிந்த அணியால் நிரப்ப முடியாது போகும், அதை வைத்தே அவர்களது மே தினத் துக்கு மக்கள் வரவில்லை, மக்கள் ஆதரவு மஹிந்த தரப்புக்கு இல்லவே இல்லை எனக் காட்டலாம் என்றே தான் அரசுத் தரப்பு திட்டமிட்டது.

ஆனால், விடயம் அரசுத் தரப்பு எண்ணியதற்கு மாறாக அமைந்துவிட்டது.

மஹிந்த அணி மே தினக் கூட்டத்தை நடத்திய காலி முகத்திடலின் விஸ்தீரணம் பக்கத்தில் உள்ள அகன்ற காலி வீதியையும் சேர்த்து 18 ஏக்கராகும்.

அதேபோல ஐக்கிய தேசியக் கட்சி மேதினத்தை நடத்திய கொழும்பு கெம்பல் பார்க் மைதானத்தின் விஸ்தீரணம் ஆக 3.5 ஏக்கர் மட்டுமே.

அதேமாதிரி, மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மேதினக் கூட்டத்தை நடத்திய கண்டி கெட்டம்பே மாநகரசபை விளையாட்டு மைதானத்தின் விஸ்தீரணம் ஆக 2.5 ஏக்கர்தான்.

ஐ.தே.கட்சியின் மேதினக் கூட்டம் நடந்த இடத்தை விட ஐந்து மடங்கு பெரிய பிரதேசத்தில் - அதுபோல ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மேதினத்தை நடத்திய இடத்தை விட ஏழு மடங்கு பெரிய இடத்தில், மஹிந்த அணி தனது மேதினத்தை நடத்தியுள்ளது. அதுவும் தலைநகரில்.

புலனாய்வுத் துறையினரின் மதிப்பீட்டின்படி, மஹிந்தவின் கூட்டு எதிரணியின் மேதினத்துக்கு ஒரு லட்சத்துக்கு அதிகமானோர் திரண்டனர். ஐ.தே.கட்சியின் கெம்பல் பார்க் மே தினக் கூட்டத்துக்கு 45 ஆயிரம் பேரும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பங்குபற்றிய சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்டத்துக்கு 40 ஆயிரம் பேரும் வருகை தந்துள்ளனர். அதாவது, ஐ.தே.கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய இரண்டினதும் மேதினக் கூட்டங்களுக்கு மொத்தமாக சமுகம் தந்தோரை விட, தனித்து மஹிந்தவின் கூட்டு எதிரணியின் கூட்டத்துக்கு வருகை தந்தோர் எண்ணிக்கை அதிகமாகும். மே தினத்துக்கு காலிமுகத்திடலை நிரப்பிக் காட்டுவோம் என்ற தனது சவாலை வெற்றிகரமாக முடித்துக் காட்டியிருக்கின்றார் மஹிந்தர்.

சுதந்திரக் கட்சியைப் பொறுத்தவரை தனது ஆதரவாளர்களை மே தின நிகழ்வு நடைபெறும் இடத்துக்குக் கூட்டி வருவதற்காக இரண்டாயிரம் பஸ்களை அது ஒழுங்கு செய்திருந்தது. அத்தனை பஸ்களுக்கான கட்டணமும் மே தினத்துக்கான சேவையில் ஈடுபடுவதற்காக நேரத்துடன் அவற்றுக்குரிய கட்டணங்களும் செலுத்தப் பட்டுவிட்டன என்று சு.கவின் செயலாளர் அமைச்சர் துமிந்த திஸநாயக்கா முற்கூட்டியே கூறியிருந்தார். இரண்டாயிரம் பஸ்களுக்குப் பணம் செலுத்தி, அவை ஆள்களை ஏற்றி இறக்கியிருந்தால் - ஒரு பஸ்ஸீக்கு 50 பேர் என்று பார்த்தாலும் - அந்தக் கூட்டத்துக்கு ஒரு லட்சம் பேர் வருகை தந்திருக்க வேண்டும். ஆனால், வெறும் நூற்பதாயிரம் பேர் தான் அங்கு கூடினர்.

எனினும் சு.கவின் கூட்டத்துக்கு வருகை தந்தோர் தொடர்பில் சில விடயங்கள் தென்னிலங்கை ஊடகங்களினால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

ஒன்று - அன்றைய தினம் பிற்பகலில் கண்டி கெட்டம்பே பிரதேசத்தில் மழை ஒரு தடவை அடித்துக் கொட்டியது. அதனால் கூட்டத்துக்கு ஆள்கள் வருவது பாதிக்கப்பட்டது.

இரண்டாவது - மஹிந்த ராஜபக்ஷவின் மே தினத்துக்குத் திரண்டவர்கள் பெரும்பாலும் பழைய சுதந்திரக் கட்சி உறுப்பினர்களே. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சு.க. வேட்பாளராகப் போட்டியிட்ட மஹிந்தவுக்கு ஆதரவாக வாக்களித்தவர்கள். அத் தேர்தலில் பூர்வீகமான சு.க. வாக்குகளில் ஐந்து வீதம் கூட மைத்திரிக்கு விழவில்லை. அப்படியிருக்கையில் இப்போது மைத்திரியின் கூட்டத்துக்கு இவ்வளவு எண்ணிக்கையில் சு.கவினர் வருகை தந்திருக்கின்றமை மைத்திரிக்கு ஒரு வெற்றியே என்கிறார்கள் அவர்களின் ஆதரவாளர்கள்.

ஆனால், இந்த மே தினக் கூட்டம் மூலம் மக்கள் ஒரு செய்தியை ஜனாதிபதி மைத்திரிக்கும் பிரதமர் ரணிலுக்கும் சொல்லி இருக்கிறார்கள்.

அது - உங்களுக்கு எதிரானவர் பலமடைகின்றார். இப்போதே உங்களுக்கு சவால் தயாராகி விட்டது. நீங்கள் பிரிந்து நிற்பீர்கள் ஆயின் இருவரின் நிலைமையும் அதோ கதி என்பது தான் அந்தச் செய்தி.

# பிரிக்கப்பட்ட வடக்கு, கிழக்கை மீள இணைக்க இடமளியோம்

### மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் தெரிவிப்பு



பிரிக்கப்பட்ட வடக்கு, கிழக்கை மீண்டும் இணைப்பதற்கு நாங்கள் ஒருபோதும் இடமளிக்கமாட்டோம் என்று மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தில் நேற்று முன்தினம் நடை பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

முஸ்லிம்களுக்கு தென்கிழக்கு அலகு இருக்கக் கூடாது என்பதில் தமிழர்கள் உறுதியாக இருக்க வேண்டும் என்று நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் மாகாண சபை உறுப்பினர் ஒருவர் அண்மையில் குறிப்பிட்டுள்ளார். இதன்மூலம் முஸ்லிம் வாக்குகளைப் பெற்று அரசியல் நடத்தும் நல்லாட்சி அரசு முஸ்லிம் சமூகத்துக்கு மிகப் பெரிய துரோகத்தை இழைத்துள்ளது.

இனி இவர்களுக்கு முஸ்லிம் சமூகத்தின் உரிமை பற்றி பேசுவதற்கு எந்த அருகதையும், அதிகாரமும் இல்லை. நாங்கள் ஒற்றுமைப்பட வேண்டும். அதன் ஊடாகவே எமது சமூகத்தின் பாதுகாப்பு தங்கியுள்ளது. அரசை மாற்றுவதன் ஊடாக மாத்திரம் எமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது.

நாங்கள் ஒன்றுபட்டு அதிகாரமுள்ள சமூகமாகச் செயற்பட்டால் மாத்திரமே நாங்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும்.-என்றார். (எ)

# எல்லை தாண்டி மீன்பிடிப்பதைத் தடுக்க இலங்கை நடுக்கடலில் பெயர்ப்பலகை

கொழும்பு, மே 08

தமிழக மீனவர்கள், இலங்கை கடல் எல்லைக்குள் வந்துவிடாமல் தடுப்பதற்காக, நடுக்கடலில் இலங்கை எல்லைப் பலகை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

தமிழக மீனவர்கள் எல்லைத் தாண்டி மீன்பிடித்தார்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்படுவதும் அவர்களுடைய படகுகள், கடற்படையினரால் பறிமுதல் செய்யப்படுவதும் என்று இருக்கும் தற்போதைய நிலையிலேயே, இந்த எல்லைப் பலகை வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை- இந்திய மீனவர்கள் பிரச்சினைக்கான தீர்வை, இரு நாட்டு அரசுகளும் இன்னும்பெற்றுக்கொடுக்கவில்லை. இதற்கான பேச்சு நடத்தப்பட்டு வந்த போதிலும், அதற்கான இறுதியான முடிவு எதுவும் இன்னும் எட்டப்படவில்லை.

எனினும், தங்களுக்கான கடல் எல்லை என்ன என்பது தெரியாமலதான், இந்திய மீனவர்கள் எல்லை தாண்டுகின்றார்கள் என்று தமிழக மீனவர்கள் கூறி வருகின்றனர்.

இந்தநிலையில், தமிழக மீனவர்கள் இலங்கைக் கடல் எல்லைக்குள் வந்துவிடாமல் தடுப்பதற்காக, நடுக்கடலில், எல்லைப் பலகை ஒன்றை, கடற்படையினர் வைத்துள்ளனர். இலங்கையிலிருந்து 5 ஆவதுமணல்திட்டில், இலங்கை தேசியக் கொடியுடன், இந்தப் பலகை வைக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே தனுஷ் கோடியிலிருந்து 5ஆவது மணல் திட்டில், இந்தியாவும் எல்லைப் பெயர்ப்பலகை வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

# கடந்த 3 மாதங்களுக்குள் வாகனப் பதிவுகள் அதிகரிப்பு

நாட்டின் வாகனப் பதிவுகள் கடந்த மூன்று மாதங்களுக்குள் பெரிய வளர்ச்சியைச் சந்தித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மார்ச் மாதம் மாத்திரம் 39 ஆயிரத்து 173 வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிள்களே இவற்றுள் அதிக வளர்ச்சியைக் காட்டியுள்ளன என்று குறிப்பிடப்படுகின்றது.

எனினும் மோட்டார் கார்கள் சற்று குறைவான அளவிலேயே வளர்ச்சியைக் காட்டியுள்ளது.

பெப்ரவரி மாதத்தினுள் புதிய மோட்டார் வாகனங்கள் 786 பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், அது இந்த மாதத்தினுள் 936 வரை அதிகரித்துள்ளது.

அத்துடன் பயன்படுத்துகின்ற மோட்டார் வாகனங்களின் பதிவுகளும் பெரியளவிலான வளர்ச்சியைக் காட்டியுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

பெப்ரவரி மாதத்தில் பதிவாகிய ஆயிரத்து 362 என்ற அளவுடன் ஒப்பிடும் போது அது 2 ஆயிரத்து 25 வரை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# முதலாம் ஆண்டுக்கான அனுமதியில் இனி பழைய மாணவருக்கான சலுகையில் வெட்டு

கொழும்பு, மே 08

பாடசாலைகளுக்கான முதலாம் ஆண்டு மாணவர் அனுமதியில் இதுவரை காலமும் பழைய மாணவர்களுக்கு வழங்கப்பட்ட சலுகையில் தற்போது வெட்டு விழுந்துள்ளது.

பாடசாலைகளுக்கு முதலாம் ஆண்டுக்கான மாணவர் அனுமதியின் போது இதுவரை காலமும் நடைமுறையில் இருந்த சுற்றறிக்கை கல்வி அமைச்சால் தற்போதைக்கு மறு சீரமைப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

இதன் ஒரு கட்டமாக முதலாம் ஆண்டுக்கான மாணவர் அனுமதியின்போது பாடசாலையின் பழைய மாணவர்களுக்கு வழங்கப்பட்ட 25 வீத அனுமதியை 20 வீதமாக குறைக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் வதிவிட அடிப்படையில் வழங்கப்படும் அனுமதியை 50 வீதத்திலிருந்து 55 வீதமாக அதிகரிக்கவும் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் பழைய மாணவர்களின் பிள்ளைகளுக்கான கோட்டா அனுமதியின் போதும் பாடசாலை அமைவிடத்திலிருந்து வதிவிடத்துக்கான தூரத்தின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கி பாடசாலைக்கான அனுமதியைப் பெற்றுக் கொடுக்கவும் குறித்த புதிய சுற்றறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

எனினும், கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் இதுவரை இந்தச் சுற்றறிக்கைக்கான அனுமதியை வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

### நாளை

09.05.2017
செவ்வாய்க்கிழமை

நட்சத்திரம் : சித்திரை மதியம் 12.44 வரை
திதி : சதுர்த்தசி பி.இ. 1.35 வரை

சுபநேரம் : 10.24 - 11.54 வரை
இராகுகாலம் : 2.54 - 4.24 வரை

## மகோற்சவங்கள்

கோப்பாய், மே 08

இருபாலை கோப்பாய் தென்கோவை கற்பகப் பிள்ளையார் தேவஸ்தான வருடாந்த மகோற் சவம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். (ச)

★★★

உடுவில் மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலய மகோற் சவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத் துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் முற்பகல் 11.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (ச)

★★★

புத்தூர் கிழக்கு தேரம்பிள்ளை சித்திவிநாயகர் ஆலய மகோற்சவம் கடந்த திங்கட்கிழமை கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

மகோற்சவத்தில் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ச)

★★★

ஆனைக்கோட்டை கரைப்பிரான் ஆதி விநாயகர் தேவஸ்தான மகோற்சவம் நாளைமறுதினம் புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத் துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் இடம்பெறும்.

எதிர்வரும் 21 ஆம் திகதி வேட்டைத்திருவிழா வும் 22 ஆம் திகதி பெரிய சப்பறத் திருவிழா வும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திரு விழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறவுள்ளது. (இ-54)

★★★

மானிப்பாய் வேலக்கைப் பிள்ளையார் ஆலயக் கொடியேற்றத்தைத் தொடர்ந்து நாளை மறுதினம் புதன்கிழமை சித்ரா பூரணை அன்று காலை தேர்த் திருவிழாவும், மாலை தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (ச)

# மோசடி மூலம் வாகன இறக்குமதி: பல கோடி ரூபா வருமான இழப்பு!

## சுங்கப் பிரிவின் உயர் அதிகாரி லஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு

கொழும்பு, மே 08

இலங்கைக்கு மோசடி யானமுறையில்கொண்டு வரப்பட்ட ஆயிரத்து 500 அதி சொகுசு வாகனங் களால் பெருந்தொகை வருமானம் இழக்கப்பட் டுள்ளதாக சுட்டிக்காட் டப்பட்டுள்ளது.

தயாரிப்புக்களின்பெறு மதியை குறைவாகக் காண்பித்து சுமார் ஆயி ரத்து 500 வாகனங்கள் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. இதன் மூலம் பல பில்லியன் ரூபா தீர்வை வரி மோசடி செய்யப்பட்டுள்ளது என சுங்கப் பிரிவின் உயர் அதி காரிலஞ்சஊழல்ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

2015ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட தாகக் கூறப்படும் இந்த மோசடி, அரசின்சிரேஷ்ட அரசி யல்வாதி ஒருவரின் தலையீட்டில் மேற்கொள் ளப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது. இந்த மோச டிக்காக ஜேர்மனியில் அந்த வாகனம் தயாரிக் கும் நிறுவனத்திடம் நேர டியாக இறக்குமதி செய் யாமல், பிறிதொரு நிறு வனத்தின் பெயரில் வாகனத்தின் உண்மை யான பெறுமதியை விட வும் குறைவாகக் குறிப் பிட்டு அந்த வாகனங்கள் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

தீர்வையற்ற வாகனங் கள் கொண்டு வருவதற் காக அரச அதிகாரிகளுக் குக் கிடைத்த சலுகைக ளின் கீழ் இந்த வாகனம் இறக்குமதி செய்துள் ள மையால் உரிய முறை யில் சுங்கப் பிரிவுக்குக் கிடைக்க வேண்டிய வரிப் பணம் கிடைக் காமல் போயுள்ளது என்று தகவல் வெளியாகியுள் ளது.

அரச ஊழியர்களின் தீர்வை வரி சலுகையின் கீழ் இந்த வாகனங்கள் கொண்டு வந்துள்ளபோதி லும், அரச சேவை இந்த வாகனம் கொண்டுவருவ தற்கு சம்பந்தப்பட வில்லை.

இதுதொடர்பில் சுங் கப் பிரிவு ரீதியில் விசா ரணைமுன்னெடுக்கப்பட் டுள்ளதாக தெரிவிக்கப்ப டுகின்றது. (எ)

## நல்லிணக்க கொள்கைக்கு அங்கீகாரம்; மகிழ்ச்சி வெளியிட்டார் சந்திரிகா!



தேசிய நல்லிணக்கம் தொடர்பான கொள்கைக்கு இலங்கையின் அமைச் சரவை அங்கீகாரம் வழங் கியுள்ளமைக்குமுன்னாள் ஜனாதிபதி சந்திரிகா வின் அலுவலகம், தமது மகிழ்ச்சியை வெளிப் படுத்தியுள்ளது.

ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனஇது தொடர் பான அமைச்சரவைப் பத்திரத்தை கடந்தவாரம் அமைச்சர் மனோ கணே சனின் அனுசரணையு டன் அமைச்சரவையில் சமர்ப் பித்திருந்தார்.

இந்தநிலையில் அந்த நகலுக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்தமை வரலாற்றுரீதியானவெற்றி என்று சந்திரிகாவின் தேசிய ஒற்றுமைக்கான அலுவலகம் தெரிவித் துள்ளது.

இந்த அலுவலகத்தின் தலைவராக சந்திரிகாவே செயற்படுகிறார். 2016 ஆண்டு இலங்கையின் பல்வேறு பொது அமைப் புக்கள் இணைந்து இந்த வரைபை இறுதிப்படுத் தின.

இந்தநிலையில் இது தேசிய நல்லிணக்க நட வடிக்கைகளுக்கு உறு துணை புரியும் என்று சந் திரிகா நம்பிக்கை வெளி யிட்டுள்ளார். (எ)

### இலங்கைவேந்தன் கலைக் கல்லூரி நடத்தும்

# இயல் இசை நாடக அரங்கு மாலைப்பொழுதில் 5 தினங்கள்!



யாழ்.நகர் நீராவியடியில் நாளாந்தம் 4.30 மணிக்கு

யாழ்ப்பாணம்,மே 08

யாழ்ப்பாணம், நீராவியடி கல்லூரி வீதி, இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் நாளை மறுதினம் 10 ஆம் திகதி புதன்கிழமை முதல் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை யான ஐந்து நாள்களும் மாலைப் பொழுதில் இயல் இசை நாடக அரங்க நிகழ்வுகள் இடம்பெறும்.

இலங்கைவேந்தன் கலைக் கல் லூரி - கலையரங்கத்தில் மாலை 4.30 மணிக்கு, நாளாந்தம் நிகழ் வுகள் ஆரம்பமாகும். அனுமதி இல வசம்.

நாளை மறுதினம் புதன்கிழமை- முதல் நாள் நிகழ்வு, கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் அ.பௌநந்தி தலைமையில் இடம் பெறும். பிரதம விருந்தினர் வலிகா மம் வலய ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர் நாட்டிய வாரிதி லீலாம் பிகை செல்வராஜா.

மங்கல இசை, வரவேற்பு நட னம், இசைக் கச்சேரியைத் தொடர்ந்து நாட்டிய அளிக்கை, கலைஞர்கள் கௌரவிப்பு இடம் பெறும். அதை அடுத்து வழக்காடு மன்றம். பொருள் "குற்றவாளிக் கூண்டில் இன்றைய இளைஞர்கள்". இறுதியாக பண் பாட்டு நடனங்கள்.

11 ஆம் திகதி வியாழன் - இரண்டாம் நாள் நிகழ்வு. யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் பா.பாலகணேசன் தலைமையில் இடம்பெறும். பிரதம விருந்தினர் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் ஆர்.விக்னேஸ் வரன்.

மங்கல இசை, கோலாட்டம், கவிதை மழை, இசை விருந்து, பறை இசை நடனம் நிருத்தியாஞ் சலியைத் தொடர்ந்து இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியினர் வழங்கும் நகைச்சுவை நாடகம் "மாமிக்கு வாச்ச மருமகன்" இடம் பெறும்.

கலைஞர்கள் கௌரவிப்பை அடுத்து நிறைவாக "நாவலர் இன்று இருந்திருந்தால்" வில்லிசை சிறப்பு நிகழ்வு இடம்பெறும்.

எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மூன்றாம் நாள் நிகழ்வு கோப்பாய் ஆசிரிய கலா சாலை பிரதி அதிபர் ச.லலீசன் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினர் யாழ். போதனா வைத்தியசாலை பொது வைத்திய நிபுணர் த.பேரானந்தராஜா.

மங்கல இசை, வரவேற்பு நடனம், இசை அரங்கம், நாட்டியாஞ் சலியைத் தொடர்ந்து, "வள்ளி திருமணம்" நாட்டிய நாடகம், கலைஞர்கள் கௌரவிப்பு இடம் பெறும்.

நிறைவாக குழந்தை ம.சண் முகலிங்கத்தின் "யாரோடு நோகேன்" நாடகம்.

எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை - நான்காம் நாள் நிகழ்வுக்கு யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட உதவிப் பதிவாளர் இ.சர்வேஸ்வரா தலைமை. பிரதம விருந்தினர் கிழக்குப் பல்கலைக் கழக துணை வேந்தர் பேராசிரியர் த.ஜெயசிங்கம்.

வழமை போன்று மங்கல இசை, நடனம், இசை அரங்கம், இசைக் கச்சேரி, நடனங்களின் பின்னர் கலைஞர்கள் கௌரவிப்பு.



நிறைவாக 'சவால்' நாடகம் இடம்பெறும்.

எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இறுதிநாள் நிகழ்வுக்கு கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் கு.பால ஷண்முகன் தலைமை. பிரதம விருந்தினர் யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவர் மருத்துவர் வை.யோகேஸ்வரன்.

மங்கல இசை, குழு நடனம், குரலிசை, நாட்டிய அர்ப்பணம், கலைஞர்கள் கௌரவிப்பு இடம் பெறும்.

நிகழ்வின்நிறைவாக 'எண்ணித் துணி' சிந்து நடைக் கூத்து இடம் பெறும்.

கலைஞர்கள், ரசிகர்கள், ஆர் வலர்கள் அனைவரையும் அழைக் கின்றனர் இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியினர். (இ)

காலைக்கதிர்



# 100 வீதமான மக்களுக்கு மின்சாரம் வழங்கிய பெருமை கிடைத்துள்ளது தெற்காசியாவில் இலங்கைக்கே!

தொப்பிகல,மே 08

தெற்காசியாவிலேயே சுமார் நூறு வீதமான மக்களுக்கு மின்சார வசதியை வழங்கியுள்ள ஒரேநாடு என்ற பெருமை இலங்கைக்குக் கிடைத்துள்ளது.

-இவ்வாறு மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் ரஞ்ஜித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

மட்டக்களப்பு - தொப்பிகல கோராவெளி பிரதேசத்திலுள்ள 72 குடியிருப்புக்களுக்கு புதிதாக மின் இணைப்பை வழங்கும் நிகழ்வில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை, பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதிகாரத்தைப் பொறுப்பேற்றபோது, நாட்டில் ஒரு லட்சத்து 76 ஆயிரம் குடியிருப்புக்களுக்கு மின்சாரம் வழங்கப்படாமல் இருந்தது. வீட்டின் அருகில் மின்கம்பங்கள் இருந்தபோதிலும் மின் இணைப்பைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் மக்கள் இருந்தனர்.



இவர்களுக்கு மின்சாரத்தைப் பெற்றுக் கொடுக்க வேண்டிய பொறுப்பை நாங்கள் ஏற்று வெற்றிகண்டிருக்கிறோம்.

**எரிசக்தி அமைச்சர் சியம்பலாபிட்டிய பெருமிதம்**

குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்தகால போர் மற்றும் அனர்த்தங்களால் வெகுவாகப் பாதிக்கப்பட்டு அடிப்படை வசதிகள்கூட இல்லாமல் வாழ்ந்த இப்பிரதேச மக்களுக்கு மின்சார வசதியைப் பெற்றுக்கொடுக்க சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

தற்போதைய அரசு ஆட்சிக்கு வரும்போது சுமார் ஐந்து லட்சம் மாணவர்கள் குப்பி விளக்குகளில் கல்வி கற்கும் நிலை காணப்பட்டது. மட்டக்களப்பு மாவட்டத்தில் 24 ஆயிரத்து 944 வீடுகளுக்கு மின்சார வசதி இல்லாமல் இருந்தது. தற்போது 99 வீதமானவர்களுக்கு மின்சார வசதி வழங்கப்பட்டுள்ளது.- என்றார்.(ச)






## சைட்டத்துக்கு எதிராக கல்முனையில் பேரணி!

கல்முனை,மே 08

மாலபே சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிர்ப்புத் தெரிவித்து அம்பாறை மாவட்ட மருத்துவ பீட மாணவர்கள் கல்முனையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை கண்டனப் பேரணி ஒன்றை முன்னெடுத்தனர்.

'சைட்டத்தை மூடு அல்லது நூறு வீதம் அரச உடைமையாக்கு' எனும் தொனிப்பொருளில் அம்பாறை மாவட்ட மருத்துவபீட மாணவர்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இந்தப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

இதில் மருத்துவபீட மாணவர்கள், அரச வைத்திய அதிகாரிகள் மற்றும் பல் மருத்துவர்கள், ஆயுர்வேத வைத்தியர்கள், தொழிற் சங்கப் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை முன்றலில் ஒன்றுகூடிய இவர்கள், பேரணியாக கல்முனை சந்தாங்கேணி ஐக்கிய விளையாட்டு மைதானத்தைச் சென்றடைந்தனர். அங்கு சைட்டத்துக்கு எதிராகப் பொதுக்கூட்டமும் நடத்தப்பட்டது. இதன்போது சைட்டத்துக்கு எதிரான துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன. (ச)

## அழிந்து போகும் அபாயத்தில் 10 ஆயிரம் ஏக்கர் நெற்செய்கை!

மட்டக்களப்பு,மே 08

மட்டக்களப்பு மாவட்டத்தின் வடக்கு எல்லைப் பகுதிகளிலுள்ள குளங்களுக்குச் செல்லும் நீரை, இம்முறை சட்டவிரோதமான முறையில் மறித்து விவசாயச் செய்கைக்குப் பயன்படுத்தியமையால், வாகனேரி மற்றும் புனாணை நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழுள்ள சுமார் 10 ஆயிரம் ஏக்கர் விவசாயச் செய்கைகள் கருகி அழியும் நிலைமை ஏற்பட்டுள்ளது என்று அப்பகுதி வாழ் விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

சிறுபோகச் செய்கைக்காக பொலன்னறுவை மாதுறு ஓயாக் குளத்திலிருந்து வாகனேரி மற்றும் புனாணைக் குளங்களுக்கு வருடாந்தம் நீர் கொண்டுவரப்பட்டு, விவசாயச் செய்கை மேற் கொள்ளப்படுகின்றது. மாதுறு ஓயாக் குளத்திலிருந்து வாகனேரிக் குளத்துக்குக் கொண்டுவரப்பட்ட நீரை, இம்முறை புனாணை மேற்கு மற்றும் மயிலந்தனைப் பகுதிகளில் சட்டவிரோதமாக மறித்து அப்பகுதிகளில் வேளாண்மைச் செய்கை மேற்கொள்ளப்படுகின்றது.

மாதுறுஓயாக் குளத்திலிருந்து இம்முறை திறக்கப்பட்ட 16 ஆயிரம் ஏக்கர் கன அடி நீர், மயிலந்தனையில் கடந்த வெள்ளிக்கிழமை மறிக்கப்பட்டமையால், விலாலோடை அணை உடைப்பெடுத்து நீர் கடலுக்குச் செல்லும் அபாய நிலைமை ஏற்பட்டது. இதனை அடுத்து, இராணுவத்தினரின் உதவியுடன் மயிலந்தனையில் அமைக்கப்பட்ட சட்டவிரோதத் தடுப்பு அணையை விவசாய அமைப்புகள் அகற்றி, வாகனேரிக் குளத்துக்கான நீரைக் கொண்டுசெல்ல நடவடிக்கை எடுத்துள்ளன. இந் நிலையில், உடைப்பெடுத்த விலாலோடை அணையை திருத்தியமைக்கும் பணியும் நேற்று விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்டது.



வாகனேரி, புனாணை விவசாயிகள் கவலை



மாதுறுஓயாக் குளத்திலிருந்து 16 ஆயிரம் ஏக்கர் கன அடி நீர் மூலம் வாகனேரித் திட்டத்தின் கீழ் 8 ஆயிரத்து 456 ஏக்கரிலும், புனாணைத் திட்டத்தின் கீழ் ஆயிரத்து 565 ஏக்கரிலும் இம்முறை சிறுபோகச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## ஆள்மாறாட்டம் செய்தவருக்கு 5 மாதச் சிறை!

திருகோணமலை நீதிமன்றில், ஆள்மாறாட்டம் செய்த குற்றச்சாட்டின் பேரில், இளைஞன் ஒருவருக்கு, ஐந்து மாதங்கள் கட்டாயச் சிறைத் தண்டனை விதித்து, திருகோணமலை நீதிமன்ற நீதிவான் எம்.எச்.எம். ஹம்ஸா உத்தரவிட்டார்.

கிண்ணியா பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞனுக்கே தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சாராய வழக்கு ஒன்றில் வழக்கின் எதிராளி வெளிநாடு சென்ற நிலையில், மேற்படி வழக்கு நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது, எதிராளியை வழக்கு பெயர் கூறி அழைக்கும்போது பிரஸ்தாப இளைஞன் நீதிவான் முன்னிலையில் ஆஜரானார்.

பின்னர் பொலிஸார் இந்த வழக்கின் எதிராளி இவர் இல்லை என நீதிவானின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர். (ச)

## திருமலை வளாகத்தில் தொல்பொருள் காட்சிப்படுத்தல்!

கிழக்குப் பல்கலைக் கழகத்தின் திருகோணமலை வளாகத்தில் தொல்பொருள்களைக் காட்சிப்படுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந் நிலையில், தொல்பொருள்கள் மற்றும் ஆவணங்களைத் தந்துதவுமாறு பொதுமக்களிடம் திருகோணமலை வளாக முதல்வர் வல்லிபுரம் கனகசிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேற்படி வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டடத்தொகுதி இம்மாதம் 19 ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது.

## மாயக்கல்லிமலை விவகாரம் ஜனாதிபதியின் கவனத்துக்கு!

ஹபரணை, மே 08

கிழக்கில் பூதாகரமாக வெடித்துள்ள இறக்காமம் மாயக்கல்லி மலை விவகாரம் தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

ஹபரணையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற அனைத்து மாகாண முதலமைச்சர்களின் 33 ஆவது வருடாந்த மாநாட்டின்போது ஜனாதிபதியை பிரத்தியேகமாகச் சந்தித்த கிழக்கு மாகாண முதலமைச்சர் நஸீர் அஹமட் இது தொடர்பில் அவருடன் கலந்துரையாடி உள்ளார்.



மாயக்கல்லி மலையில் சிலை வைக்கப்பட்டுள்ளமை மற்றும் அங்கு சிறுபான்மையினரின் காணிகளில் அத்துமீற முன்னெடுக்கப்படும் முஸ்தீபுகள் தொடர்பில் இதன்போது ஜனாதிபதியிடம் எடுத்துரைத்தார் முதலமைச்சர்.

மேலும், இது தொடர்பில் இறக்காமம் சிவில் சமூக பிரதிநிதிகளால் கையளிக்கப்பட்ட ஆவணங்களையும் ஜனாதிபதியிடம் கிழக்கு மாகாண முதலமைச்சர் கையளித்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் 4 ஆயிரத்து 784 ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேசிய முகாமைத்துவ திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அனுமதி மற்றும் அது தொடர்பான விரிவான தரவுகள் அடங்கிய ஆவணங்களையும் அவர் ஜனாதிபதியிடம் கையளித்து, அதற்கான நிதியை துரித கதியில் பெற்றுத்தர உத்தரவிடுமாறு வேண்டுகோள் விடுத்தார். (ச)

# மீண்டும் விடுதலைப் புலிகள்; அச்சத்தில் இந்தியா, இலங்கை!

## சிங்கள ஊடகம் கூறுகிறது

கொழும்பு, மே 08

இறுதிக்கட்ட போரின் போது வெளிநாடுகளுக்குத் தப்பி சென்ற விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்கள் பலர் தற்போது இலங்கை வருகின்றனர் என்று சிங்கள ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் புலனாய்வு மற்றும் ஆயுதப் படை தலைவர்கள் உட்பட புலி உறுப்பினர்கள் மீண்டும் இலங்கைக்கு வருகை தருகின்றனர் என்று இந்திய உளவுத்துறை, இலங்கை அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

விடுதலை புலிகள் அமைப்பின் புலனாய்வுப் பிரிவு பிரதானியாகச் செயற்பட்ட ஜெயந்தன் எனப்படும் மோகனதாஸ் அண்மையில் மன்னார் வந்து சென்றார் என்று தகவல் வெளியிடப் பட்டிருந்தது.

இந்தியாவில் இருந்து மீனவப் படகு மூலம் ஜெயந்தன் மன்னார் வெடிகல்தீவு ஊடாக இலங்கைக்கு வருகைதந்துள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

இறுதிக்கட்டப்போரின் போது புதுமாத்தளனிலிருந்து கடல் வழியாக இந்தியாவுக்குத் தப்பி சென்ற ஜெயந்தன் பின்னர் லண்டன் சென்றுள்ளார் எனவும், அந்த நாள்களில் புலனாய்வுப் பிரிவினர் கண்டுபிடித்திருந்தனர்.

ஜெயந்தன் இதுவரையிலும் இலங்கையைவிட்டு வெளியே செல்லவில்லை எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இவர் தங்கியிருக்கும் இடத்தைக் கண்டுபிடிப்பதற்காக தற்போது புலனாய்வுப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்நிலையில், கடந்த வாரம் பாதுகாப்புச்சபைக்கூட்டத்தில் இந்தியாவின் அறிவிப்பு மற்றும் ஜெயந்தனின் வருகை தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது எனவும் அந்தச் சிங்கள ஊடகம் மேலும் தகவல் வெளியிட்டுள்ளது.

# ஐரோப்பாவை தன்வசப்படுத்த ஜனாதிபதி புதிய நடவடிக்கை!



கொழும்பு, மே 08

உலகின் பலமான நாடுகளுக்கு புதிய ராஜாதந்திரத் தூது வர்களை நியமிப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்மானித்துள்ளார் என்று ஜனாதிபதி செயலகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய இலங்கைக்கு முக்கியமான ஐரோப்பாவின் பிரதான நாடுகளுக்கு புதிய தூதுவர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

ஜேர்மனின் இலங்கைக்கான தூதுவராக பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சியும், பிரான்ஸ் தூதுவராக புத்தி அதாவுத என்பவரையும் பெயரிடுமாறு ஜனாதிபதி, வெளிவிவகார அமைச்சிற்கு உத்தரவிட்டுள்ளார் என்றும் அந்தப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய பிரான்ஸின் இலங்கைத் தூதுவர் திலக் ரண விராஜா மற்றும் ஜேர்மனியின் இலங்கைத் தூதுவரான கருணாதிலக்க அமுனுகமவும் இலங்கைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

கருணாசேன ஹெட்டியாராச்சி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பாடசாலை நண்பர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், முன்னாள் அமைச்சர் அதாவுத செனவிரத்னவின் மகன் புத்தி அதாவுத என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் பங்கு கொள்வனவில் இருந்து விலகியது அமெரிக்க நிறுவனம்!




ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்தின் பங்குகளை கொள்வனவு செய்யும் முயற்சியில் ஈடுபட்டிருந்த அமெரிக்க நிறுவனம் ஒன்று அந்த முயற்சியில் இருந்து விலகிக்கொண்டமையை அடுத்து, புதிய பங்கு கொள்வனவாளர் ஒருவரைத் தேடும் பணி ஆரம்பமாகியுள்ளது.

49 வீத பங்கு கொள்வனவுக்குத் தயாராக இருந்த சன் பிரான்சிஸ்கோவின் டிபிஜி என்ற நிறுவனமே தமது முயற்சியில் இருந்து விலகியுள்ளது.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் இதனை அறிவித்துள்ள போதும் டிபிஜி நிறுவனம் இன்னும் அது தொடர்பில் கருத்து எதனையும் வெளி யிடவில்லை.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் ஏற்கனவே 200 கோடி டொலர்கள் நட்டத்தில் இயங்குகிறது என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தநிலையில், எமிரேட்ஸ் நிறுவனத்துடன் பேச்சு நடத்தப்படுகிறது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனினும், இது தொடர்பில் எமிரேட்ஸ் நிறுவனம் இன்னும் தகவல் வெளியிடவில்லை.

ஏற்கனவே, எமிரேட்ஸ் நிறுவனத்தின் கொள்வனவின் கீழ் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் இலாபமான நிறுவனமாக செயற்பட்டபோதும் 2008ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடனான தனிப்பட்ட குரோதம் காரணமாக அதனுடனான உடன்படிக்கை ரத்துச்செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# தமிழக எல்லைக்குள் நுழைந்த சீனக் கப்பல்!

## விளக்கம் கூறுகிறது இலங்கைக் கடற்படை!

கொழும்பு, மே 08

இந்தியக் கடல் எல்லைக்குள் நுழைய முயன்ற சீனக் கப்பல் இந்திய கடலோரக் காவற்படையினரால் விரட்டியடிக்கப்பட்டது.

தற்போது இதற்கான காரணத்தை இலங்கைக் கடற்படை தெரிவித்துள்ளது என்று இந்திய ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

அடையாளம் தெரியாத சீனக் கப்பல் ஒன்று மர்மமான முறையில் இந்திய எல்லைக்குள் நேற்று காலை நுழைய முயன்றது. தமிழகம் வழியாக நுழைய முயன்ற இந்த கப்பலை இந்தியக் கடலோரக் காவற்படையினர் விரட்டியடித்துள்ளனர்.

அடையாளம் தெரியாத சீனக் கப்பல் மீது இந்தியப் படையினர் துப்பாக்கிச்சூடு நடத்தி அங்கிருந்து சீனக்கப்பல் விரட்டப்பட்டுள்ளது.

இது குறித்து எந்த அதிகார பூர்வத் தகவலையும் இந்தியக் கடலோரக் காவற்படையினர் இதுவரையில் வெளியிடவில்லை என்ற நிலையில் இலங்கை விளக்கமளித்துள்ளது.

கன்னியாகுமரி வழியாக இந்தியக் கடலில் கொழும்பிலிருந்து கோவாவுக்கு பழுது பார்க்க சீனக் கப்பல் கடந்து சென்றது என இலங்கை விளக்கமளித்துள்ளது.

இந்தியக் கடற்படையினரின் சமிக்ஞைக்கு சரியான முறையில் பதில் வராததால் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சுகாதார சேவைகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் பொய்யான பிரசாரம் குறித்து முறைப்பாடு

கொழும்பு, மே 08

சுகாதார சேவைகளுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் பொய்யான பிரசாரங்களை பரப்பும் சமூக வலைத் தளங்கள் தொடர்பில் சுகாதார அமைச்சால் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இரவு வேளைகளில் சுகாதார அதிகாரிகள் என்று கூறிக் கொண்டு சிலர் இரத்த மாதிரிகளைப் பெறுவது போன்று எயிட்ஸ் நோயைப் பரப்புவதாக, சில சமூக வலைத்தளங்களில் ஆதாரமற்ற செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஜெயசுந்தர பண்டார சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கமைய, அமைச்சர் ராஜித சேனாரத்னவின் பணிப்புரைக்கு அமைய, இது தொடர்பில் விசாரணை செய்யுமாறு முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

# நீதிமன்றம் செல்லப் போகிறோம்; கூட்டு எதிர்க்கட்சியினர் எச்சரிக்கை!

கொழும்பு, மே 08

கட்சியில் இருந்து விலக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால் நீதிமன்றம் செல்லப் போகிறோம் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் உறுப்பினர்களான கூட்டு எதிர்க்கட்சியினர் எச்சரித்துள்ளனர்.

தம்மைக் கட்சியில் இருந்து நீக்க எவ்வித அதிகாரமும் தலைமைக்கு இல்லை என்றும் நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

கூட்டு எதிர்க்கட்சியின் மே தின நிகழ்வில் பங்கேற்றமை தொடர்பில் டலஸ் அழகப்பெரும உள்ளிட்டோர் கட்சியில் இருந்து நீக்கப்படுவர் என்று முன்னதாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமை எச்சரித்திருந்தது.

எனினும் இது தொடர்பில் தமக்குத் தகவல் எவையும் கிடைக்கவில்லை என்று அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டால், நீதிமன்ற நடவடிக்கைக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்படும் என்று அவர் எச்சரித்துள்ளார்.

# மஹிந்தவைச் சந்தித்தனர் மூன்று அரபு நாடுகளின் தூதுவர்கள்!

கொழும்பு, மே 08

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை முக்கியமான மூன்று அரபு நாட்டுத் தூதுவர்கள் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சந்திப்பில் இலங்கையில் ஐரோப்பா மற்றும் அமெரிக்கா, இஸ்ரேல் ஆகிய நாடுகளின் ஆதிக்கம் அதிகரித்துள்ளமை தொடர்பிலும் மஹிந்த ராஜபக்ஷவின் எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கொழும்பு ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கையுடன் மிக நெருக்கமாக இருந்து தற்போது நல்லாட்சியால் சற்று தூரமாக்கப்பட்டுள்ளதும் யுத்தத்தின் போது இலங்கைக்கு பலவிதத்திலும் உதவிய ஒரு முஸ்லிம் நாட்டுத் தூதுவரும் மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்துள்ளார்.

இதேவேளை, மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் ஐ.நா வாக்கெடுப்புகள் உள்ளிட்ட பல் விடயங்களில் அரபு நாடுகள் இலங்கைக்கு ஆதரவாக செயற்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

## தேரவாத பௌத்த நாடுகளின் ஒன்றிணைந்த அமைப்பு அவசியம்

### வலியுறுத்துகிறார் வண. தம்மாவாசதேரர்

தேரவாத பௌத்த நாடுகளின் ஒன்றிணைந்த அரச மட்டத்திலான அமைப்பு ஒன்று அமைக்கப்படவேண்டுமென்று அக்ஹமஹா பண்டித சங்கைக்குரிய கொட்டுகொட தம்மாவாச தேரர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் வெசாக் தின நிகழ்வுகு அமைவாக இலங்கை இதனை முன்னின்றுஅமைப்பதன்தேவையை அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பில் அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இவ்வாறான ஓர் அமைப்பை உருவாக்குவதன் மூலம் உலகத்திற்கு பணியாற்றக்கூடிய ஆற்றல் கிடைக்கும். அதேபோன்று அத்தியாவசிய சந்தர்ப்பங்களில் பௌத்த நாடுகளுக்கு இடையில் அந்நியோன்ய புரிந்துணர்வை ஏற்படுத்த முடியும்.

இந்த நாடுகளுக்கு இடையிலான மக்கள் மத்தியில் நாட்டின் வரலாறு குறித்து தெளிவுபடுத்துவதற்கான வேலைத் திட்டத்தை ஏற்படுத்த வேண்டும். இதன் மூலம் உறவுகளை மேம்படுத்த முடியும். பிரச்சினைகள் பலவற்றுக்கு தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.-என்றார்.

## பலவீன பொருளாதார முகாமைத்துவம்; அரசின் நிதி நெருக்கடிக்குக் காரணமாம்

### மத்திய வங்கி முன்னாள் ஆளுநர் தெரிவிப்பு

கொழும்பு, மே 08

அரசின் பலவீனமான பொருளாதார முகாமைத்துவத்தின் காரணமாக நாட்டில் நிதி நெருக்கடி ஏற்படும் அபாயம் உள்ளதாக மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நாட்டில் பணத்தை அச்சிடுவது பெரியளவில் அதிகரித்துள்ளது. பொருள்களின் விலைகளும் அதிகரித்துள்ளன. இவற்றின் விளைவுகளை இன்னும் சில வருடங்களில் எம்மால் அறிந்து கொள்ள முடியும்.

வெளிநாடுகளுக்கு நாம் செலுத்த வேண்டிய குறுகிய கால கடன்களிலிருந்து நூற்றுக்கு 25 சதவீதம் எம்மால் மீளக்கூடிய நிலைமை கடந்த காலத்தில் இருந்தது. ஆனால், தற் போது அந்த நிலைமை நூற்றுக்கு 74 வீதத்துக்கு குறைந்துள்ளது.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு திசையை நோக்கிப் பயணிக்கின்றனர். இதனால், நாட்டின் பொருளாதாரத்துக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.-என்றார். (எ)

## தினசரி ராசி பலன் 08.05.2017

ஏவிளம்பி வருஷம் 2017 ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் 25 ஆம் நாள் திரயோதசித்திதி இரவு 11.16 வரை. பின்னர் சதுர்த்தசி. நட்சத்திரம்: அத்தம் காலை 9.43 வரை. பின்னர் சித்திரை. சித்தயோகம் காலை 9.43 வரை. பின்னர் அசுபயோகம். ராகுகாலம்: காலை 7.26 முதல் 8.59 வரை. சுபநேரம்: பகல் 11.52 முதல் 1.22 வரை. இன்று பிரதோச விரதம் ஆகும். திவசம் செய்யவேண்டிய திதி: சித்திரைமாத வளர்பிறை திரயோதசி. பிறந்த நட்சத்திர வழிபாடு: சித்திரை.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்:** நன்மையான நாள். வியாபாரத்தில் வளர்ச்சியும், லாபமும் அதிகரிக்கும். பகைவர்களும் நண்பர்களாக மாறி உதவிகளைச் செய்வார்கள். மகான் தரிசனம், ஸ்தலயாத்திரை அமையும். கொடுக்கல், வாங்கலில் திருப்தி ஏற்படும்.

**ரிஷபம்:** மேன்மையான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும். செய்யும் தொழிலில் மேன்மை உண்டாகும். உத்தியோக உயர்வுகள் கிடைக்கும்.

**மிதுனம்:** சலனம் மிகுந்த நாள். பணவரவு குறையும். மனதில் குழப்பம், யோசனை, பயம் அதிகரிக்கும். உறவினர்கள், நண்பர்களின் உதவி குறையும். வியாபாரம் மந்த கதியில் இயங்கும்.

**கடகம்:** சம பலன்கள் காணப்படுகின்றன. வரவுக்கு மீறிய செலவுகள் உண்டாகும். வியாபாரத்தில் மத்திம லாபம் கிடைக்கும். தொழிலில் பிரயாசையும் அலைச்சலும் அதிகமாகும்.

**சிம்மம்:** அதிஷ்டமான நாள். வியாபாரத்தில் கணிசமான லாபம் கிடைக்கும். தாய்வழிச் சொத்துகள் வந்து சேரும். சகோதர வழியால் எதிர்பாரா வகையில் மிகப் பெரிய நன்மை கிடைக்கும்.

**கன்னி:** அனுகூலமான நாள். எடுக்கும் முயற்சிகள் வெற்றியடையும். வியாபாரம் விறுவிறுப்பாக நடக்கும். சிலருக்கு திட்டமிட்ட வெளியூர்ப்பயணம் அனுகூலமாகும்.

**துலாம்:** யோசனையான நாள். செலவைச் சமாளிக்க முடியாமல் தடுமாறுவார்கள். தொழிலில் கவனம் தேவை. மறைமுக எதிரிகளால் தொல்லைகள் உண்டாகும். அலைச்சல்கள் அதிகமாகும்.

**விருச்சிகம்:** அதிஷ்டமான நாள். தனலாபம் பெருகும். குடும்பத்தில் எல்லையற்ற மகிழ்ச்சி காணப்படும். சிலருக்கு அரசு வழியால் காணி, வீடு கிட்டும். கொடுக்கல், வாங்கலில் சுமுகநிலை உண்டாகும்.

**தனுசு:** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். செலவினங்கள் அதிகரிக்கும். தொழிலில் பிரயாசை அதிகமாகும்.

**மகரம்:** சுபீட்சமான நாள். பணபலம் அதிகரிக்கும். குடும்பத்தில் சந்தோஷ மிகுதியால் சுபீட்சம் உண்டாகும். பிரிந்தவர்கள் ஒன்று சேர்வார்கள்.

**கும்பம்:** அலைச்சல் மிகுந்த நாள். கடன் வாங்க அலைவார்கள். தொழில் ரீதியான அலைச்சல்கள் உண்டாகும். சிலர் வேலை தேடி அலைவார்கள்.

**மீனம்:** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. எண்ணிய காரியம் தடை, தாமதம் ஏற்படும். புதிய முயற்சியைத் தவிர்ப்பது நல்லது. வியாபாரம் ஏறு, இறங்கு முகமாக நடக்கும்.

சந்திராட்டமநாள்: அவிட்டம் 3, 4, சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்களில் பிறந்தோர் சுபகருமங்கள் மேற்கொள்வதை இன்று தவிர்க்கவும்.

## இலங்கை அரசு வரி வருமானத்தை அதிகரிக்க வேண்டியது அவசியம்

### உலக வங்கியின் உப தலைவர் கருத்து



இலங்கை அரசின் வரி வருமானத்தை அதிகரிக்க வேண்டியது அவசியம் என்று உலக வங்கியின் உப தலைவர் டான் வில்சர் வலியுறுத்தினார்.

இரண்டு நாள் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கைக்கு வருகைதந்த அவர் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போது இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையின் நிதி நிலைமை மிகவும் அபாயகரமான நிலையில் உள்ளது. நிகர தேசிய வருமானத்தின் வீதத்துக்கு அமைய 10 வீத வரி வருமானமே உள்ளதால், அரசு வரி வருமானத்தை அதிகரிக்க வேண்டும்.

வேலைவாய்ப்புக்களை உருவாக்கும் முதலீடுகளை மேற்கொள்வதுடன் தொழில் புரிபவர்களின் வருமானத்தை அதிகரிப்பதை முதலீடுகளினூடாக மேற்கொள்ள வேண்டும்.

மேலும், உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்து, வெளிநாட்டு முதலீடுகளுக்கான சூழலை உருவாக்குவதன் மூலம் இந்த இலக்குகளைச் சாத்தியப்படுத்திக்கொள்ள முடியும்.-என்றார். (எ)

## அனைத்து மாவட்டங்களிலும் முதியோர் பராமரிப்பு அலகு

### அமைக்கப்படும் என்கிறார் ராஜித

சகல மாவட்டங்களிலும் முதியோர் பராமரிப்பு அலகுகளை அமைப்பதற்கு சுகாதார போஷாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் டொக்டர் ராஜித சேனாரத்ன தீர்மானித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையின்சனத்தொகையில் வயது முதிர்ந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதனால் அவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த தீர்மானத்துக்கு அமைவாக உலகவங்கி, ஜெய்க்கா நிறுவனம் ஆகியவற்றின் துணையுடன் தலங்கம அரச மருத்துவமனையை அபிவிருத்தி செய்து முதியோர் பராமரிப்பு அலகை நிறுவநடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இதற்கு மேல் மாகாண சபையின் அங்கீகாரமும் கிடைத்துள்ளது.

சுகாதார அமைச்சர் தலைமையில் சமீபத்தில் இடம்பெற்ற மாகாண மட்ட சுகாதார மாநாட்டில் இது பற்றிய தகவல் வெளியிடப்பட்டன. நாட்டிலுள்ள சகல வைத்தியசாலைகளிலும் மலசல கழிவுத் தொகுதியை உரிய முறையில் பேணும் திட்டம் தொடர்பில் இணக்கம் காணப்பட்டது.

மாத்தளை, தம்புள்ள வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.-என்றார்.

## ஒற்றை மின் வழியைப் பயன்படுத்தும் நுகர்வோர்களுக்கு நேர அடிப்படையில் வரித்தீர்வை கட்டண முறைக்கு அனுமதி!

இலங்கையின் மின்சாரத் தொழிற்றுறை ஒழுங்குறுத்துநரான இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, ஒற்றை மின்வழியைப் பயன்படுத்தும் உள்நாட்டு மின் நுகர்வோருக்கு நேர அடிப்படையிலான வரித்தீர்வைக் கட்டண முறையை அனுமதித்துள்ளது.

இதற்கு முன்னர் இந்த முறை மூன்று மின்வழி இணைப்புகளைக் கொண்ட மற்றும் 30 ஏ மற்றும் அதற்கு அதிகமாக மின் நுகர்கின்ற நுகர்வோர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த வசதியைத் தெரிவு செய்யும் அல்லது நிராகரிக்கும் வாய்ப்பு நுகர்வோரிடமே வழங்கப்பட்டுள்ளது. மின் நுகர்வோரின் கோரிக்கையின் அடிப்படையிலேயே இந்த வசதி செயற்படுத்தப்படும்.

இந்த முறைமை அமுலாக்கத்தின் பிரதான நோக்கம். உச்ச நேரப் பகுதியின் போது பயன்படுத்தப்படும் மின்சார அளவை குறைப்பது மட்டுமல்லாது உச்சமற்ற நேரப் பகுதியின் போது மின்சாரத்தைப் பயன்படுத்துவதை ஊக்குவித்தலாகும். உச்சநேரப் பகுதியின் போது செய்யப்பட்டு வரும் பல மின் பயன்பாடுகள், உண்மையில் உச்சமற்ற நேரப் பகுதியில் செய்யக் கூடியவையே. சரியாகத்திட்டமிட்டு உச்சமற்ற நேரப் பகுதியில் மின் பயன்பாட்டை நுகர்வோர்கள் மேற்கொள்வது நன்மை பயப்பதாகும்.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமான தம்மித்த குமாரசிங்க.-

''இந்த உலகம் சக்தியை சுத்தமாகவும் வினைத் திறனாகவும் பயன்படுத்துவதை நோக்கி நகர்கின்றது. எம்மில் பலர், சக்தி வினைத்திறன் மற்றும் சுற்றுச் சூழலுக்கு நட்பு என்ற காரணிகளால், மின்சாரத்தில் இயங்கும் வாகனங்களை வாங்குவதற்கு விரும்புகின்ற காலம் இப்போது வந்துள்ளது.

இந்தப் புதிய வரித்தீர்வைக் கட்டண முறைமை மின்சார வாகனப் பயன்பாட்டாளர்கள் தங்கள் மின் வாகனங்களை குறைந்த செலவில் மின்னேற்றம் செய்து கொள்ள முடியும்''.-என்றார்.

இலங்கையில் மின்சார வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிப்பதும் அவற்றை மின்னேற்று வதற்காக மின் வழங்கலின் உச்ச நேரப்பகுதி பயன்படுவதும் அவதானிக்கப்பட்டதன் வாயிலாகவே இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது.

# முள்ளிவாய்க்கால்

நான் அண்மையில் வன்னிப் பிரதேசத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்வில் உரையாற்றும் போது முள்ளிவாய்க்கால் நினைவு கூரலை அரசியலாக்காதீர்கள் என்று விநயமாகக் கேட்டுக்கொண்டது பல அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. அது திரிவுபடுத்தப்பட்ட பிழையான கண்ணோட்டத்தில் எடுத்துக்கொள்ளப் பட்டதால் இந்தக் கட்டுரையை வரைய வேண்டிய தேவை எனக்கு ஏற்பட்டுள்ளது.

## நினைவுகூர்தலும் சமூக குணமாதலும்



மனநல மருத்துவ நிபுணர் எஸ். சிவதாஸ்

### நேற்றைய தொடர்ச்சி...

முதலாவது முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு பல வழிகளிலும் தடுத்து நிறுத்தப்பட்டது. நல்லூரில் மே 17 இல் மேற்கொள்ளப்பட்ட நினைவு கூரல் அரச இயந்திரத்தினால் தடுக்கப்பட்டு பலா் விசாரிக்கப்பட்டனர். ஆனாலும் நடைபெற்ற சிறிய நினைவேந்தல்நிகழ்வு ஒருவித இணைப்பினை ஏற் படுத்தியது என்றால் மிகையாகாது. வவுனியாவில் மே21இல் நடைபெற்ற இத்தகைய நிகழ்வானது தென்பகுதி இனவாத பத்திரிகைகளால் ஒரு பயங்கரவாதச் செயற்பாடாக காட்டப்பட்டு பலர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். அது ஒரு சாதாரண அமைப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்ட நினைவுகூரல் மட்டுமே. இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்கள் கலந்து கொண்ட பொழுதிலும் பெருமளவு மக்கள் கலந்து கொள்ளாமைக்கு அன்றைய சூழ்நிலை காரணமாக அமைந்திருந்தது. அத்துடன் மீள்குடியேற்றம் பெருமளவில் நடைபெற்றுக்கொண்டிருந்ததால் பெரும் எடுப்பில் அதனை மேற்கொள்ளமுடியவில்லை. வெறுமனே அது ஒரு குறியீட்டு நிகழ்வாகவே அமைந்திருந்தது.

அதனை அடுத்துவந்த இரு ஆண்டுகளிலும் பொது மக்கள் தங்கள் வீடுகளில் அந்த நினைவுகூரலை மேற்கொண்டனர். பல இடங்களில் இராணுவத்தினரால் விசாரிக்கப்பட்டபோதும் அதனைத் தங்கள் உரிமை என வாதிட்டு பல இடங்களில் குறிப்பாக வன்னிப்பிரதேசத்தில் மக்கள் இத்துயர நினைவுகளைநினைவேந்தல்மூலம் மேற்கொண்டனர். அப்பொழுது பெரியளவில் அரசியல் வாதிகளின் தலையீடு இடம்பெறவில்லை. புலம்பெயர்ந்த நாடுகளில் நடத்தப்பட்ட நினைவுகூரல் நிகழ்வுகள் மக்களின் மனதில் காயங்கள், வடுக்களை ஆற்றிட உதவிற்று என்றால் மிகையாகாது. அது ஒரு கூட்டு மனநிலையையும் ஏற்படுத்தியிருந்தது.

இதன்பின்னர் நான்காவது நினைவுகூரலில் அரசியல்வாதிகள் தங்களின் மேலாண்மையைக் காட்டத்தொடங்கினர். அதிலும் முரண்பட்டு நிற்கின்ற அரசியல்தலைமைகள்போட்டிபோட்டுக் கொண்டு திருவிழாக்களை நடத்தும் கோயில் தர்மகர்த்தாக்களைப் போன்று செயற்பட்டனர். வவுனியாவில் மேற்கொள்ளப்பட்ட நினைவு கூரலில் ஒரு அரசியல் அமைப்பு இறுதிப் போரின் போது எடுக்கப்பட்ட ஒளிப்படங்களைக் காட்சிப்படுத்தியதால் பலர் ஒருவித ?ாதி நிலைக்குச் சென்று சம்பவங்களின் மீள் நினைவுகளால் பாதிக்கப்பட்டு அதில் ஒருசிலர் மனநலமருத்துவப் பிரிவில் அனுமதிக்கப்பட்டனர். எந்தவிதமான திட்டமிடலும் இல்லாமல் உணர்வுபூர்வமான நோக்கமும் இல்லாமல் செயற்பட்டதால் பாதிப்புக்கள் ஏற்பட்டன. இதன் தொடர்ச்சியாக மாகாணசபையின் உருவாக்கத்துடன் இன்னொருவிதமான சுடரேற்றும் நாடகம் அரங்கேறிற்று. காவல்துறையின் பாதுகாப்பில் வந்து இதனைச் செய்தனர். முதலமைச்சரும் மாகாணசபை உறுப்பினர்களும் பொது மக்களின் பங்களிப்புக்கள் பெருமளவில் இல்லாது இதனைச் செய்தனர். அதன் ஒளிப்படங்கள் கிளர்ச்சியூட்டுவதாக அமைந்தமையுடன்அவை சமூக வலைத் தளங்கள் மூலம் உலகெங்கும் பரப்பப்பட்டன. இதனால் புலம்பெயர்ந்தவர்கள் பலரும் பெருமிதம் கொண்டு மகிழ்வுற்றனர். இதனால் மனக்காயங்கள் ஆற்றிடக் கூடியதான செயற்பாடுகள் பெருமளவில் எதுவுமே நடைபெறவில்லை.

அதேவேளை மக்களே தங்களது உறவுகளைத் தேடிக்கொண்டும் அன்றாட வாழ்க்கைக்கு அல்லற்பட்டு கடனாளியாக ஆக்கப்பட்டு துயருற்று வாழத் தொடங்கினர். வீடுகளைக் கட்டி வயல்களைத் துப்புரவு செய்து மெல்ல வாழத் தொடங்கினர். வேறு எந்த மார்க்கமும் இல்லாமல் தங்களுக்கே உரித்தான பாணியில் மக்கள் மீளத் தொடங்கினர். எந்தவித திட்டமிடலும் இல்லாமல் செய்யப்பட்ட நினைவேந்தல் நிகழ்வுகள் வெவ்வேறு பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டு அதில் அரசியல்வாதிகள் உணர்ச்சிகரமாக உரையாற்றினர். சில பல தேவைகளுக்காக மதத்தலைவர்களையும் இணைத்திருந்தனர். அங்கு அது வெறுமனே மதத் தலைவர்களின் ஆசியுரையாக அமையும்படி ஏற்பாடு செய்திருந்தனர். இத்தகைய ஒரு பின்புலத்தையே எட்டாவது முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை நாம் எதிர்கொள்கிறோம். ஜெனீவாவில் நம்பிக்கையிழந்து அரசியல் தலைமைகளின் கருத்துக்களை நம்பமுடியாமல் கர்மவிதிப்பலன் என ஏற்றுக் கொண்டு சமூக செயற்பாடுகளில் ஒன்றிணைய முடியாமல் தவிக்கத் தொடங்கியுள்ளது போரிற்கு கூட்டாக முகம்கொடுத்த சமூகம்.

எனவே, ஒரு முக்கியமான காலகட்டத்தில் ஏற்பட்டிருக்கும் நம்பிக்கையின்மை, வெற்றிடங்களின் மத்தியில் எவ்வாறு நினைவுகூரல் மேற்கொள்ளலாம் என்பதே இன்றைய கேள்வி. முள்ளிவாய்க்கால் நினைவுகூரல் என்பது பாதிக்கப்பட்ட இனத்தின் பண்பாட்டு கலாசார உரிமை. அந்த பண்பாட்டு உரிமை என்பது அரசியல் உரிமையில் ஒன்றுதான். எனவே அதில் அரசியல் நீக்கம் செய்யப்படவே முடியாது. ஆனால் அடுத்த சந்ததியைப் பற்றிச் சிறிதேனும் சிந்திக்காமலும் எதிர்விளைவுகளை உணராமல் அடுத்த தேர்தலை மாத்திரமே நோக்காக கொண்டுள்ள அரசியல்வாதிகளால் ஏற்பாடு செய்யும் நினைவுகூரல் முழுமையானது அல்ல என்பதுடன் பாதிப்பினை ஏற்படுத்தக்கூடியதுமே. இதனால் அதனை உங்கள் அரசியல் நிகழ்ச்சிகளுக்குள் கொண்டு வராதீர்கள் என்பதனை நான் உயிரிழை நிகழ்வில் சில அரசியல்வாதிகளுக்கு முன்னால் கூறினேன். தன்னெழுச்சியாக ஏற்படுகின்ற மக்கள் போராட்டங்களைக் கூட அரசியல் கட்சிகள் தங்கள் ஆதாயத்துக்கு பயன்படுத்திக் கொள்வதனால் அவை வலுவிழந்து போவதை அண்மைக்காலங்களில் நாம் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. எனவே உரிமைப் போராட்டங்கள் அரசியல் நீக்கம் செய்யப்பட முடியாதவை. ஆனாலும் அரசியல் கட்சிகளின் நிகழ்ச்சிநிரலின் நீக்கமாக அதனை மேற்கொள்ள வேண்டுமென்பதே எனது வாதம்.

அப்படியாயின் என்ன செய்வது?

முதலில் நாம் முள்ளிவாய்க்கால் நினைவுகூரலுக்குரிய ஒரு பொது அமைப்பை நாம் உருவாக்க வேண்டும். அதில் சமூகத்திலுள்ள பலரும் ஏன் அரசியல்வாதிகளும் உள்ளடங்கப்பட வேண்டும். அது இதனை விஞ்ஞான பூர்வமாக ஆராய்ந்து மற்றைய நாடுகளின் அனுபவத்தை உள்வாங்கி அதனைச் செயற்படுத்த வேண்டும். சின்னச்சின்ன விடயங்களுக்கே அமைப்பை உருவாக்குபவர்கள் ஒரு பெரிய அவலத்தை நினைவுகூருவதற்கு ஏன் அமைப்பை ஏற்படுத்தக் கூடாது. இதனை இந்த சமூகம் பல ஆண்டுகளாக மேற்கொள்ளவேண்டியுள்ளதால் அது மிக முக்கியமானது என்பதே எனது கருத்து. அத்துடன் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்களிடம் இத்தகைய நிகழ்வுகள் எவ்வாறு மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் கேட்பதே சாலப் பொருத்தமாகும். அதிலிருந்து நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்கள் இதனைத் தீர்மானிப்பது என்பதுடன் மட்டுமல்லாமல் அதில் முழுமையான பங்களிப்பை ஏற்படுத்துவதாகவும் அமைந்து அதுவே ஆரோக்கியமானதாகவும் குணமாக்குகின்ற நிகழ்வாகவும் அமைந்துவிடும். அல்லாவிடின் அதில் முழுமையான ஈடுபாட்டை ஏற்படுத்த முடியாமல் போய்விடும். இதனைவிட பாதிக்கப்பட்ட மக்கள் அந்நியப்படுத்துவதற்கான ஏதுநிலையும் காணப்படுகிறது.

அடுத்து தீபம் ஏற்றுதல், சுடரேற்றுதல் என்பது நினைவுகூரலின் ஒரு வழிமுறையே ஒழிய அதுதான் நினைவுகூரலுக்கான ஒரே மார்க்கம் எனக் கொள்ளுதல் சரியான வழிமுறையல்ல. பலபல வழிமுறைகளில் நினைவுகூரலை மேற்கொள்ள முடியும்என்பதே பல நாடுகளின் அனுபவமாகும். நினைவாலயங்கள் எழுப்பி பிரார்த்தனையில் ஈடுபடுதல், குணமாக்குகின்ற கதைகளை உரக்கச் சொல்லித் தேறுதல், இழந்தவர்களை எண்ணிப் பாடல்கள் பாடி ஆற்றுகையை மேற்கொள்ளல், ஆலயங்களில் அர்ச்சனைகளை அவர்களின் பெயரில் செய்து மனநிறை அடைதல், குழுக்களாக உரையாடி உணர்ச்சிகளை வெளிப்படுத்துதல், பகிர்தல் எனப் பல வழிகள் உண்டு. அதனை விட மே 18 ஆம் திகதியில் பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவிகளை மேற்கொள்கின்ற அல்லது சமூகத்தின் பொதுச் சேவை மேற்கொள்கின்ற நிகழ்வுக்கூடாக அத்தினத்தை பிரகடனப்படுத்தி அதில் பலரையும் உள்வாங்கியுமல்லவா இரத்ததானம் முதல் பொதுக் கிணறு அமைத்தல் வரை பல பொது நிகழ்வுகளை உணர்வுபூர்வமாக மேற்கொள்ள முடியும். சிறுவர்களைக் கொண்டும் இளைஞர்களை உள்வாங்கியும் பல நிகழ்வுகளை வெவ்வேறு பிரதேசங்களில் மேற்கொள்வதன் மூலம் ஒருவித ஒருமித்த உணர்வுடன் கூடிய குணமாக்கல் மேற்கொள்ள முடியும். இன்றைய சமூகத்தில் பாதிக்கப்பட்ட மக்களை அல்லது போராட்டத்திற்குப் பங்களித்த மக்களை நிராகரிக்கின்ற மனப்பாங்கு பரவலாகக் காணப்படுகின்றது. இதனால் அவர்கள் மேலும் பல வழிகளில் மனக்காயத்திற்கு உட்பட்டு நோயியல் வலுவூட்டம் பெறுவதை நான் அண்மையில் பல சந்தர்ப்பங்களில் அவதானித்துள்ளேன். இதனைத் தவிர்ப்பதற்காகவும் அத்தகைய தாக்கங்களை குறைப்பதற்காகவும் நாம் முன்னின்று செயற்படவேண்டும்.

எனவே தான் முள்ளிவாய்க்கால் நினைவுகூரல் இத்தகைய நிலையை மாற்றியமைப்பதற்கான சந்தர்ப்பமாகும். அவர்களை முன்னிலைப்படுத்தி பொது நிகழ்வுகளை மேற்கொள்ளும் போது அது அவர்களுக்கான சமூக அங்கீகாரமாகபரிணமிப்பதற்குக்கூட வழிகோலும். அவர்களும் தங்களை குணமாக்குகின்ற செயற்பாட்டில் பங்குபற்றுவதுடன் சமூகத்துடனும் இணைந்து தங்களுக்குரிய முடிவுகளை மேற்கொள்வதற்கான சூழ்நிலை தோன்றும். அதனால் சமூகம் வளப்படும், பலப்படும். வினைத்திறன் மிக்கதாக மாறும். அப்படிப்பட்ட ஆரோக்கியமான சமூகமே எதிர்காலத்தை வளமானதாக அமைக்கும். எதிர்காலச் சந்ததி தனது சமூகத்திற்குத் தேவையானதை விவேகமான வழியில் போராடிப் பெற் றுக் கொள்ளும்.

ஜெனிவாவுக்கு எவ்வித தயாா்படுத்தலும் இன்றி தனித்தனி நிகழ்ச்சி நிரல்களினோடு செயற்பட்டு அங்கு எதையும் செய்ய முடியாமல் போன நிலைமையை புரிந்துகொண்டு வருகின்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை யாவது தயார்படுத்தலுடன் எதிர்கொள்வது எமது கடமையாகும்.

அன்று நான் உரையாற்றிக் கொண்டிருந்த போது வன்னியின் முக்கிய அரசியல்வாதி பிரசன்னமாயிருந்தார். அவர் மாவீரர் நினைவு நாளை கையிலெடுத்து தீபம் ஏற்றியவர் என்பதனாலேஇதனை அங்கு வைத்து கூறுவதன் மூலம் இனி வரும் செயற்பாடுகளுக்கு உபயோகமாக அமையும் என எண்ணி எனது கருத்துக்களை முன்வைத்தேன். அதற்கு அவர் கூட்டத்திலிருந்த சிலரிடம் இவர் ஒரு மாற்று இயக்க உறுப்பினராக இருப்பார் என ஏளனமாகச் சொல்லி அந்த அரசியல்வாதி சென்றுள்ளார். எட்டுவருட காலம் வன்னி மக்களின் மனநல சேவையை செய்த எனக்கு அவர் தந்த பாராட்டு இது என கொண்டாலும் அதில் சொல்லப்பட்ட கருத்துக்களை உள்வாங்க முடியாதவராக அவர் இருப்பதுவே எனக்கு மனவேதனை தந்தது. எனவே இதன் மூலம் இம்முறை முள்ளிவாய்க்கால் நினைவேந்தலும் வெறும் அரசியல் கோஷமாக மாத்திரமே அமையப்போகிறது என்பதையும் கோடிட்டுக் காட்டுகின்றது.

எனவே எமது மக்களின் மனக்காயங்களை ஆற்றுகின்ற மகத்தான பணியை செய்துகொள்வதுஎன்பதுமுடிவில்லாமல் நீண்டு செல்கிறது என்றால் மிகையாகாது. குணமாக்குகின்ற வெளியைத் தரவில்லையென அரசைச் சாடிக் கொண்டு நாம் கிடைக்கின்ற வெளியினைஉபயோகிக்கத்தெரியாதவர்களாக மட்டுமன்றி அதனை முடக்குகின்றவர்களாகவும் மாறிக்கொண்டு இருக்கின்றோம் இதனை எமது இனத்தின் சாபக்கேடு என எண்ணிக் கொண்டு உணர்திறன் மிக்க அரசியல் சமூக தலைவர்களிடம்இதனைகொண்டுசெல்லவேண்டியது காலத்தின்தேவையாகும். அதனை நோக்கமாகக் கொண்டே இந்தக் கட்டுரையை எழுதியுள்ளேன். அது இத்தகைய செயற்பாட்டில் சிறிய தாக்கத்தை யாவது ஏற்படுத்தும் என உளமாற நம்புகின்றேன். இத்தகைய கருத்துக்கள் ஏற்றுக் கொள்ளப்படாவிடில் வெறும் குறியீட்டு நிகழ்வாகவே முள்ளி வாய்க்கால் நினைவேந்தல் குறுகி விடும் என்பதே வேதனைக்குரிய யதார்த்தமாகும்.

(முற்றும்.)

வான்.வேணு கிருஷ்ணா




ஒரு தொலைதூர ஏவுகணை தாக்குதல் சம்பவத்தின் போது எவ்வாறு விடையிறுப்பது என்பதன் மீது அபே அரசாங்கம் படைத்துறைசாரா பாதுகாப்பு ஆலோசனைகளை வழங்கி, ஜப்பானில் எதிர்ப்பு மனோநிலைகளைத் தூண்டிவிட்டுள்ளது: பதுங்குகுழிகளில் பதுங்கி கொள்ள வேண்டும் அல்லது அருகில் உள்ள பலமான கட்டிடங்களில் ஒதுங்கி கொள்ள வேண்டுமென அது ஆலோசனை வழங்கி உள்ளது. ஒரு மோதல் சம்பவத்தின் போது தென் கொரியாவில் இருந்து ஆயிரக்கணக்கான ஜப்பானிய பிரஜைகளை வெளியேற்றுவதற்கான திட்டங்களையும் அது முன்னதாக அறிவித்திருந்தது.

கீழ்படிந்திருக்கும் ஊடகங்களின் ஆதரவுடன், அமெரிக்கா அதன் கூட்டாளிகளுடன் சேர்ந்து பியொங்யாங் ஆட்சியைத் தொடர்ந்து பூதாகரமாக சித்திரித்து வருவதுடன், அதை அப்பிராந்தியத்திற்கும் உலகிற்கும் ஓர் அச்சுறுத்தலாக முத்திரை குத்தி வருகிறது. ட்ரம்ப் நிர்வாகம் சீனாவிற்கு அழுத்தமளித்து வருகின்ற அதே வேளையில், அதுவே வட கொரியாவை "தீர்த்துக் கட்ட" தயாராக இருப்பதாகவும் அது மீண்டும் மீண்டும் அறிவித்துள்ளது.

அமெரிக்கப் பாதுகாப்பு மற்றும் வெளியுறவுத்துறைகளின் அறிக்கைகளோடு இந்த இடைவிடாத போர் முரசுகொட்டல் கடந்த வாரமும் தொடர்ந்தது. பென்டகன் செய்தி தொடர்பாளர் கேரி ரோஸ் கூறுகையில், "வட கொரியாவின் சட்டவிரோதமான ஆயுதத் திட்டங்கள் அமெரிக்க தேசிய பாதுகாப்புக்குத் தெளிவான மரணகதியிலான ஓர் அச்சுறுத்தலைப் பிரதிநிதித்துவம் செய்கின்றன", என்று கூறி, "ஆத்திரமூட்டும், ஸ்திரமின்மைக்கு உட்படுத்தும் நடவடிக்கைகள் மற்றும் வாய்சவடால்களுக்காக" பியொங்யாங்கிற்குக் கண்டனம் தெரிவித்தார்.

வெளியுறவுத்துறை சற்றே ஒளிவு மறைவாக ஓர் எச்சரிக்கையை வெளியிடுவதற்கு முன்னதாக, அதுவும் அதேபோன்ற வார்த்தைகளில் வட கொரியாவைக் கண்டித்தது. "நாங்கள் இராணுவ மோதலை விரும்பவில்லை அல்லது வட கொரியாவை அச்சுறுத்தவும் விரும்பவில்லை. ஆனால் எங்களுக்கோ அல்லது எங்கள் கூட்டாளிகளுக்கோ வரும் அச்சுறுத்தல்களுக்கு அதற்கேற்ற விதத்தில் நாங்கள் விடையிறுப்போம், என்று ஒரு செய்தித் தொடர்பாளர் அறிவித்தார்.


வட கொரியா இரத்தம் கொதிப்பேற்றும் அச்சுறுத்தல்களுடன் அமெரிக்காவிற்கு விடையிறுத்துள்ளது, இது வொஷிங்டனின் இராணுவ ஆயத்தப்படுத்தலுக்கான ஒரு சாக்குப் போக்கை அதற்கு வழங்குகிறது. "வடகின் மீது படையெடுப்பதற்காக ஓர் அணு ஆயுதப் போரைத் திட்டமிடுபவர்களின் அதிதீவிரமான அபாயகரமான நடவடிக்கை" என்று US கார்ல் வின்சனின் நிலைநிறுத்தலை குறிப்பிட்டுள்ள வட கொரியா, அந்த விமானந் தாங்கிப் போர்க்கப்பலை "ஒன்றுக்கும் உதவாத உலோக குப்பையாக" மாற்றவும், "கடலிலேயே அதை எரித்துச் சாம்பலாக்கவும்" அது தயாராக இருப்பதாக அறிவித்தது.

கொரிய தீபகற்பத்தில் வேண்டுமென்றே பதற்றங்களை அதிகரித்து வரும் ட்ரம்ப் நிர்வாகம், பியொங்யாங் ஆறாவது அணுசக்திச் சோதனையை நடத்துவதற்கோ அல்லது மேற்கொண்டு தொலைதூர ஏவுகணைகளைத் தொடுப்பதற்கோ நகர்ந்தால் அதன் முன்கூட்டிய இராணுவத் தாக்குதல்களைக் கொண்டு அச்சுறுத்தி உள்ளது. இதுபோன்றவொரு நிலைமைகளில், ஒரு தவறான கணக்கீடோ அல்லது ஒரு பிழையோ கூட ஒரு மோதலைத் தூண்டிவிட்டு, வேகமாக கட்டுப்பாட்டை இழந்து, சீனா மற்றும் ரஷ்யா போன்ற அணுஆயுத மேந்திய சக்திகளை மோதலுக்குள் இழுத்துவிடக்கூடும்.

*பசுபிக்கில் அமெரிக்கா ஏவுகணை சோதனைகளை நடத்துகின்றது*

வட கொரியா அதன் அணுஆயுத மற்றும் ஏவுகணை சோதனைகளையும், அச்சுறுத்தும் இராணுவத் தாக்குதல்களையும் நிறுத்தவேண்டுமென கோரப்படுகின்ற நிலையில் அது அவ்வாறு செய்யவில்லையானால், இன்று ட்ரம்ப் நிர்வாகம் கலிஃபோர்னியாவிலிருந்து பசிபிக் ஊடாக தனது பலத்தைக் காட்டுவதற்காக அச்சுறுத்தலுடன் கூடிய ஓர் அணுஆயுதத் திறன்கொண்ட கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணை (ICBM) சோதனையை நடத்தும்.

உலகளாவிய விமானப் படைத் தாக்குதல் கட்டளையகத்தின்படி, இந்த நடவடிக்கை ஆயுதங்களின் "செயல்



திறன், துல்லிய நுட்பம் மற்றும் தயார் நிலை" போன்றவற்றை சோதனை செய்யும். வட கொரியா மற்றும் அதன் அண்டை நாடான சீனாவின் மீதும் அதிகரித்துவரும் அமெரிக்க இராணுவ அழுத்தத்தின் பின்னணியில், அணு ஆயுதமேந்திய ICBM களை பிரயோகிப்பதற்கான அமெரிக்கத் தயாரிப்புகளின் ஒரு தெளிவான அச்சுறுத்தலும் உள்ளது.

நமது தேசிய அணுஆயுத படையின் நிலையைப் பரிசோதித்துக்கொள்ளவும் மற்றும் நமது தேசிய அணுஆயுத திறன்களை நிரூபிக்கவும் ஏவுகணை சோதனைகள் அத்தியாவசியமானவையாக இருந்தன என்று வான்டென்பெர்க் விமானப்படை தளத்தின் 30வது வான்வெளி பிரிவின் தளபதியான கேணல் கிறிஸ் மோஸ் கூறினார்.

*ஆத்திரமூட்டும் வகையில் அமெரிக்கா நடத்திய சோதனை தான் மீண்டும் வொஷிங்டனின் அணுஆயுதப் போர் மற்றும் பென்டகனின் ஈடிணையற்ற ஆயிரக்கணக்கான அணுஆயுத வெடிக்கும் சாதனங்களைக் கொண்ட ஏவுகணைப் படைக்கலங்களால் முன்வைக்கப்படும் உண்மையான ஆபத்தை எடுத்துக்காட்டுகின்றன.*

வட கொரியாவின் சிறிய மற்றும் பழமையான அணுஆயுத மற்றும் ஏவுகணைதிறன்களால் உருவாக்கப்பட்ட அபாயம் பற்றி அனைத்து அரசியல் மற்றும் ஊடக வெறித்தனங்களுக்கும் மத்தியில், ஆத்திரமூட்டும் வகையில் அமெரிக்கா நடத்திய சோதனைதான் மீண்டும் வொஷிங்டனின் அணுஆயுத போர் மற்றும் பென்டகனின் ஈடிணையற்ற ஆயிரக்கணக்கான அணு ஆயுத வெடிக்கும் சாதனங்களை கொண்ட ஏவுகணைப் படைக்கலங்களால் முன் வைக்கப்படும் உண்மையான ஆபத்தை எடுத்துக்காட்டுகின்றன.

இன்றைய பயிற்சிக்கென எந்தவொரு இலக்கும் குறிப்பிடப்படவில்லை, ஆனால், பெப்ரவரியில் வடக்கு டக்கோட்டா தளத்திலிருந்து தொடங்கப்பட்டதான அமெரிக்காவின் ஒரு முந்தைய சோதனையின்போது ஏவுகணை, வடமேற்கு பசுபிக் பகுதியில் மார்ஷல் தீவுகளின் ஒரு பகுதியான Kwajalein Atoll எனும் இலக்கு எல்லையை நோக்கி 6,760 கிலோ மீற்றர் தூரம் வரை பயணித்தது.

*அடுத்த நாளே கிரஹாம் பின்வருமாறு ட்வீட் செய்தார்: "அமெரிக்காவை தாக்கும் திறன் கொண்ட வகையில் கூடுதலான அணுஆயுதங்களுடனான ஓர் ஏவுகணை அபிவிருத்தியெனும் முட்டாள்தனமான நடவடிக்கையை வட கொரியாவில் தொடங்க டொனால்ட் ட்ரம்ப் அனுமதிக்கப் போவதில்லை." இதை "முட்டாள்தனமான வேலை" என்று குறிப்பிட்டது வட கொரிய தலைவரான கிம் ஜோங்-உன்னை அவமதிப்பதாக இருந்தது.*

பசுபிக், ஜப்பான் மற்றும் தென் கொரியா முழுவதிலுமான அமெரிக்க இராணுவத் தளங்களில் ஒன்றான மார்ஷல் தீவுகளில் உள்ள டொனால்ட் ரீகன் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைப் பாதுகாப்பு சோதனை தளத்தினையும், அத்துடன் போர்க்கப்பல்கள் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்களின் கடற்படைகளையும் கொண்டு வட கொரியா மீதான பேரழிவுகரமான தாக்குதல்



களை அதிகரிக்க முடியும்.

ஏவுகணைச் சோதனை நடத்தப்பட்ட அதே நாளில், ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்க செனட்டின் அனைத்து 100 உறுப்பினர்களுடன் வட கொரிய நிலைமை பற்றி அறிவித்த ஒரு அரிதான மற்றும் திடீரென்ற வெள்ளை மாளிகையின் சிறு விளக்கத்தை வழங்குவார். அச்சுறுத்தும் சூழ்நிலைக்கு கூடுதலாக, போர் தொடர்புள்ள நான்கு உயர்மட்ட அதிகாரிகளின் மூலமாக இந்தச் சிறு விளக்கம் வெளியிடப்படும். அவர்கள் வெளியுறவு செயலரான றெக்ஸ் ரில்லர்சன், பாதுகாப்புச் செயலரான ஜிம் மாட்டிஸ், தேசிய புலனாய்வு இயக்குநரான டான் கோட்ஸ், கூட்டு தலைவர்களின் தலைமைத் தளபதி ஜெனரல் ஜோசப் டன்ஃபோர்ட் போன்றவர்களாவர். போர் ஏற்பாடுகளின் மற்றொரு அறிகுறியாக, திங்களன்று(April 2017) இரவு இரண்டு முக்கிய வெளியுறவு கொள்கை பருந்துகளான ஜோன் மெக்கெய்ன் மற்றும் லிண்ட்ஸே கிரஹாம் ஆகிய செனட்டர்களுடன் ட்ரம்ப் ஒரு பொது இரவு விருந்தில் கலந்துகொண்டார். அவர்கள் விவாதித்தது குறித்து எந்தவொரு தகவலும் வெளியிடப்படவில்லை, ஆனால் அடுத்த நாளே கிரஹாம் பின்வருமாறு ட்வீட் செய்தார்: "அமெரிக்காவைத் தாக்கும் திறன்கொண்ட வகையில் கூடுதலான அணுஆயுதங்களுடனான ஒரு ஏவுகணை அபிவிருத்தியெனும் முட்டாள்தனமான நடவடிக்கையை வட கொரியாவில் தொடங்க டொனால்ட் ட்ரம்ப் அனுமதிக்கப்போவதில்லை." இதை "முட்டாள்தனமான வேலை" என்று குறிப்பிட்டது வட கொரிய தலைவரான கிம் ஜோங்-உன்னை அவமதிப்பதாக இருந்தது.

இந்த அபிவிருத்திகள் விரிவடைந்த நிலையில், ஜப்பானிய மற்றும் தென் கொரிய கடற்படைக் கப்பல்களுடன் போர் பயிற்சிகளை நடத்துகின்ற அணு ஆயுத திறன்பெற்ற போர்கப்பல்களுடன் வொஷிங்டன் கொரிய தீபகற்பத்தை சுற்றிவளைத்துக் கொண்டுள்ளது.

ஒரு அமெரிக்க அழிப்பு கப்பலான USS Wayne E. Meyer, கொரிய மேற்கு பகுதி சார்ந்த மஞ்சள் கடலில் ஒரு தென் கொரிய அழிப்பு கப்பலுடன் நேற்று பயிற்சிகளைத் தொடங்கியது. மற்றொரு அமெரிக்க அழிப்பு கப்பலான USS Fitzgerald கொரிய கிழக்கு பகுதி சார்ந்த கிழக்கு கடல் பகுதியாக அறியப்படுகின்ற ஜப்பான் கடலில் ஒரு ஜப்பானிய அழிப்பு கப்பலுடன் பயிற்சிகளை நடத்தியது.

பரந்த அளவிலான சூழ்நிலைகளுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் அமெரிக்க கடற்படையின் உள்ளார்ந்த நெகிழ்வு தன்மை நட்பு நாடுகளின் கடற்படைகளுடன் இணைந்து செயல்படுவதாகவே இரண்டு பயிற்சிகளும் நிரூபிக்கின்றன என்று அமெரிக்க ஏழாவது கடற்படை பிரிவு கூறியது.


மேலும் அச்சுறுத்தும் காட்சிகளாக, ஒரு வழிகாட்டுதல் ஏவுகணை நீர்மூழ்கி கப்பலான USS Michigan தென் கொரிய துறைமுகமான புசானில் நின்றிருந்ததுடன், மேலும், தென் கொரிய கடற்படையுடன் ஒரு கூட்டு நடவடிக்கையை மேற்கொள்ளும் பொருட்டு கொரிய தீபகற்பத்தின் கடல்பகுதியை சென்றடைவதற்காக ஜப்பானிய கப்பல்களுடன் சேர்ந்து USS Carl Vinson விமானந்தாங்கி கப்பல் படையும் அங்கு நின்றிருந்தது.

அரசியல் உயர்மட்டத்தினர் மற்றும் பெருநிறுவன ஊடகங்களின் தொடர்ந்த கூற்றுக்கள் இருந்தபோதிலும், வட கொரிய அதன் ஆறாவது அணு ஆயுதச் சோதனையை நடத்துவதற்கு தயாராக இருந்ததுடன், அந்நாட்டு இராணுவத்தின் 85வது ஆண்டுதினத்தை முன்னிட்டு, பியோங்யாங் கிழக்கு கடற்கரைப் பகுதியில் வொன்ஸன் அருகே நேரடித் துப்பாக்கிச் சண்டைப் பயிற்சிகளை நடத்தியதாகக் கூறப்படுகிறது.

(கேள்வி தொடரும்...)

# தமிழ்த் தேசிய எழுச்சி





ஈழத் தமிழினத்தின் தேச விடு தலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கியமானவர். அரசியல் ஞானம் மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.




139

## புலிகளின் போரியல் வளர்ச்சியும் நோர்வேயின் சமாதான முயற்சியும்

### கொழும்பில் புதிய ஆட்சியமைப்பு

இந்தக் கால கட்டத்தில், 2001 ஆம் ஆண்டு செப்ரெம்பரில் - நோர்வேயின் தொழிற்கட்சி அரசு தமது ஆட்சியைத் துறந்ததால், மரபுவாத மற்றும் கிறிஸ்தவ ஜனநாயகவாதிகளின் ஒரு புதிய அரசு அமைப்பதற்கு வழிவிட்டது. கே.எம். பொண்டவிக் புதிய நோர்வே அரசின் பிரதமராகப் பொறுப்பு ஏற்றார். ஜோன் பீற்றர்சன் அதன் வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்பட்டார். விடார் ஹெல்கிசன் வெளிவிவகாரத் துணை மந்திரியாக அமர்த்தப்பட்டமையுடன், இலங்கைச் சமரச முயற்சிகளுக்கான பொறுப்புகளும் அவரிடம் வழங்கப்பட்டது. இலங்கை விவகாரத்துக்கான சிறப்புத் தூதுவராக எரிக் சொல்ஹைம் தொடர்ந்தும் பணியேற்றார். இலங்கை இன நெருக்கடிக்குச் சமரசத் தீர்வு காண எடுக்கப்படும் முயற்சிகளில் சம்பந்தப்பட்ட தரப்புகளிடையே அனுசரணையாளராகத் தொடர்ந்தும் செயற்பட நோர்வேயின் புதிய அரசு உறுதியளித்தது.

2001 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 5 ஆம் நாள், சிறிலங்காவும் ஒரு நாடாளுமன்றத் தேர்தலைச் சந்தித்தது. தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்கு ஒரு சமரசத் தீர்வு காண்பது, நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவது என்பன தேர்தல் பிரசாரத்தின் மையக் கருத்துகளாக அமைந்தன. ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி, சமாதானத்தை நிலைநாட்டவும் விடுதலைப் புலிகளுடன் சமரசப் பேச்சுகளை நடத்தவும் சிங்கள மக்களிடம் ஓர் ஆணையைக் கேட்டது. 2001 ஆம் ஆண்டின் ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் தெரிவித்ததாவது:-


*''சமாதானமே எமது முதன்மை இலட்சியம். சமாதானத்தின்பால் நின்று, சமாதானத்துக்காக மட்டுமே நாம் உழைப்போம். தேசிய பிரச்சினைக்கான எமது தீர்வு யோசனையை, இத்தனை வருடங்களாக, எமது எதிர்தரப்பினர் மிக மோசமாகவும், தயவற்ற முறையிலும் திரிவுபடுத்திக் காட்டிவிட்டார்கள். நாங்கள் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து, நாட்டில் ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவோம். பிரச்சினையில் தொடர்புபட்ட அனைத்துத் தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளப்படத்தக்க அரசியல் தீர்வு ஒன்றை, பிளவுபடாத சிறிலங்காவின் ஒருமைப்பாட்டுக்குள் நாம் ஏற்படுத்துவோம். அதற்கான முயற்சிகளை, நாம் இதயபூர்வமாகவும், திறந்த மனதுடனும் முன்னெடுப்போம்...*

*நாம் ஆட்சியமைத்தவுடன் - எல்லோருக்கும் ஒரு பரந்த தளத்தில் அரசியற் தீர்வை அடைவதற்காக - அனைத்து அரசியற் கட்சிகளுடனும், மதப்பீடங்களுடனும், சமூக அமைப்புகளுடனும் நாங்கள் கலந்துரையாடல்களை முன்னெடுப்போம். தமிழீழ விடுதலைப் புலிகளையும் நாம் அந்தச் சமரச முயற்சிகளில் ஈடுபடுத்துவோம்.*

*எல்லா சமூகங்களினதும் பெரும் பான்மையினரால் ஏற்றுக் கொள்ளப்படும் ஓர் அரசியல் தீர்வை அடையாதவரை, அரசமைப்பில் எத்தகைய ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வருவதற்கான யோசனையை நாம் முன் வைக்கப் போவதில்லை. வடகிழக்கு மாகாணத்துக்கு ஓர் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு நிறுவப்படும்.*

*போரினால் இடம்பெயர்ந்து, நிர்க்கதி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கென ஒரு சுதந்திர ஆணைக்குழுவை நாம் நியமிப்போம்.*

*உணர்வுபூர்வமான இந்த விடயம், சமூகத்தின் அனைத்துத் தரப்பினராலும் முழு மனதோடு ஆராயப்பட வேண்டும். உணவு, மருத்துவம் மற்றும் இன்னபிற அத்தியாவசியத் தேவைகளின் பற்றாக்குறைக்குள் சிக்குண்டு, வடகிழக்கில் வாழும் மக்கள் நாளாந்தம் பட்டுவரும் தாங்கொணாத் துன்பத்தினை நாம் அறிந்திருக்கிறோம். தங்கள் உறவினர், நண்பர்களிடம் விஜயம் செய்யும் சாதாரண பயணிகள் எதிர்கொள்கின்ற இடர்பாடுகளையும் நாம் புரிந்து கொள்கின்றோம். நாம் ஆட்சியமைத்தவுடன், அவர்களது வாழ்வில் சுமுக நிலையை ஏற்படுத்துவதற்கான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.''*



சமாதானம் என்பது, தென்னிலங்கைத் தேர்தல் களத்தின் அரசியல் சக்திகளுக்கிடையே, அதனை ஆதரித்தவர்களுக்கும், அதனை எதிர்த்த பேரினவாதிகளுக்கும் மத்தியிலான முதன்மை விவாதப் பொருளாக உருவாகிவிட்டிருந்தது. இதனை உணர்ந்து கொண்ட புலிகளின் தலைவர் பிரபாகரன் 2001 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் நாளன்று தனது வருடாந்த மாவீரர் நாள் உரையில், ''போர் வெறி கொண்ட இனவாத சக்திகளை'' அடையாளம் கண்டு நிராகரிக்குமாறு சிங்கள மக்களுக்கு வேண்டுகோள்விடுத்தார். நிலைமையை அவர் பின்வருமாறு விளக்கினார்:-


*''இலங்கையில் முதன்மையான பிரச்சினையாக முனைப்புற்று நிற்கும் தமிழரின் தேசிய இனச் சிக்கலானது, சமாதானம், போர் என்ற இரு முரண்பட்ட துருவங்களில் அரசியல் சக்திகளை ஈர்த்து வருகின்றது. சமாதானம் வேண்டி நிற்கும் சக்திகளுக்கும் சமாதானத்துக்கு எதிரான தீவிரவாத சக்திகளுக்கும் மத்தியிலான போட்டியாக இந்தத் தேர்தல் நடக்கின்றது. எனவே, எதிர்காலத்தில் இந்தத் தீவில் சமாதானம் நிலவ வேண்டுமா, போர் தொடரவேண்டுமா என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பு பொதுமக்களிடம் விடப்பட்டிருக்கின்றது. தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்காதவரை, அவர்களது அரசியல் அபிலாஷைகள் நிறைவேறாதவரை இந்தத் தீவில் சமாதானமும், இன ஒத்திசைவும், பொருளாதார மேம்பாடும் ஏற்படப் போவதில்லை என்பதைச் சிங்கள மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.*

*நாம் சிங்கள மக்களுக்கு விரோதிகள் அல்லர். எமது போராட்டமும் சிங்கள மக்களுக்கு எதிரானது அல்ல. சிங்கள இனவாத அரசியல்வாதிகள் அடக்குமுறைக் கொள்கை காரணமாகவே தமிழ், சிங்கள இனங்கள் மத்தியில் முரண்பாடு எழுந்து போராக வெடிக்கின்றது. ஆயுத பலத்தால் எமது மக்களை அடிமை கொள்ள முனையும் அரசுக்கும், அரச படைகளுக்கும் எதிராகவே நாம் போர் புரிந்து வருகின்றோம். இந்தப் போரானது தமிழ் மக்களை மட்டுமன்றி சிங்கள மக்களையும் ஆழமாகப் பாதித்து வருகின்றது என்பது எமக்குத் தெரியும். போர் வெறி கொண்ட அதிகார வர்க்கத்தின் அடக்குமுறைக் கொள்கையால் பல்லாயிரக்கணக்கான அப்பாவிச் சிங்கள இளைஞர்களும் அநியாயமாகக் கொல்லப்பட்டு வருகின்றார்கள். அது மட்டுமன்றி, இந்தப் போரால் எழும் பொருளாதாரப் பளுவை சிங்கள மக்களே சுமக்க வேண்டியுள்ளது என்பதும் எமக்குத் தெரியும். எனவே, இந்தக் கொடிய போருக்கு முடிவு கட்டி, நிரந்தர சமாதானத்தை நிலைநாட்டுவதாயின், போர் வெறி கொண்ட இனவாத சக்திகளை இனங்கண்டு ஒதுக்கி விடுவதோடு, தமிழ் மக்களுக்கு நீதி வழங்கவும் சிங்கள மக்கள் முன்வர வேண்டும்...''*

தமிழ்த் தேசிய இனச் சிக்கலுக்குச் சமரசத் தீர்வு கண்டு, சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான அமோக ஆணையைப் பெற்று, அந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றியீட்ட, ரணில் விக்கிரமசிங்க நாட்டின் புதிய பிரதமராகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். அவ்வாறு பதவியேற்றுக் கொண்டவுடன், நோர்வேத் தூதுவர் வெஸ்ட்போர்க்கைச் சந்தித்து, விடுதலைப் புலிகளுடன் சமரசப் பேச்சுகளில் ஈடுபடுவதற்கான தனது அரசின் விருப்பத்தைத் தெரியப்படுத்தினார். அனுசரணைப் பணியைத் தொடர்ந்தும் முன்னெடுத்துத் தனது அரசுக்கும் புலிகள் இயக்கத்துக்கும் இடையில் பேச்சுகளை நிகழ்த்துவதற்கான முயற்சியை ஆரம்பிக்குமாறு நோர்வே அரசை வேண்டிக் கொண்டார். அத்தோடு, நோர்வேத் தூதுவர் ஊடாக புலிகளின் தலைமைக்கு அனுப்பி வைத்த ஒரு தகவலில், தமிழ் மக்களின் குறைகளைத் தீர்த்து, அவர்கள் நிம்மதியான வாழ்வுக்கு மீளத் திரும்புவதற்குத் தேவையான நடவடிக்கைகளைத் தனது அரசு விரைந்து மேற்கொள்ளும் என்றும் ரணில் தெரிவித்திருந்தார்.


இந்தப் புதிய அரசுக்குத் தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தும் முகமாக, 2001 ஆம் ஆண்டு, டிசெம்பர் மாதம் 24 ஆம் திகதி நள்ளிரவு முதல், ஒரு மாத கால யுத்த நிறுத்தம் ஒன்றை ஒருதலைப்பட்சமாக அறிவித்த புலிகள் இயக்கம், அதற்குச் சாதகமாகப் பதிலளிக்குமாறு ரணிலின் ஆட்சியிடம் கோரியது. இந்த முடிவைப் புலிகள் இயக்கம் பின்வருமாறு அறிவித்தது.

(தொடரும்...)



சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் சித்திர பாட ஆசிரியை திருமதி ஜானகி ஆனந்தகிருபனின் ஏற்பாட்டில் பாடசாலை மண்டபத்தில் "கலைச் சிதறல்கள் "சித்திரக் கண்காட்சி கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை வரை இடம்பெற்றது.

டிறிபேக் கல்லூரி அதிபர் ந.ஜெயக்குமாரன் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கண்காட்சியின் முதல் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார், தென்மராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் த. கிருபாகரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (எ-21)



யோவான் 14.2 , காற்றில் மிதக்கும் தழும்பின் நிழல், அவலங்கள் ஆகிய மூன்று கதைத் தொகுதிகள் பற்றிய உரையாடலும் நூல் வெளியீடும் கடந்தவாரம் யாழ்.ஏ.லீட் மண்டபத்தில் எழுத்தாளர் க.சட்டநாதன் தலைமையில் நடைபெற்றன. (எ-19)



சர்வதேச லயன்ஸ் கழகம் 306 பி1 மாவட்ட லயன்ஸ் கழகம், கொட்டாஞ்சேனை லயன் அமுதா கோபாலன் இரண்டாவது மாவட்ட ஆளுநராகப் போட்டியிடும் அறிமுக நிகழ்வு அண்மையில் யாழ். சுண்டுக்குழி, லொயாலா திருமண மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் யாழ். மாவட்ட லயன்ஸ் கழக உயர் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (எ-19)



பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா மகா சமாதி தின ஆராதனா மஹோற்சவம் கொழும்பு- புதுச்செட்டித்தெரு சாயி நிலையத்தில் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில், மலைநாட்டு புதிய கிராமங்கள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் திருமதி.ரஞ்ஜினி நடராஜபிள்ளை கல்வித்துறையில் பயிற்சி பெற்ற மாணவர் ஒருவருக்கு சான்றிதழ் வழங்குவதையும், கொழும்பு சாயி பாபா மத்திய நிலையத் தலைவர் எஸ்.எஸ்.உதயநாயகன், சர்வதேச அரிமா சங்கத்தின் முன்னாள் மாவட்ட ஆளுநர் எஸ்.இராகவனுக்கு சாயி நினைவுச் சின்னம் வழங்குவதையும் படங்களில் காணலாம். (எ)

# பேரீச்சம் பழத்துக்கு எந்தவிதமான புதிய வரியும் அறவிடப்படவில்லை!

நிதி அமைச்சின் வர்த்தக முதலீட்டுக்கொள்கை பிரிவு தெரிவிப்பு



கொழும்பு,மே 08

ரமழான் மாதத்தை முன்னிட்டு இறக்குமதி செய்யப்படவுள்ள பேரீச்சம் பழங்களுக்காக எவ்விதமான புதிய வரிகளும் அறவிடப்படவில்லை என்று நிதி அமைச்சின் வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கைப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஒரு கிலோ கிராம் பேரீச்சம்பழத்துக்கு 60 ரூபா விசேட வர்த்தக பொருள் வரி மாத்திரமே தற்போது நடைமுறையில் இருப்பதாக அந்தப் பிரிவு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

2015 ஆம் ஆண்டு 130 ரூபாவாக இருந்த அந்த வரி கடந்த ஆண்டு நவம்பர் மாதம் வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் 60 ரூபாவாக குறைத்துள்ளது.

அந்த வரியே தொடர்ந்து பேணப்படும் என்றும் வேறு புதிய வரிகள் அறவிடப்படவில்லை.- என்றுள்ளது. (எ)

# ஹொங்கொங்கிலுள்ள இலங்கையர் நாடு கடத்தப்படும் அபாயத்தில்!

மூன்றாம் நாடு ஒன்றில் அடைக்கலம் கோருவதற்காக ஹொங்கொங்கில் தங்கியுள்ள இலங்கையர் நாடு கடத்தப்படலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

அமெரிக்க இரகசியங்களை வெளியிட்ட புலனாய்வு அதிகாரியான எட்வேட் ஸ்னோவ்டென்னுக்கு தம்முடன் தங்க இடமளித்த இலங்கையர்களே இவ்வாறு நாடு கடத்தப்படவுள்ளனர் என்று தெரிய வருகிறது.

இந்தச் சம்பவத்தில் இலங்கை அரசு பின்னணியில் இருந்து செயற்படுவதாக அந்த இலங்கையர்களின் சட்டத்தரணிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்

அந்த அகதிகளில் ஒருவரான இலங்கையின் முன்னாள் இராணுவ வீரர் அஜித் புஸ்பகுமார, இதுதொடர்பில் தகவல் அளிக்கையில்,

'இன்று திங்கட்கிழமை தமக்கு குடிவரவுத் திணைக்களத்தின் இறுதி நேர்முக விசாரணை இடம்பெறவுள்ளது. இந்தநிலையில் உரிய ஆவணங்களை தாம் சமர்ப்பித்துள்ளபோதும் நாம் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு நாடு கடத்தப்படும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளோம்.'-என்றார்.

அவருடன் 2010 ஆம் ஆண்டு முதல் தங்கியுள்ள ஏனைய இரண்டு அகதிகளும் அவரின் பிள்ளைகளும் இதேபோன்ற அச்சத்தை வெளியிட்டுள்ளனர்.

இலங்கையில் உயிர் அச்சுறுத்தல் என்று கூறி சுப்புன் திலின கல்பாத்த அவருடைய மனைவி நதீகா நோனிஸ் மற்றும் ஹொங்கொங்கில் பிறந்த மூன்று பிள்ளைகளே நாடுகடத்தல் நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளனர்.

# பசுமை வலயமாக விரைவில் தலதா மாளிகை வளாகம்!

கொழும்பு, மே 08

தலதா மாளிகை வளாகத்தை பசுமை வலயமாகப் பிரகடனப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என உள்ளூராட்சி மன்ற மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

அமைச்சர் பைஸர் முஸ்தபா, கட்டுகஸ்தோட்டை கொஹாகொட குப்பை மேட்டை கண்காணிக்கும் பணியில் நேற்றுமுன்தினம் ஈடுபட்டிருந்தார்.

அதன் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தலதா மாளிகை வளாகத்தில் பொலித்தீன் கொண்டுவருவது முற்றாகத் தடை செய்யப்படவுள்ளது. அத்துடன், தலதா மாளிகை பகுதியில் உள்ள குப்பைகளை அகற்ற மாநகர சபையில் தனியான ஒரு பிரிவு நிறுவப்பட உள்ளது.

மகாநாயக்க தேரர்களுடன் கலந்துரையாடியதன் பின்னர், அந்தப் பிரிவை நிறுவுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இதனூடாக, தலதா மாளிகை வளாகத்தை பசுமை வலயமாக பிரகடனப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.-என்றார். (எ)

# மின்வெட்டை நடைமுறைப்படுத்த அரசு திட்டம்

## சாடுகிறார் விமல்




மின்வெட்டை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது என ஜே. என். பி.யின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.


கொட்டாவ பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மின்சாரத்தை இடையறாது வழங்குவதாகக் கூறிய அரசு, மின்வெட்டை நடைமுறைப்படுத்த முயற்சித்து வருகின்றது.

மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது. பொதுமக்களை பெரும் நெருக்கடிக்குள் ஆழ்த்தும் வகையில் அரசு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.-என்றார்.





# சுவிற்ஸர்லாந்தில் நடைபெற்ற தமிழ்மொழி பொதுத்தேர்வு

சுவிற்ஸர்லாந்து தமிழ்க் கல்விச் சேவையால் வருடாந்தம் நடத்தப்படும் தமிழ்மொழிப் பொதுத்தேர்வு 23 ஆவது வருடமாக நேற்று முன்தினம் சனிக்கிழமை சுவிற்ஸர்லாந்தில் நாடு தழுவிய ரீதியில் 62 நிலையங்களில் சிறப்புற நடைபெற்றது.

இந்தத் தேர்வில் முதலாம் வகுப்புத் தொடக்கம் பதினோராம் வகுப்பு வரையில் கல்விபயிலும் 5 ஆயிரத்து 300 மாணவர்கள் பங்குபற்றினர். எழுத்துத் தேர்வுடன் இவ் வருடம் முதல் புலன்மொழித் தேர்வுகளும் நடத்தப் பெற்றன.

இந்தக் கல்வியாண்டுமுதல் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பதினோராம் வகுப்புத் தேர்வில் 164 மாணவர்கள் தோற்றியமை சிறப்பாகும். தமிழ்க் கல்விச்சேவையால் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பாட நூல்கள் தாய்மொழிக் கல்வியில் தமிழ்க் குழந்தைகளின் ஈடுபாட்டை அதிகரித்துள்ளது. இந்தத் தேர்வின்போது தமிழ்ப் பள்ளிகளின் முதல்வர்கள், ஆசிரியர்கள் மற்றும் உதவி ஆசிரியர்கள் மேற்பார்வையாளர்களாகக் கடமை புரிந்தனர்.

குறிப்பாக, பழைய மாணவர்கள் இந்தப் பணியில் அக்கறையுடன் பங்கெடுத்துக் கொண்டனர். தமிழ்க் குழந்தைகள் தாய் மொழிக் கல்வியில் காட்டும் ஆர்வமும் தாய்மொழி மீது பற்றுக்கொண்ட பெற்றோரின் ஊக்கமும் தமிழ்மொழிக் கல்வி வளர்ச்சிக்குப் பெரிதும் உறுதுணையாக உள்ளது. இந்தத் தேர்வு நிறைவாக நடைபெற உழைத்த அனைவருக்கும் தமிழ்க் கல்விச் சேவை நன்றி தெரிவிக்கிறது.

சுவிற்ஸர்லாந்து நாட்டில் வாழும் தமிழ்க் குழந்தைகள் அனைவரும் தமது தாய் மொழியைக் கற்பதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பது கல்விச் சேவையின் நோக்கமாகும்.

தமிழ் ஆசிரியர்களின் கற்பித்தல் திறனை அதிகரிப்பதற்கும் தமிழ்க் குழந்தைகள் விருப்பத்துடன் தமது தாய்மொழியைக் கற்பதற்கு ஏற்ற சூழலை உருவாக்குவதற்கும் கல்விச் சேவை நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. (எ)

# நெதர்லாந்தில் நடைபெற்ற நாட்டுப்பற்றாளர் நிகழ்வு





நெதர்லாந்தில் அல்மேரா நகரில் அகிம்சையின் அன்னையான அன்னை பூபதியின் 29 ஆம் ஆண்டு நினைவேந்தலும் நாட்டுப் பற்றாளர்களுக்கான வணக்க நிகழ்வும் கடந்த 29 ஆம் திகதி இடம்பெற்றது. இந்த நிகழ்வில் அன்னை பூபதி மற்றும் நாட்டுப் பற்றாளர்களின் வீரவணக்க நிகழ்வும் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிறேடா நகரில், ஆனந்தபுரத்தில் ஆகுதியான வீரமறவர்களுக்கான வீர வணக்க நிகழ்வும் நெதர்லாந்து வாழ் தமிழ் மக்களால் நினைவு கூரப்பட்டது.

இந்த நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக பொதுச் சுடர் ஏற்றப்பட்டு வீர வணக்கநிகழ்வு ஆரம்பமானது. தொடர்ந்து தேசியக்கொடி மற்றும் சுடர் வணக்கம், மலர்வணக்கம், அகவணக்கத்தைத் தொடர்ந்து தமிழமுதம் இசைக்குழுவின் எழுச்சி கானங்களும் மற்றும் சிறப்புரைகளும் இடம் பெற்றன.

இந்த நிகழ்வின் இறுதியில் தமிழரின் தாரக மந்திரமான நம்புங்கள் தமிழீழம் நாளைபிறக்கும் என்ற பாடலுடன் நிகழ்வு நிறைவு பெற்றது.(எ)







# ஜேர்மன் தமிழ் கல்விக் கழகத்தின் 27 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு




ஜேர்மனியில் தனது நிர்வாகக் கட்டமைப்புக்குட்பட்ட 120 இற்கும் மேற்பட்ட தமிழாலயங்களின் நிமிர்வின் உயர்வு மீண்டும் உறுதியாகியுள்ளது.

கடந்த 27 ஆண்டுகள் ஜேர்மனி முழுவதிலும் பரந்து விரிந்து வாழும் தமிழ்ப் பிள்ளைகளுக்கு தமிழ்மொழியையும் பண்பாடுகளையும் கற்றுக்கொடுத்த பெருமையோடு 27 ஆவது ஆண்டு நிறைவு விழாவைத் தமிழ் கல்விக் கழகம் கடந்த இருவாரங்களாக நடத்தி வருகின்றது.

விழாவுக்கு முதன்மை விருந்தினர்களாக யாழ். பல்கலைக் கழகத்தின் வாழ்நாள் பேராசிரியர் அருணாசலம் சண்முகதாஸ் மற்றும் அவரின் துணைவியார் முனைவர் திருமதி. மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். அவர்களுடன் சிறப்பு விருந்தினராக தமிழர் ஒருங்கிணைப்புக் குழு ஜேர்மனிக் கிளையின் பொறுப்பாளர் யோஸ்பிள்ளை சிறீ ரவீந்திரநாதன் கலந்து சிறப்பித்தார்.

விழாக்களின் வரிசையில் கடந்த 29 ஆம் திகதி சனிக்கிழமை வட மத்திய மாநிலத்துக்கான விழா கற்றிங்கன் நகரிலும் கடந்த 30 ஆம் திகதி ஞாயிற்றுகிழமை மத்திய மாநிலத்துக்கான விழா டில்லன்பூர்க் நகரிலும் நடைபெற்றது.

விழாக்களில் தமிழாலயங்களின் மாணவர்கள் பல்வகையான கலை நிகழ்வுகளை வழங்கி விழாவை மெருகூட்டினர்.

தமிழ்த்திறன், கலைத்திறன், பொதுத் தேர்வு போன்ற போட்டிகளில் ஜேர்மனி தழுவிய மட்டத்தில் முதல் மூன்று நிலைகளை அடைந்த மாணவர்கள் விழா மேடைகளில் சிறப்பாக மதிப்பளிக்கப்பட்டனர்.

அத்துடன் மூன்று விடயங்களிலும் அதிக மதிப்பெண்களைப் பெற்ற தமிழாலயங்களும் விழாவில் சிறப்பான மதிப்பளிப்பைப் பெற்றன. விழாவின் உச்ச நிகழ்வாகக் கடந்த ஆண்டு 12 ஆம் ஆண்டை நிறைவு செய்து சித்தியடைந்த 228 மாணவர்களுக்குப் பேராசிரியர் சண்முகதாஸ் அவரதுதுணைவியார் சண்முகதாஸ் ஆகியோர் சிறப்பாக மதிப்பளித்தனர்.

5, 10, 15 ஆண்டுகள் தமிழாலயங்களில் ஆசிரியப்பணியாற்றும் ஆசிரியர்கள் சிறப்பாக மதிப்பளிக்கப்பட்டமையுடன், 20 ஆண்டுகள் தொடர்ச்சியாகப் பணியாற்றியவர்களுக்கு தமிழ்வாரிதி என்றும் 25 ஆண்டுகள் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு தமிழ்மாணி என்றும் பட்டம் வழங்கி மதிப்பளிக்கப்பட்ட நிகழ்வு தமிழ்க் கல்விக் கழகத்தின் நிமிர்வின் உயர்வுக்குச் சான்று கூறியது. (எ)

## இரு அணிகளும் இணைய வேண்டும் என்பதில் பலதரப்பினரும் ஆர்வம்:

# பன்னீர் - பழனி தனியாகப் பேச வேண்டும்; அ.தி.மு.க தொண்டர்களின் விருப்பம் இதுவே!





அ.தி.மு.க. அணிகள் இணைவதில் உள்ள சிக்கல் தீர, முதல்வர் பழனிச்சாமியும் முன்னாள் முதல்வர் பன்னீர்செல்வமும், தனியாக சந்தித்து பேச வேண்டும் என கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் விருப்பம் தெரிவித்து உள்ளனர். இந்நிலையில் இது தொடர்பாக, இருவரும் ஆலோசித்து வருகின்றனர் என தகவல் வெளியாகி உள்ளது.

அ.தி.மு.கவின் இரு அணிகளும் இணைய வேண்டும் என நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் விரும்புகின்றனர்: சசிகலா ஆதரவு சட்டசபை உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள் சிலர் மட்டும் விரும்பவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

### நிபந்தனை

இணைப்பு பேச்சு நடத்துவதற்கு இரு அணிகளிலும் குழு அமைக்கப்பட்டதும், இருதரப்பிலும் மகிழ்ச்சி ஏற்பட்டது. ஆனால், பேச்சு தொடங்க, பன்னீர் அணி, இரு முக்கிய நிபந்தனைகளை விதித்தது. சசிகலா குடும்பத்தை நீக்க வேண்டும். ஜெயலலிதா மரணத்தில் உள்ள மர்மம் குறித்து, மத்திய புலனாய்வு விசாரணைக்குப் பரிந்துரை செய்ய வேண்டும் என பன்னீர் அணிசார்பில் நிபந்தனை விதிக்கப்பட்டது. இதை, சசிகலா அணியினர் ஏற்கவில்லை. நிபந்தனையின்றி பேச முன்வர வேண்டும் என நிராகரித்தனர்.

இதற்கிடையில், இரு அணிகள் இணைப்பு நடைபெற, முதல்வர் பழனிச்சாமியும், முன்னாள் முதல்வர் பன்னீர்செல்வமும், தனித்துப் பேச வேண்டும் என கட்சி நிர் வாகிகள் சிலர் வலியுறுத்தி உள்ளனர்.

இது தொடர்பில் கட்சி நிர்வாகிகள் சிலர் தெரிவிக்கையில்-

இரு அணிகளும் இணைவதற்குத் தடையாக இருப்பது முதல்வர் பதவி. பன்னீர் அணியினர் முதல்வர் மற்றும் பொதுச் செயலர் பதவிகள் தங்களுக்கு வேண்டும் என்கின்றனர். முதல்வர் பதவியை துறக்க பழனிச்சாமி தயாராக இல்லை. பொதுச் செயலர் பதவியை விட்டுக் கொடுக்கத் தயாராக உள்ளார். அதைப் பன்னீர் அணியினர் ஏற்கவில்லை.

தற்போதைய முதல்வர் பழனிச்சாமி, சசிகலாவால் நியமிக்கப்பட்டவர். அவரின் கீழ் பன்னீர் அணியினர் இணைந்தால், சசிகலாவை ஏற்றுக் கொண்டதாகிவிடும். ஜெயலலிதாவால், இரு முறை முதல்வராக்கப்பட்டவர் பன்னீர் செல்வம். அவரைத் தொண்டர்களும் மக்களும் ஏற்று கொண்டனர். முதல்வர் மற்றும் பொதுச் செயலர் பதவியை, பன்னீர் செல்வத்துக்கு வழங்க வேண்டும். பழனிச்சாமிக்குத் துணை முதல்வர் பதவியை வழங்கலாம் என பன்னீர் தரப்பினர் ஆலோசனை கூறி உள்ளனர். அதை, பழனிச்சாமி தரப்பினர் ஏற்கவில்லை. இதன் காரணமாக, கருத்து வேறுபாடு நிலவுகிறது. இருவரும் அமர்ந்து பேசினால் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணலாம்.

இரு அணிகளும் இணைந்தால் எதிர்ப்புக் குரல் கொடுக்கத் தினகரன் ஆதரவாளர்கள் முயற்சிப்பர். ஆட்சி கலைந்தால், சசிகலா குடும்பத்துக்கும் சிக்கல் ஏற்படும் என்பதால், அவர்கள் அமைதியாக இருக்க வாய்ப்பு அதிகம். எனவே, முதல்வர் பழனிச்சாமியும், பன்னீர் செல்வமும் தனியாக சந்தித்துப் பேச வேண்டும். வேறு யாரையும் உடன் வைத்துக் கொள்ளக் கூடாது. -என்றனர்.

### முதல்வருடன் திவாகரன் பேச்சு

சசிகலா குடும்பத்தினரில் சிலர் அ.தி.மு.கவின் இரு அணிகள் இணைவதை விரும்புகின்றனர். இது தொடர்பாக, சசிகலாவின் தம்பி திவாகரன், முதல்வர் பழனிச்சாமியுடன் தொலைபேசியில் பேசினார் எனக் கூறப்படுகிறது. அப்போது, 'யாரையும் நம்பாமல், நீங்களும், பன்னீர்செல்வமும் சந்தித்துப் பேசுங்கள். இருவரும் இணைந்தால் தான் அனைவருக்கும் நல்லது' எனக் கூறினார் எனத் தகவல் வெளியாகி உள்ளது. (ச)

# பலிக்காது பன்னீரின் கனவு!

## அமைச்சர் ஜெயக்குமார் தெரிவிப்பு



சட்டப் பேரவைக்கான தேர்தல் விரைவில் இடம் பெறும் என்ற பன்னீர்செல்வத்தின் கனவு பலிக்காது என அமைச்சர் ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

சென்னை தியாகராய நகரில் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தேர்தல் ஒன்றுக்கான அவசியம் தற்போது ஏற்படவில்லை. இந்நிலையில் பன்னீர்செல்வம் சட்டப்பேரவைக்கு விரைவில் தேர்தல் நடைபெறும் என தெரிவித்து வருகின்றமையானது, குழப்பத்தை ஏற்படுத்தும். எதிர்காலத்தில் இரு அணிகளும் இணைந்து செயற்பட வேண்டும் என்பதே எங்களுடைய விருப்பம்.

தமிழகத்தில் சட்டம் மற்றும் ஒழுங்குகள் சிறப்பாக உள்ளன. முன்னாள் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் மரணம் குறித்து பன்னீர்செல்வம் தெரிவித்துவரும் கருத்துக்கள் ஏற்றுக் கொள்ள முடியாதவை. தமிழகத்தில் ஆட்சி சிறப்பாக வேநடந்து வருகின்றது. தற்போது 27 ஆயிரம் கோடி ரூபா அளவுக்கு தமிழகத்தில் வளர்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.- என்றார். (ச)

# கொடநாடு பங்களா காவலாளி கொலை வழக்கு: குற்றப் பத்திரிகைத் தயாரிப்புப் பணி ஆரம்பம்!

முன்னாள் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுக்குச் சொந்தமான கொடநாடு பங்களாவில் இடம்பெற்ற கொலை மற்றும் கொள்ளை வழக்கின் குற்றப்பத்திரிகை தயாரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொடநாடு பங்களா காவலாளி கொலை மற்றும் கொள்ளை வழக்கில் 11 பேர் ஈடுபட்டிருப்பதை பொலிஸார் உறுதி செய்துள்ளனர். இதில் இதுவரை 8 பேரைக் கைது செய்துள்ளனர். இந்த வழக்கின் முக்கிய குற்றவாளியான ஜெயலலிதாவின் முன்னாள் சாரதி கனகராஜ் விபத்தில் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், இந்த வழக்கில் முக்கிய ஆதாரமாக கொள்ளையர்கள் தப்பிச் சென்ற வாகனம் சேரிங்கிராஸ் வீதியில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்புக் கமராவில் பதிவாகி உள்ளது. இந்தக் காட்சிகளையும், மேலும் வேறு கமராக்களில் கிடைத்த காட்சிகள் மற்றும் இன்னும் பல ஆதாரங்களையும் இணைத்துக் குற்றப்பத்திரிகை தயாரிக்கப்பட்டு வருகிறது.

அத்துடன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் மற்றைய கொடநாடு பங்களா காவலாளியின் வாக்குமூலம் பெறப்பட்டதும், குற்றப் பத்திரிகை விரைவில் நீதிமன்றில் தாக்கல் செய்யப்படும் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நீலகிரி மாவட்டம், கோத்தகிரி அருகே முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவுக்குச் சொந்தமான கொடநாடு பங்களாவில் கடந்த 24 ஆம் திகதி இடம்பெற்ற கொள்ளை முயற்சியில் பங்களாவின் காவலாளி ஓம் பகதூர் என்பவர் கொல்லப்பட்டார். அத்துடன், மற்றொரு காவலாளியான கிருஷ்ண பகதூர் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# விஷவாயு தாக்கி டில்லி துக்ளகாபாத்தில் 450 மாணவிகள் மருத்துவமனைகளில்!



புதுடில்லி,மே08

டில்லியில் கொள்கலன் கிடங்கில் இருந்து கசிந்த விஷவாயு தாக்கி 450 மாணவிகளுக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டது. அவர்கள் அங்குள்ள மருத்துவ மனைகளில் சேர்க்கப்பட்டனர்.

டில்லியின் தென் கிழக்கு பகுதியான துக்ளகாபாத்தில் சுங்க இலாகாவின் கொள்கலன் கிடங்கு அமைந்துள்ளது. அதன் அருகே ராணி ஜான்சி மகளிர் பள்ளி மற்றும் அரசு பெண்கள் பள்ளி என 2 பாடசாலைகள் உள்ளன. இந்தப் பாடசாலைகளில் நடைபெற இருந்த ஒரு தேர்வுக்காக நேற்று முன்தினம் சனிக்கிழமை ஏராளமான மாணவிகள் சென்றனர்.

இதன்போது இந்த கொள்கலன் கிடங்கில் இருந்து காலை சுமார் 7.30 மணியளவில் திடீரென விஷவாயு கசிந்தது.

இதைச்சுவாசித்த மாணவிகளுக்கு கண் எரிச்சல், மூச்சுத்திணறல் மற்றும் வயிற்றுவலி ஆகிய பல்வேறு உபாதைகள் ஏற்பட்டன. இதனால் சுமார் 450 மாணவிகள் கடும் அவதிக்கு உள்ளாகினர்.

இந்நிலையில், அருகில் உள்ள தீயணைப்பு நிலையத்துக்கு தகவல் கொடுக்கப்பட்டது.

இதனையடுத்து அவர்கள் பள்ளிகளில் இருந்த மாணவிகளையும், ஆசிரியர்களையும் மீட்டு வைத்தியசாலைகளில் சேர்த்தனர்.

சுங்க இலாகாவின் கிடங்கில் வைக்கப்பட்டு இருந்த ஒரு கொள்கலனில் இருந்து தான் இந்த விஷவாயு கசிந்தமை பொலிஸ் விசாரணையில் கண்டுபிடிக்கப்பட்டது. சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அந்த கொள்கலனில் இருந்த இரசாயனப் பொருளை எடுத்து அரியானாவுக்கு ஆய்வுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், விஷ வாயு தாக்கி மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ள மாணவிகளை டில்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் சந்தித்து ஆறுதல் கூறியுள்ளார். (ச)

# காதலியுடன் சேர்த்து வைக்குமாறு பிரதமர் மோடிக்கு வந்த கடிதம்!

இந்தியாவில் காதலியுடன் சேர்த்து வைக்க உதவுமாறு பிரதமர் மோடிக்கு இளைஞர் ஒருவர் கடிதம் அனுப்பியுள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நாட்டில் நிகழும் முக்கிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண, அல்லது பிரதமரின் கவனத்துக்குக் கொண்டு செல்லும் வகையில், நாடு முழுவதிலும் இருந்து பிரதமர் அலுவலகத்துக்கு தினமும் ஆயிரக்கணக்கான கடிதங்கள் அனுப்பப்படுகின்றன.

இந்தக் கடிதங்களை மேற்பார்வையிட பிரதமர் அலுவலகத்தில் சிறப்புக்குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

முக்கிய விவகாரங்கள் மட்டுமின்றி பிரதமருக்கு அடிக்கடி சுவாரஸ்யமான கடிதங்களும் அவ்வப்போது அனுப்பப்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

சில தினங்களுக்கு முன்னர் பஞ்சாப் மாநிலத்தின் தலைநகரான சண்டிகரைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் பிரதமருக்கு விநோதமான கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அதில், 'இந்திய பிரதமர் மோடி அவர்களுக்கு, நான் ஒரு பெண்ணை மனதாரக் காதலிக்கிறேன். ஆனால், இதனை பெண்ணின் பெற்றோர்கள் ஏற்க மறுக்கிறார்கள். நீங்கள் சண்டிகர் நகருக்கு வருகை தரும்போது என்னுடைய காதலியின் பெற்றோருடன் பேச்சு நடத்தி எங்கள் இருவரையும் சேர்த்து வைக்க வேண்டும்' என அந்த இளைஞர் பிரதமர் மோடிக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தத் தகவலைப் பிரதமர் அலுவலக அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர். இதுபோன்று காதலுக்காகப் பிரதமருக்கு கடிதம் அனுப்பியுள்ளமை இதுவே முதல் முறை எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ச)

## தீவிரவாதிகள் 350 பேர் ஊடுருவல் பிரிட்டனுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல்

ஐ.எஸ். தீவிரவாதிகளுடன் இணைந்து சிரியாவில் தாக்குதல் நடத்தி வந்த சுமார் 350 தீவிர வாதிகள் பிரிட்டனுக்குள் நுழைந்துள்ளனர்.

எனவே பிரிட்டன் பெரிய பயங்கரவாத அச்சுறுத்தலுக்கு முகம் கொடுத்துள்ளதாக அந்த நாட்டின் பாதுகாப்புச் சேவை எச்சரிக்கை விடுத்துள்ளது.

'தக்பிர்' என்ற குழுவுடன் இணைந்து போராட பிரிட்டனை விட்டு வெளியேறிய பயங்கரவாதிகள், மீண்டும் பயங்கரவாதக் குழுவாக நாட்டுக்குள் புகுந்துள்ளனர் என்று பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பிரிட்டனுக்குள் நுழைந்துள்ள பயங்கரவாதிகளை முழுமையாக காண காணிப்பது, பாதுகாப்புப் படைகளுக்கு முடியாத காரியமாகும்.

அண்மையில் பிரிட்டன் நாடாளுமன்றத்துக்கு வெளியே காரை ஒன்றை செலுத்தி வந்து மேற்கொண்ட தாக்குதலில் நான்கு பேர் கொல்லப்பட்டனர்.

அதை அடுத்து பொலிஸார் ஒருவரை கத்தியால் குத்திய சம்பவத்தின் பின்னர் பிரிட்டனின் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

## தன்சானியாவில் பஸ் விபத்து; மாணவர்களுடன் 35 பேர் சாவு!

டோடோமா, மே 08

ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான தன்சானியாவில் நேற்று முன்தினம் இடம் பெற்ற பஸ் விபத்தில் மாணவர்கள் உட்பட 35 பேர் உயிரிழந்துள்ளனர்.




கிழக்கு ஆபிரிக்கா நாடான தான்சானியாவின் அருஷா மாகாணத்திலுள்ள பாடசாலையில் கல்வி பயின்றுவரும் ஆரம்பப்பள்ளி மாணவர்கள் பரீட்சை எழுதுவதற்காக பஸ் ஒன்றில் ஆசிரியர்களுடன் சென்று கொண்டிருந்தார்கள். பஸ் மியாட்டு மாவட்டத்தில் உள்ள மிலேரா ஆற்றங்கரை யோரம் அருகில் உள்ள வீதியில் சென்று கொண்டிருந்தது.

அப்போது திடீரென சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த பஸ் ஆற்றங்கரையோரம் உள்ள பெரிய பள்ளத்தில் உருண்டு விழுந்தது. இதில் இரண்டு ஆசிரியர்கள், 32 மாணவர்கள் மற்றும் பஸ் சாரதி என 35 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

இந்தச்சம்பவம் தொடர்பில் தகவலறிந்த அந்த நாட்டு ஜனாதிபதி ஜோன் மகுபுலி, இறந்தவர்களின் குடும்பத்துக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

இந்த விபத்தில் உயிரிழந்த மாணவர்கள் அனைவரும் 12 - 13 வயதுடையவர்கள் என்று அந்நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## போகோ ஹராம் அமைப்பால் கடத்தப்பட்ட பாடசாலை மாணவிகள் 82 பேர் விடுவிப்பு!



நைஜீரியாவில் செயற்பட்டு வரும் இஸ்லாமிய ஆயுதக் குழுவினரான போகோ ஹராம் ஆயுததாரிகள், தங்கள் கட்டுப்பாட்டிலிருந்த 82 பாடசாலை மாணவிகளை விடுவித்துள்ளனர்.

கடந்த 3 வருடங்களுக்கு முன்பு அந்த அமைப்பால் கடத்திச் செல்லப்பட்ட 276 சிறுமிகளில் 82 பேரை அவர்கள் விடுவித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை அந்த நாட்டு ஜனாதிபதி அலுவலகம் உறுதிப்படுத்தியுள்ளது.

அரசு மற்றும் போகோ ஹராம் குழுவினருடன் தொடர்ந்தும் பேரம் பேசப்பட்டதை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது போகோ ஹராம் அமைப்பைச் சேர்ந்தவர்களும் பரிமாற்றப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு பரிமாற்றப்பட்டவர்களின் எண்ணிக்கை குறித்த விபரங்கள் இதுவரை வெளியிடப்படவில்லை.

இதேவேளை, விடுவிக்கப்பட்ட மாணவிகள் நைஜீரிய ஜனாதிபதி முஹம்மது புகாரியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று அந்நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

2014 ஆம் ஆண்டு இடம்பெற்ற இந்த கடத்தல் சம்பவம் சர்வதேசத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

## வெனிசுலா பெண்கள் நடத்திய போராட்டம்!




நாட்டின் பொருளாதாரத்தை சீர்குலைத்துவிட்ட ஜனாதிபதி நிக்கோலஸ் மடுரோவை நீக்கும் வகையில் உடனடியாகத் தேர்தல் நடத்த வேண்டும் என்ற கோரிக்கையுடன் வெண்ணிற ஆடைகளுடன் கைகளில் ரோஜாப் பூக்களை ஏந்தி வெனிசுலா பெண்கள் நூதனப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## வறுமையின் காரணமாகவே மக்கள் இணைகின்றனர் ஆயுதக் குழுக்களில்!

### ஐ.நா. அறிக்கையில் தெரிவிப்பு

போர்ச்சூழல் மிக்க நாடுகளில் வறுமையில் வாடும் மக்களே ஆயுதம் ஏந்திய போராளிக் குழுக்களில் அதிகம் இணைகின்றனர் என்று ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டில் வறுமையும், பசியுமே எஞ்சியிருப்பதால் தான் மக்கள் வேறு நாடுகளுக்கு பெரிய அளவில் அகதிகளாகச் செல்கின்றனர் என்று அந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

உணவுப் பாதுகாப்பின்மை ஒவ்வொரு சதவீதம் அதிகரிக்கும்போதும் ஒரு நாட்டிலிருந்து வெளியேறும் மக்கள் தொகை விகிதம் 1.9 சதவீதமாக இருக்கிறது.



யேமன், சோமாலியா, தெற்கு சூடான், வடகிழக்கு நைஜீரியா ஆகிய நாடுகளில் நிலவும் போர்ச்சூழல் காரணமாக சுமார் 2 கோடி மக்கள் வறுமையால் உயிரிழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. மேலும் உலகம் முழுதும் 10 கோடிக்கும் அதிகமானோர் போதிய ஊட்டச்சத்து இன்றி வாழ்கின்றனர்.

2015 ஆம் ஆண்டு மட்டும் சுமார் 65 கோடி 3 லட்சம் மக்கள் தங்கள் சொந்த நாடுகளை விட்டு புலம்பெயர்ந்துள்ளனர். மேலும், சுமார் 16 லட்சம் அகதிகள் 2014-2016 ஆண்டு வரை ஐரோப்பிய ஒன்றியத்துக்குப் புலம்பெயர்ந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த அறிக்கைதான் வறுமை, பசி ஆகியவற்றுக்கும் புலம்பெயர்வதற்குமான தொடர்பை விளக்கும் ஒட்டுமொத்தமான முதல் அறிக்கை என்று கூறப்படுகிறது. (எ)

## பிலிப்பைன்ஸ் கொலைகள் தொடர்பில் விசாரணை நடத்தப்படும்


பிலிப்பைன்ஸ் கொலைகள் தொடர்பில் விசாரணை நடத்தப்படும் என்று ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் விசேட பிரதிநிதி அக்னஸ் கொலமார்ட் பிலிப்பைன்ஸுக்கு திடீரென பயணம் செய்துள்ளார்.

இந்தப் பயணத்தின் போது கூட்டு கொலைகள் தொடர்பில் விசாரணை நடத்தப்படும் என்று தெரிவித்துள்ளார். பிலிப்பைன்ஸின் ஜனாதிபதி ரோட்றிகோ டுரேரெ பதவி ஏற்றுக் கொண்டதன் பின்னர் ஆயிரக்கணக்கானவர்கள் கொலை செய்யப்பட்டிருந்தனர்.

போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளுக்காக திட்டமிட்ட வகையில் பிலிப்பைன்ஸில் கொலைகள் இடம்பெற்று வருகின்றன என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

# ஆஸியில் சாதித்தார் தர்ஜினி சிவலிங்கம்!



கொழும்பு, மே 08

உலகின் உயர்ந்த வலைப் பந்தாட்ட வீராங்கனையான தர்ஜினி சிவலிங்கம், தான் வலைப்பந்தாட்டத் திடலினுள் அடியெடுத்து வைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தின் போதும் பெரிய தாக்கத்தினை ஏற்படுத்துகின்றார்.

இலங்கையின் சிறந்த வலைப்பந்தாட்ட வீராங்கனையான இவர் தற்போது தனது புதிய கழக அணியான சிற்றி வெஸ்டர் பெல்கன்ஸ் அணியுடன் இணைந்து களத்தினுள்ளேயும், வெளியேயும் பல இலக்குகளை எட்டுவதற்கான முனைப்பிலுள்ளார்.

பெல்கன்ஸ் அணி தமது புதிய வீராங்கனையை விக்டோரியன் வலைப்பந்தாட்ட லீக் சுற்றுத்தொடரின் முதற்சுற்றில் அறிமுகப் படுத்தியிருந்தது.

பெல்கன்ஸ் அணியின் பயிற்றுவிப்பாளர் மார்க் லின்ட் ஆஸ்திரேலியாவில் விளையாடுவதற்கு வாய்ப்பு பெற்றிருக்கும் தர்ஜினி உண்மையிலேயே திறமையான வீராங்கனை என்று தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உலகின் உயர்ந்த வலைப் பந்தாட்ட வீராங்கனையான தர்ஜினிக்கு வாழ்க்கையானது அவ்வளவு எளிதானதாக அமைந்திருக்கவில்லை.

அது ஒரு நீண்ட கதை, அவர் உண்மையிலேயே தனது உயரம் காரணமாக பலத்த சிரமத்திற்குள்ளானதே அதிகம்.

அவர் தனது இளமைக் காலத்தில் தனது உயரம் காரணமாக கேலிக்கைகளுக்கும், தொந்தரவிற்கும் உள்ளாகியுள்ளார். இன்றும் கூட இலங்கையிலுள்ள சிலர் அவரது உயரத்தைப் பார்த்து நகைத்துக் கொண்டே உள்ளனர்.

தர்ஜினி தனது முன்னாள் பயிற்றுவிப்பாளரான திலகா ஜினதாஸ, லின்ட் மற்றும் பெல்கன்ஸ்ஸின் துணைப் பயிற்றுவிப்பாளர் நிக்கோலி றிச்சர்ட்சன் ஆகியோருடன் வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்றின் போது மேற்கொண்ட கலந்துரையாடலினூடாகவே பெல்கன்ஸிற்கு விளையாடும் வாய்ப்பைப் பெற்றார்.

கலந்துரையாடலினூடாக நாங்கள் தர்ஜினி இலங்கையில் விளையாடி தனது காலத்தை வீணடிப்பதாக அறிந்தோம்.

அதன் பின்னர் அவரை மின்னஞ்சல் ஊடாக தொடர்புகொண்டு ஆஸ்திரேலியாவில் எம்முடன் இணைந்து ஓராண்டு காலம் விளையாடுவதற்கான வாய்ப்பினை வழங்கியிருந்தோம்.

லின்ட் பெல்கன்ஸ் அணியின் பிரதான நோக்கம் தர்ஜினியை அடுத்த கட்ட சுற்றுத்தொடர்களுக்கு எடுத்துச்செல்வதாகும்.

சண்கோர்ப் சுப்பர் வலைப் பந்தாட்டத் தொடரில் வெஸ்ற் கோஸ்ற் பீவர் அணியானது, இப்பருவ காலப் போட்டிகளிற்கு தமது அணிக்கு உயர்ந்த சூட்டரிற்கான தேவை ஏற்படின் இவரையே நாடவுள்ளது.

பீவர் அணியின் துணைப் பயிற்றுவிப்பாளரான றிச்சர்ட்சன், தர்ஜினியின் விஷேட பயிற்றுவிப்பாளராகச் செயற்படுகின்றார்.

தர்ஜினியை முடிந்தளவு விரைவாக ஆஸ்திரேலிய முறைக்கு பழக்கப்படுத்தி, அவரை அடுத்த கட்டத்தில் விளையாடுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்துவோம்- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தர்ஜினி பெல்கன்ஸிற்கு விளையாடுவது அவருக்கு மட்டும் நன்மை இல்லை, அவர் இலங்கை தேசிய அணிக்காக 10 வருடங்கள் வரை விளையாடியுள்ளார். சில காலங்களில் அணியின் தலைவராகவும் பதவி வகித்துள்ளார். இந்த அனுபவம் பெல்கன்ஸிற்கு பெரிதும் கைகொடுக்கும்.

தர்ஜினி 2011 ஆம் ஆண்டு உலக வலைப் பந்தாட்ட வெற்றிக்கிண்ண தொடரில் சிறந்த சூட்டர் விருது வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

வலைப்பந்தாட்டச் சம்மேளனத்துள்ளான அரசியல் நிலமைகள் காரணமாக இலங்கைத் தேசிய வலைப் பந்தாட்ட அணிக்கு தர்ஜினி அண்மைக்காலமாகத் தெரிவு செய்யப்பட வில்லை.

அவர் தேசிய அணிக்கு மீண்டும் விளையாடுவதை மிகவும் விரும்புகின்றார். அவ்வாறே, ஆஸ்திரேலியாவின் முதற்தர தொடரான சண்கோர்ப் சுப்பர் நெற்போல் தொடரிலும் விளையாடுவதற்கு ஆவலாகவுள்ளார்.

லின்ட் மற்றும் நிக்கோலி ஆகியோர் நான் அவர்களது கழகத்திற்கு(பெல்கன்ஸ்) விளையாடுவதனை விரும்பினர். எனக்கும் என்னை முன்னேற்றுவதில் விருப்பம் இருந்தது. ஆகவே, சம்மதம் தெரிவித்துவிட்டேன் என்று தர்ஜினி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நான் எப்போதும் வலைப் பந்து விளையாடுவதையும், நட்பு வட்டத்தினை விஸ்தரித்துக் கொள்வதையும் விரும்புகின்றேன்.

ஆஸ்திரேலியாவில் இருப்பது நன்றாகவிருக்கின்றது. நல்ல மனிதர்கள் நிறையவே இருக்கின்றனர்.- என்றும் தெரிவித்துள்ளார்.

2012 ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவின் பேர்த் நகருக்கு எற்கனவே சென்றிருந்த தர்ஜினி, தற்போது ஆஸ்திரேலியா சென்றிருப்பது இரண்டாவது தடவையாகும்.

தர்ஜினிக்கு ஆரம்பகாலத்தில் ஆஸ்திரேலியாவில் இவ்வாறான வாய்ப்பினை ஏற்படுத்த முடியவில்லை என்பதையிட்டு பெல்கன்ஸ் அணியின் பயிற்றுவிப்பாளர் மாக் லின்ட் வருத்தம் தெரிவித்துள்ளார்.

அவரை 10 அல்லது 15 வருடங்களுக்கு முன் எவரும் கண்டுகொள்ள வில்லை, அவர் றொமெல்டா ஏய்க்கென் போன்று உருவாகியிருக்க வேண்டியவர் என்றும் தெரிவித்துள்ளார்.

# சம்பியன்ஸ் கோப்பை போட்டியில் இந்திய அணி பங்கேற்குமா?

புதுடில்லி, மே 08

சம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி பங்கேற்குமா? என்பது குறித்து இந்திய கிரிக்கெட் சபை சிறப்பு பொதுக்குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப் படவுள்ளது.

இந்திய கிரிக்கெட் சபையின் எதிர்ப்பையும் மீறி வருவாய் பகிர்வு முறையில் மாற்றம் செய்ய சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) முடிவெடுத்தது.

இதனால், அடுத்த 8 ஆண்டுகளில் இந்திய கிரிக்கெட் சபைக்கு 1,775 கோடி ரூபா இழப்பு ஏற்படும் என்பதால் இங்கிலாந்தில் எதிர்வரும் ஜூன் 1 ஆம் திகதி தொடங்கும் சம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டியை புறக்கணிக்க இந்திய கிரிக்கெட் சபை நிர்வாகிகள் முடிவு செய்துள்ளனர்.

அணி அறிவிப்புக்கான காலக்கெடு (ஏப்ரல் 25 ஆம் திகதி) முடிந்தும் இந்திய அணி மட்டும் இன்னும் அறிவிக்கப்படாமல் இழுத்தடிப்புச் செய்யப் பட்டு வருகிறது.

இந்திய அணியை உடனடியாக தேர்வு செய்து அறிவிக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட இந்திய கிரிக்கெட் சபை நிர்வாக குழு, சபை நிர்வாகிகளுக்கு கடிதம் எழுதியது. சம்பியன்ஸ் கோப்பை போட்டியில் இருந்து இந்திய அணி விலகினால் தங்களுக்கு விளம்பர வருவாய் கடுமையாகப் பாதிக்கும் என்று ஒளிபரப்பும் நிறுவனமான ஸ்ரார் குழுமம் ஐ.சி.சி.க்குக் கடிதம் எழுதி இருக்கிறது.

இந்த பரபரப்பான சூழ்நிலையில் இந்திய கிரிக்கெட் சபையின் சிறப்பு பொதுக்குழுக் கூட்டம் டில்லியில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் சம்பியன்ஸ் கோப்பை போட்டியில் இந்திய அணி பங்கேற்குமா? என்பது குறித்து விவாதித்து முடிவு செய்யப்படுகிறது.

தென் மண்டலத்தை சேர்ந்த நிர்வாகிகள் போட்டியைப் புறக்கணித்து ஐ.சி.சி.க்குப் பாடம் புகட்ட வேண்டும் என்று கூறுகிறார்கள். ஆனால் வடக்கு மற்றும் கிழக்கு மண்டல நிர்வாகிகள் போட்டியில் பங்கேற்க வேண்டும் என்று வற்புறுத்தி வருகின்றனர். இரு தரப்பினருக்கும் இடையே பொதுவான கருத்து எட்டப்படாவிட்டால் குரல் வாக்கெடுப்பு நடத்தி முடிவு எடுக்கப் படும் நிலை உருவாகலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையே, சம்பியன்ஸ் கோப்பைப் போட்டிக்கான இந்திய அணி இன்று தேர்வு செய்து அறிவிக்கப்படும் என்று செய்தி வெளியாகி இருக்கிறது. இது குறித்து இந்திய கிரிக்கெட் சபை செயல் தலைவர் சி.கே.கண்ணா கருத்துத் தெரிவிக்கையில்-

'இந்திய அணி இன்று தேர்வு செய்யப்படும் என்று முடிவு செய்யப் பட்டுள்ளது. ஆனால், தேர்வுக் குழு தலைவர் கன்வீனர் அமிதாப் சவுத்ரி தனக்கு அதுபற்றி எதுவும் தெரியாது என்று மறுத்துள்ளார்' என்றும் தெரிவித்துள்ளார்.

அமிதாப் சவுத்ரி அணியைத் தேர்வு செய்வதற்கான நடைமுறையை மேற்கொள்ளாவிட்டால், இந்திய கிரிக்கெட் சபை தலைமை செயல் அதிகாரி ராகுல் ஜோரி, தேர்வு குழு தலைவர் எம்.எஸ்.கே.பிரசாத் மூலம் அணியை தேர்வு செய்ய நடவடிக்கை எடுப்பார் என்று சபை நிர்வாகி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதனால், சம்பியன்ஸ் கோப்பைப் போட்டியில் பங்கேற்பது மற்றும் இந்திய அணி தேர்வு ஆகிய 2 விவகாரங்களிலும் தொடர்ந்து குழப்பமே நீடித்து வருகிறது. இதனை சரி செய்ய நிர்வாகக் குழுவினர், சபை நிர்வாகிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.

# மலிங்கவின் புதிய சாதனை; மும்பை அணி அபார வெற்றி!



டில்லி, மே 08

10 ஆவது ஐ.பி.எல். தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இரண்டாவது போட்டியில் மும்பை இந்தியன்ஸ் மற்றும் டில்லி டேர்டெவில்ஸ் ஆகிய அணிகள் இதில் பலப் பரீட்சை நடத்தின.

இந்தப் போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற டில்லி டேர்டெவில்ஸ் அணி முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடக் களம் இறங்கிய மும்பை இந்தியன்ஸ் அணியின் லெண்டில் சிம்மன்ஸ், பார்தீவ் பட்டேல் ஆகியோர் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாகக் களம் புகுந்தனர்.

பார்தீவ் பட்டேல் நிதானமாக விளையாட சிம்மன்ஸ் அதிரடி காட்டினார். இந்த ஜோடி முதல் விக்கெட்டுக்கு 8.4 ஓவர்களில் 79 ஓட்டங்களைக் குவித்தது.

பார்தீவ் பட்டேல் 25 ஓட்டங்களை எடுத்திருந்த நிலையில் ஆட்டம் இழந்தார். அடுத்து அதிரடி துடுப்பாட்ட வீரர் கிரோன் பொல்லார்ட் களம் இறங்கினார். சிம்மன்ஸ் 43 பந்துகளில் 5 பவுண்டரிகள், 4 சிக்ஸர்களுடன் 66 ஓட்டங்களை குவித்து ஆட்டம் இழந்தார்.

பொல்லார்ட், ஹர்திக் பாண்டியா ஆகியோர் அதிரடி ஆட்டம் காட்ட மும்பை இந்தியன்ஸ் 20 ஓவர்கள் முடிவில் 3 விக்கெட்டுகள் இழப்பிற்கு 212 ஓட்டங்களைக் குவித்தது.

பொல்லார்ட் ஆட்டமிழக்காமல் 35 பந்துகளில் 5 பவுண்டரிகள், 4 சிக்ஸர்களுடன் 63 ஓட்டங்களையும், ஹர்திக் பாண்டியா ஆட்டமிழக்காமல் 14 பந்துகளில் 1 பவுண்டரி, 3 சிக்ஸர்களுடன் 29 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து 213 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் துடுப்பெடுத்தாடக் களம் இறங்கிய டில்லி அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்த அந்த அணி ஆரம்பம் முதலே விக்கெட்டுக்களை இழந்து திணறியது.

டில்லி அணி சார்பில் கே.கே. நாயர் 21 ஓட்டங்களைப் பெற்றார், மற்ற வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழக்க டில்லி அணி 13.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 66 ஓட்டங்களை மாத்திரமே பெற்று 146 ஓட்டங்களினால் தோல்வியடைந்தது.

லசித் மலிங்க இந்த விக்கெட்டுக்களின் மூலம் ஐ.பி.எல் போட்டிகளில் 150 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய ஒரு வீரராக புதிய தடம் பதித்துள்ளார்.

மும்பை அணிக்கு இது 9 ஆவது வெற்றியாக அமைந்தது. அதேவேளையில் டில்லி அணி 7 ஆவது தோல்வியைச் சந்தித்தது. இந்த தோல்வியால் அந்த அணி ‘பிளே ஓப்’ சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பை இழந்தது.

# பாகிஸ்தான் இளையோர் அணியின் ஆலோசகராகிறார் யுனிஸ்கான்!



கராச்சி, மே 08

ஐ.சி.சி.யின் 19 வயதிற்குட்பட்டோருக்கான பாகிஸ்தான் அணியின் ஆலோசகராக யுனிஸ்கான் நியமிக்கப்பட இருக்கிறார்.

டெஸ்டில் இருந்து ஓய்வு பெறுவதற்கு முன்பே வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் டெஸ்ட் கிரிக்கெட் அணியில் கடந்த 17 ஆண்டுகளாக விளையாடி வருபவர் யுனிஸ்கான். எதிர்வரும் 10 ஆம் திகதி தொடங்கும் மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிராக மூன்றாவது டெஸ்டுடன் யுனிஸ்கான் சர்வதேச அணியில் இருந்து ஓய்வு பெறுகிறார். இவர் 10 ஆயிரம் ஓட்டங்களைத் தாண்டிய முதல் பாகிஸ்தான் வீரர் என்ற பெருமையையும், சர்வதேச அளவில் 13 ஆவது வீரர் என்ற பெருமையையும் பெற்றுள்ளார்.

இவர் சர்வதேச போட்டியில் இருந்து ஓய்வு பெற்றதும், 19 வயதிற்குட்பட்டோருக்கான பாகிஸ்தான் அணியின் ஆலோசகராகப் பணியாற்ற பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கேட்டுக்கொண்டுள்ளது.

நியூஸிலாந்தில் நடைபெற இருக்கும் இளையோர் உலக கோப்பைத் தொடரில் பாகிஸ்தான் அணி சிறந்து விளங்க இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டு தொடக்கத்தில் யுனிஸ்கான் ஆலோசகராகப் பணியில் இணைவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# ஹைதராபாத்தை வீழ்த்தியது ரைசிங் புனே சூப்பர் ஜெயன்ட்!



ஹைதராபாத்தில் நடைபெற்ற போட்டியில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியை வீழ்த்தி ரைசிங் புனே சூப்பர்ஜெயன்ட் அணி ‘பிளே ஓப்’ சுற்றுக்கான வாய்ப்பைப் பிரகாசப்படுத்திக் கொண்டது.

ஐ.பி.எல். தொடரின் நேற்று முன்தினம் இடம்பெற்ற முதல் போட்டி ஹைதராபாத்தில் நடைபெற்றது. இதில் ரைசிங் புனே சூப்பர் ஜெயன்ட் மற்றும் சன்ரைசஸ் ஹைதராபாத் ஆகிய அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

இந்த போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாட களம் இறங்கிய ரைசிங் புனே சூப்பர் ஜெயன்ட் அணியின் தொடக்க வீரர்களாக ரகானேவும், திரிப்பாதியும் களம் இறங்கினர்.

அதிரடித் துடுப்பாட்ட வீரர் திரிப்பாதி 1 ஓட்டம் எடுத்த நிலையில் ரன் அவுட் முறை மூலம் ஆட்டம் இழந்தார். அத்துடன் ரைசிங் புனே சூப்பர் ஜெயன்ட் அணியின் ஓட்ட வேகத்தில் தொய்வு நிலை ஏற்பட்டது.

பென் ஸ்டோக்ஸ் மட்டும் அதிரடியாக விளையாடி 25 பந்துகளில் 3 சிக்ஸர்கள், ஒரு பவுண்டரியுடன் 39 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்.

ஸ்டீவ் ஸ்மித் 34 ஓட்டங்களும், ரகானே 22 ஓட்டங்களும் சேர்த்தனர். 5ஆவது விக்கெட்டுக்காக களம் புகுந்த தோனி 21 பந்துகளில் 31 ஓட்டங்கள் சேர்க்க ரைசிங் புனே சூப்பர் ஜெயன்ட் அணி 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 148 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

பின்னர் 149 ஓட்டிங்கள் என்ற வெற்றி இலக்குடன் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி களம் புகுந்தது.

புனே அணியின் பந்துவீச்சாளர்கள் நேர்த்தியாக பந்து வீசினர். இதனால் தொடக்க வீரர்களான சிகர் தவான் மற்றும் டேவிட் வோர்னர் ஆகியோரால் அதிரடியாக விளையாட முடியவில்லை. தவான் 12 பந்துகளில் 19 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டம் இழந்தார். அடுத்து வந்த கேன் வில்லியம்சன் 4 ஓட்டங்கள் எடுத்த நிலையில் வெளியேறினார்.

இந்த இரண்டு விக்கெட்டுக்களையும் பென் ஸ்டோக்ஸ் ஒரே ஓவரில் வீழ்த்தினார்.

அடுத்து டேவிட் வோர்னர் உடன் யுவராஜ் சிங் ஜோடி சேர்ந்தார். 34 பந்துகளில் 40 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் வோர்னர் ஆட்டம் இழந்தார்.

இதனால், சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிக்கு நெருக்கடி ஏற்பட்டது. கடைசி மூன்று ஓவர்களில் 32 ஓட்டங்கள் தேவைப்பட்டது. 18ஆவது ஓவரை உனத்கட் வீசினார். இந்த ஓவரில் யுவராஜ் சிங், நமன் ஓஜா ஆகியோரை வெளியேற்றினார். 43 பந்துகளில் 47 ஓட்டங்கள் எடுத்த நிலையில் யுவராஜ் சிங் ஆட்டம் இழந்தார்.

இந்த நிலையில் வெற்றிக்காக கடைசி இரண்டு ஓவர்களில் 22 ஓட்டங்கள் தேவைப்பட்டது. பென் ஸ்டோக்ஸ் வீசிய 19ஆவது ஓவரில் ஹைதராபாத் அணி 9 ஓட்டங்களை சேர்த்தது.

இதனால், கடைசி ஓவரில் 14 ஓட்டங்கள் தேவைப்பட்டது, இந்த ஓவரை உனத்கட் வீசினார். 2 ஆவது, 3ஆவது மற்றும் 4ஆவது என தொடர்ச்சியாக மூன்று பந்துகளில் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தி ஹாட்ரிக் சாதனை படைத்தார்.

இதனால், ரைசிங் புனே சூப்பர் ஜெயன்ட் அணி 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் புனே 8 வெற்றிகளுடன் பிளேஓஃப் சுற்றுக்கான வாய்ப்பை பிரகாசப்படுத்தியுள்ளது.

## தமிழருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் கேட்டுக் கொண்டுள்ளார்.

நாட்டின்வறட்சியைப்போக்க முன்னெடுக்கப்படும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தை, அதிகூடிய மாவட்டமான முல்லைத்தீவில் இருந்து ஆரம்பிப்பதற்கான நிகழ்வை மே 18 ஆம் திகதி முல்லைத்தீவில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தநிலையிலேயேஜனாதிபதியைப் பிறிதொரு தினத்தில் வருகைதாருங்கள் என, சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுதொடர்பாகஅவர்மேலும் தெரிவிக்கையில்–

தமிழ் மக்கள் ஒட்டுமொத்தமாக முள்ளிவாய்க்காலில் முடக்கப்பட்டு வெளிநாடுகளின் உதவியோடு பல்லாயிரக்கணக்கில் கொன்றுகுவிக்கப்பட்டனர். அவர்களின் நினைவாக தமிழ் மக்கள் வருடந்தோறும் மே 18 ஆம் திகதி முள்ளிவாய்க்காலில் சுடரேற்றி அஞ்சலி செலுத்துகின்றனர்.

ஒட்டுமொத்த தமிழினத்தையும் ஆறாததுயருக்குள்தள்ளிய அந்த முள்ளிவாய்க்கால் அவலம் தமிழினம் உள்ளவரை நெஞ்சை விட்டு அகலாது. இது ஈழத் தமிழர்கள் மட்டுமல்ல உலகத் தமிழர்களும் நினைவு கூரும்நாள். எனவே, அன்றைய தினத்தில் மக்கள் அஞ்சலி செலுத்த அனுமதித்து பிறிதொரு தினத்தில் ஜனாதிபதி வருகைதரவேண்டும்.– எனவும் நிர்மலநாதன் எம்.பி கேட்டுக் கொண்டுள்ளார். (ம-81)

## ஹெரோயின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெயரில் 40 ஆயிரம் ரூபாவை வங்கியில் வைப்புச்செய்தமைக்கான பற்றுச்சீட்டையும் பொலிஸார் யுவதியிடம் இருந்து கைப்பற்றியுள்ளனர்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள வசந்த என்ற நபர் தனக்குப் போதைப் பொருளை வழங்குவதாகவும் அதனைப் பெற்று, தான் விற்பனை செய்து வருவதாகவும் யுவதி விசாரணைகளின்போது தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட யுவதி கல்கிஸை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டு எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார். (இ)

## அரசமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முழுமையாக மாற்றம் செய்ய வேண்டும் எனக் கோரி வருகின்றன.

ஆனால், கூட்டு எதிரணியினர் மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு பகுதியினர், புதிய அரசமைப்பு உருவாக்கத்தை தொடர்ந்து நிராகரித்து வருவதும் அதேசமயம் தற்போதைய அரசமைப்பைத் திருத்தம் செய்தால் போதும் என வலியுறுத்தி வருகின்றனர்.

அரசமைப்பு தொடர்பாக எழுந்துள்ள இந்த இருவேறு நிலைப்பாடுகளில் எதை முன்னெடுப்பது என்பது தொடர்பாக இதுவரை அரசு வெளிப்படையாக எந்த அறிவித்தலையும் விடுக்கவில்லை.

இந்நிலையில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு வந்து சென்ற பின்னர், அதாவது அடுத்த இரு வாரங்களில் அரசமைப்பு தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெளிவான அறிவிப்பு ஒன்றை வெளியிடுவார் என தென்னிலங்கைத் தரப்புக்கள் தெரிவித்துள்ளன. (ம)

## தொழிற்சங்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'நல்லாட்சி' அரசின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதுளைக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

அங்குள்ள ஹொட்டல் ஒன்றின் கேட்போர் கூடத்தில் ஐக்கிய தேசியக் கட்சியினருடனான சந்திப்பிலேயே பிரதமர் மேற்படிக் கருத்தைக் கூறினார்.

கடந்த வெள்ளிக்கிழமை நாட்டில் தொழிற்சங்கப் போராட்டம் ஒன்று இடம்பெற்றபோது அலுவலகங்களுக்குச் சென்று பணியாற்றிய உத்தியோகத்தர்களுக்கு தான் நன்றி கூறுகின்றார் எனவும் அவர் தெரிவித்தார். (ம)

## முள்ளிவாய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதே மேற்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் முல்லைத்தீவு மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் தலைவி கருத்துத் தெரிவிக்கையில் :–

முள்ளிவாய்க்காலில் பல்லாயிரக்கணக்கான மக்களை அழித்தொழித்த பின்னர் யுத்தம் மௌனித்தது. இவ்வாறு அழித்தொழிக்கப்பட்ட மக்களை நினைவுகூரும் துயரமான நாளாகவே நாம் மே 18 ஆம் திகதியைக் கடைப்பிடித்து வருகின்றோம்.

மேலும், இறுதி யுத்தத்தின் போது இராணுவத்திடம் கையளிக்கப்பட்ட மற்றும் காணாமல் ஆக்கப்பட்டுள்ள எமது உறவுகளைத் தேடி நாம் தொடர் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தி வருகின்றோம்.

இவ்வாறான நிலையில், எமது வலிகளை உணராத சில இளைஞர்கள் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவது வேதனையாக உள்ளது. – என்றார்.

மனித உரிமை செயற்பாட்டாளர் செ.மயூரன் இங்கு கருத்துக் கூறுகையில்; எமது இனத்தின் சுயமரியாதை மற்றும் தன்மானத்தை இழந்த தினத்தை நினைவு கூருவதற்காக உதைபந்தாட்டப் போட்டியை நடத்துவதை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை. – என்றார்.

முள்ளிவாய்க்கால் என்ற பெயரைப் பயன்படுத்தி மே மாத் தில் எந்தவொரு நிகழ்வும் முன்னெடுக்கவேண்டாம் என மனித உரிமை செயற்பாட்டாளர் சு.சந்திரலீலா கேட்டுக் கொண்டார். (ம)

## கடவுளே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்ணீர் சொரிந்து கொண்டிருக்கும் எங்களுக்குக் கடவுளே நீ தான் அப்பா வழி காட்ட வேண்டும்."

– இவ்வாறு முல்லைத்தீவில், மாவட்டச் செயலகத்தின் முன்னால் கூடாரம் அமைத்துக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் துயரத்துடன் தெரிவித்தனர்.

இந்தப் போராட்டம் நேற்றுடன் 61ஆவது நாளாகத் தொடர்கிறது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பிலும், இறுதி யுத்தத்தின்போது படையினரிடம் சரணடைந்த மற்றும் ஆயுததாரிகளால் கடத்திச்செல்லப்பட்டதாங்களுடைய உறவுகள் தொடர்பிலும் உரிய பதிலை கடந்த எட்டு ஆண்டுகளாக வழங்காதிருப்பது ஏன்? என்றும் அவர்கள் கேட்கின்றனர். (இ-81)

# சுங்கத் திணைக்களத்தின் மோசடி குறித்து குரல் கொடுத்த தொழிற்சங்கவாதிக்கு ஆப்பு

## கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டார் அவர்

சுங்கத் திணைக்களத்தில் இடம் பெறுவதாகக் கூறப்படும் மோசடிகளுக்கு எதிராக குரல் கொடுத்து வரும் ஒரு தொழிற்சங்க தலைவருக்கு கட்டாய விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

சுங்கத்திணைக்களத்தின் பணிப்பாளர்நாயகம் சூலாநந்த பெரேரா இந்த விடுமுறையை வழங்கியுள்ளார்.

மினுவாங்கொடையில் உள்ள வாகனபொருத்துமையத்துக்கு கொண்டு வரப்பட்டதாக கூறப்படும் சட்டவிரோத வாகன உதிரிப்பாகங்கள் தொடர்பில் விசாரணையை மேற்கொண்டு வந்தநிலையிலேயே விஜயகோன் லீவில் அனுப்பபப்பட்டுள்ளார்.

எனினும் விஜயகோன் தமது வருடாந்த அனுமதிப்பத்திரத்தை புதுப்பிக்கவில்லை என்ற காரணம் காட்டியே விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ளார்.

இது சுங்கத் திணைக்கள வரலாற்றில் இடம்பெற்ற முதல் சம்பவம் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஒரு சிறிய பிரச்சினைக்காக விஜயகோனைக் கட்டாய லீவில் அனுப்பியமையைத் திரும்பப் பெறாவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்கப்போவதாக சுங்கத்திணைக்களத்தின் 7 தொழிற்சங்கங்கள் எச்சரித்துள்ளன.

## சாவகச்சேரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விலைச் சேர்ந்த நாகசாமி நந்தன் (வயது 24), மற்றும் சிவபாலன் சிவலக்ஷன் (வயது 31) ஆகியோரே வாள்வெட்டுக்கு இலக்காகினர்.

இவர்களில் சுகந்தன் வயிற்றில் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையிலிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். ஏனைய இருவரும் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவ்விருவருக்கும் கை, தலை, கால்களில் காயங்கள் ஏற்பட்டுள்ளன.

கனகம்புளியடியில் உள்ள உணவகம் ஒன்றில் வைத்தே இந்தச்சம்பவம்நிகழ்ந்துள்ளது. இரு மோட்டார் சைக்கிள் களில் வந்தவர்களே மூவரை யும் வெட்டினர் என்று கூறப்பட்டது.

சுகந்தன், நந்தன் இருவரும் உணவகத்துக்கு வந்தவர்கள் என்றும், மற்றையவரான சிவபாலன் சிவலக்ஷன் உணவக உரிமையாளர் என்றும் தெரிவிக்கப்பட்டது.–

வாள் வெட்டுச் சம்பவத்துக்குக் காரணம் என்னவென்று தெரியவரவில்லை. சம்பவம் குறித்துச் சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். சம்பவத்தை அறிந்து அவ்விடத்துக்கு இராணுவத்தினரும் வந்திருந்தனர் என்று பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, நேற்று முன்தினம் மானிப்பாய்–சுதுமலைப் பகுதியில் மோசமான வாள்வெட்டுச் சம்பவம் ஒன்று நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10,21,22,40)

## லஞ்சம் பெற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக 25 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

இந்த முறைப்பாடுகளை அடுத்து, 16 சுற்றுவளைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன என்று ஆணைக் குழுவின் பணிப்பாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரியந்த சந்திரசிறி கூறினார்.

கையூட்டு தொடர்பில் முறைப்பாடுகளைப் பதிவு செய்ய வேண்டுமாயின், 1954 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைத்து முறைப்பாடுகளை முன்வைக்க முடியும் என்றும் –

முறைப்பாடுகள் தொடர்பில் இரகசியத்தன்மை காக்கப்படும் என்றும் பொலிஸ் அத்தியட்சகர் பிரியந்த சந்திரசிறி மேலும் குறிப்பிட்டுள்ளார். (இ–ச)

## மாட்டின் தாக்குதலால் முதியவர் உயிரிழந்தார்

வளர்ப்பு மாட்டின் தாக்குதலுக்குள்ளான 63 வயதான முதியவர் ஒருவர் பரிதாபகரமாக மரணமடைந்தார். புத்தளம் மாவட்டத்திலுள்ள சிலாபம் இலுப்பதெனிய பிரதேசத்தில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது

அங்கு உள்ள பண்ணையொன்றில் வளர்க்கப்பட்ட மாடு ஒன்றினால் தாக்கப்பட்ட பண்ணையின்காவலாளியேமரணமடைந்தார்.

மாட்டின் கொம்புகளினால் தாக்கப்பட்டு படுகாயமடைந்த அவர் சிலாபம் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்ட போது இடைவழியில் உயிரிழந்தார். (ம)

## அரசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்குவழங்கியபிரத்தியேகச் செவ்வியிலேயேஅவர்இவ்வாறு கூறினார்.

பயங்கரவாதத்தடைச்சட்டம் தொடர்பாக அந்தச் செவ்வியில் கருத்துரைத்த சுமந்திரன் –

தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டம் மிக மோசமானது. புதிதாகக் கொண்டுவரப்படவுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டம் இருக்கின்ற சட்டத்தை விட வெகுவாக வித்தியாசமானது.

புதிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அது தொடர்பாக ஆராயும் குழுவிற்கு அனுப்பினார்கள். நானும் அந்தக் குழுவில் இருந்தமையால் அதில் உள்ள சில மோசமான விடயங்களை நான் எதிர்த்தேன். என்னுடன் சேர்ந்துவேறு சில எம்.பிக்களும் எதிர்த்தனர்.

பின்னர் புதிதாகக் கொண்டு வர உத்தேசித்துள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் திருத்திய ஆவணத்தைப் பெற நான் முயன்றும் அது முடியவில்லை.

ஆனால், பத்திரிகைகளில் அதன் உள்ளடக்கம் வெளியானது. பத்திரிகைச் செய்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் உண்மையாயின், வரவிருக்கின்ற பயங்கரவாதத் தடைச் சட்டம் மிக மோசமானது என நான் பத்திரிகைகளுக்கு அறிக்கை ஒன்றை விடுத்தேன். – என்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் இலங்கைத் தமிழரசுக் கட்சி அரசாங்கத்துடன் இணைந்து இராஜதந்திர நகர்வுகளை மேற்கொள்வதாலேயே காணாமற்போனோர் பிரச்சினைகள், காணி விடுவிப்புப் போன்ற பல பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் உள்ளன எனக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளிடையே குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறதே எனக் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்த சுமந்திரன் எம்.பி. –

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தற்போதைய அணுகுமுறை மகிந்தராஜபக்ஷ அரசாங்கத்தோடு இருந்த அணுகுமுறையை விட வித்தியாசமானது. புதிய அரசாங்கத்தோடு எப்படிச் செயற்படவேண்டும் என்பது தொடர்பாக கூட்டமைப்பில் உள்ள எல்லாக் கட்சிகளுக்குள்ளும் முரண்பாடு என்று சொல்ல முடியாது. ஆனால், அண்மைக் காலமாக ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சி மட்டும் வித்தியாசமான போக்குடன் செயற்படுகின்றது. அரசுடனான எங்கள் அணுகுமுறைக்கு எல்லா மக்களும் ஆதரவாகத்தான் இருக்கின்றார்கள்.

அரசாங்கம் முழுமையாக எதையும் செய்யவில்லை எனக் கூற முடியாது. அரைவாசியையேனும் செய்திருக்கின்றது.

காணாமற்போனோரைக் கண்டறியும் செயற்பாடு தாமதம் அடைகின்றது என்பது உண்மைதான். ஆனால், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகம் என்கின்ற ஒரு சட்டத்தை அரசாங்கம் எதிர்ப்பின் மத்தியில் நிறைவேற்றியிருக்கின்றது. அது இன்னும் செயற்படாவிட்டாலும் சிறிய திருத்தத்துடன் செயற்படும் என ஜனாதிபதி உறுதியளித்திருக்கின்றார்.

வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் குற்றம் என அறிவித்து புதிய சட்டமூலம் ஒன்று கொண்டுவரப்பட்டு வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டிருக்கின்றது.

காணி விடுவிப்பு என்பதைப் பார்த்தால் பலாலியைச் சுற்றி படையினரிடம் 6348 ஏககர் காணிகள் இருந்தன. அது இன்று 4099 ஏக்கராகக் குறைவடைந்திருக்கின்றது.

அரசியல் கைதிகள் விடயத்தை நோக்கினால் இந்த அரசு பதவியேற்கும்போது 217 பேர் தமிழ் அரசியல் கைதிகளாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். ஆனால், அந்த எண்ணிக்கை இன்று 86 பேராகக் குறைவடைந்திருக்கின்றது.

எனவே, அரசாங்கம் எதையும் செய்யவில்லை என்று சொல்ல முடியாது. ஆனால், மெதுவாகச் செய்கின்றது. வேகம் போதாது. நூறு நாள்களில் எல்லாப்பிரச்சினைக்கும் தீர்வு காண்போம் என்று கூறிய அரசாங்கம் இரண்டு வருடங்களாகியும் அரைவாசியைத்தான் நிறைவேற்றியிருக்கின்றது என்பது எங்களால் திருப்திப்பட முடியாததுதான்.

அதற்காக ஒன்றுமே நடக்கவில்லை எனச் சொல்லி இந்த அரசாங்கத்தை கவிழ்க்கும் நிலைக்கு நாம் இன்னும் வரவில்லை. அவ்வாறான நிலையை எமது மக்கள் சிந்தித்துக் கூடப் பார்க்கவில்லை. – என்று அவர் கூறினார். (ம)

# 5 ஆயிரம் ரூபா தாளை நீக்குவது தொடர்பில் பேச்சுகள் முன்னெடுப்பு

கொழும்பு, மே 08

புழக்கத்திலுள்ளள 5 ஆயிரம் ரூபா நாணயத் தாள் ரத்து செய்யப்படுமா என்பது தொடர்பில் அரசியல் மற்றும் நிதித்துறை மட்டத்தில் பேச்சுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நாணயத்தில் சிங்கப்பூர் குடியுரிமை பெற்ற முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் கையொப்பமிட்டுள்ளமையே இந்த நிலைக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

இரட்டைக் குடியுரிமை பெற்றுக் கொண்ட கீதாகுமாரசிங்க, அரசமைப்பின் அடிப்படையில் நாடாளுமன்றில் அங்கம் வகிக்க முடியாது என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

இதனால் இலங்கை குடியுரிமை அல்லாத அர்ஜுன் மகேந்திரன் கையொப்பமிட்ட 5 ஆயிரம் ரூபா நாணயத்தாள் செல்லுபடியாகுமா என்பது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துலகுணவர்த்தன நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியிருந்தார்.

இதுதொடர்பில் பந்துல குணவர்தனவிடம் வினவிய போது, 5 ஆயிரம் ரூபா நாணயத்தாள் செல்லுபடியாகுமா என்பது தொடர்பில் ஆராய்வதற்கு உயர் நீதிமன்றம் செல்லத் தீர்மானித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

# நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவின் நடவடிக்கை ஸ்தம்பிதம் அடையவில்லை

கொழும்பு, மே 08

நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவின் நடவடிக்கைகள் ஸ்தம்பிதம் அடையவில்லை என்று பொலிஸ்துறை அறிவித்துள்ளது.

இது தொடர்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவின் பணிகள் எந்தவொரு வகையிலும் செயற்திறனற்றதாகவில்லை. விசாரணைகள் சிறந்த முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவின் விசாரணைப் பணிகள் முடக்கப்பட்டுள்ளன என்று வெளியான தகவல்களில் உண்மையில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவுக்காக புதிதாக உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.- என்றுள்ளது. (எ)

# போர்க்குற்ற விசாரணைக்கு அரசு முகம் கொடுக்க நேரும்

## அமைச்சர் மனோ பி.பி.ஸிக்கு பேட்டி



கொழும்பு, மே 08

இலங்கையின் இறுதிக் கட்டப் போரின் போது நடைபெற்றன எனக் கூறப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பான விசாரணைநடைபெறும் என்று தேசிய சக வாழ்வு மற்றும் அரச மொழிகளுக்கான அமைச்சர் மனோகணேசன் பி.பி.ஸிக்கு அளித்த சிறப்பு பேட்டியில் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் வழங்கிய பேட்டியில் மேலும் தெரிவித் தவை வருமாறு:-

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் இலங்கை அரசும் ஒரு பங்குதாரராக உள்ளதால், அந்தக் கடப்பாட்டிலிருந்து நழுவி விட முடியாது.

எனவே, இது தொடர்பில் தற்போதைய அரசு உறுதியாகவுள்ளது.

போர்க்குற்ற விசாரணைகளை முன்னெடுக்க முடியாது என்று அரசின் தலைமை கருதுமானால் அதற்கான விலையைக் கொடுத்தாக வேண்டும்.

வடக்கே இராணுவம் பொதுமக்களின் நிலங்களில் இருந்து வெளியேற வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நான் உறுதியாக இருக்கின்றேன்.

நாட்டின் புதிய அரசமைப்பு இயற்றப்படுவது தொடர்பில், பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

இந்த ஆண்டு நடுப்பகுதியில் அதற்கான வரைவு தயாராகிவிடும் எனும் நம்பிக்கை எனக்கு உள்ளது. -என்றார்.

# பௌத்த மதத்துக்கான முதலிடத்தை உத்தேச அரசமைப்பில் நீக்க நடவடிக்கை

## ஜனாதிபதி சட்டத்தரணி கூறுகிறார்

கொழும்பு, மே 08

தற்போதைய அரசமைப்பின் 9 ஆவது உறுப்புரையில் பௌத்த மதத்துக்கு வழங்கியுள்ள பிரத்தியேக இடத்தை மாற்றுவதற்கு, அரசமைப்புச் சபை 7 மாற்று யோசனைகளை முன் வைத்துள்ளது. இதனால் உத்தேச அரசமைப்பில் பௌத்த மதத்துக்கான முதலிடம் இல்லாமல் போகும் நிலை ஏற்பட்டுள்ளது எனவும் ஜனாதிபதி சட்டத்தரணி மனோஹர டி சில்வா தெரிவித்துள்ளார்.

இந்த யோசனைகள் மூலம் பௌத்த மதம், ஏனைய மதங்களுக்கு சமமான அந்தஸ்தைப் பெறுவதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார். இதனால், பௌத்த மதத்துக்கு இதுவரை காணப்பட்டு வந்த முதலிடம் புதிய உத்தேச அரசமைப்பில் இல்லாமல் போகும் நிலை ஏற்பட்டுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

லால் விஜேநாயக தலைமையிலான உத்தேச அரசமைப்புக்கான மக்கள் கருத்துக் கணிப்புக் குழுவால் வெளியிடப்பட்ட அறிக்கையின் பின்னர், எழுந்துள்ள எதிர்ப்புக்களைச் சமாளிக்க மகாநாயக்க தேரர்களிடம் பௌத்த மதத்துக்கு முதலிடம் கொடுப்பதாக பொறுப்புள்ள அரச தலைவர்கள் வாக்களித்திருந்தனர்.

இந்த வாக்குறுதி, 7 மாற்று யோசனைகள் மூலம் மீறப்படுகின்றது எனவும் சட்டத்தரணி சில்வா தெளிவுபடுத்தியுள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பிரிட்டன், இத்தாலி, நோர்வே போன்ற நாடுகளிலுள்ள அரசமைப்பிலும், அந்நாட்டிலுள்ள மதத்துக்கு முதலிடம் அளிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த நாட்டில் பௌத்த மதத்துக்கு முதலிடம் வழங்கப்படுவதால், ஏனைய மதங்களுக்கு எந்த அநீதியும் இழைக்கப்படுவதில்லை.- என்றார்.

# தருமபுரத்தில் கசிப்பு உற்பத்தி; பொலிஸாரிடம் சிக்கினார் ஒருவர்!




முல்லைத்தீவு, மே 08

கிளிநொச்சி, தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்லாறு பகுதியில் சட்ட விரோதமான முறையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட ஒருவர் அந்தப்பகுதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

தருமபுரம் பொலிஸாரால் கடந்த வெள்ளிக்கிழமை கசிப்பு உற்பத்தி மேற்கொள்ளப்பட்ட இடம் ஒன்றில் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பின் போதே அவர் கைது செய்யப்பட்டார். அத்துடன் 6 பரல் கோடா மற்றும் கசிப்பு உற்பத்தி உபகரணங்கள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன. (எ-81)

# அரசியல் கைதிகள் விடுவிப்பின் போது மகனும் வருவான்! நம்பிக்கையோடு வலிகளுடன் காத்திருக்கின்றார் தாய்!!

முல்லைத்தீவு, மே 08

நாட்டில் ஏற்பட்ட போரால் பாதிப்படைந்த பலர் இன்றும் பல எதிர்பார்ப்புக்களுடன் காத்திருக்கின்றனர். போர் வலிகளைச் சுமந்த இந்தத் தாயும் காணாமற் போன தனது மகனும் அரசியல் கைதிகளை ஜனாதிபதி விடுவிக்கும் போது வருவான் என்ற நம்பிக்கையுடன் தனிமையில் காத்திருக்கின்றார்.

வவுனியா, பூவரசங்குளம், தாலிக்குளத்தைச் சேர்ந்த சடாசிவம் சரஸ்வதி வளர்த்த தனது கடைசிப் பிள்ளையாகிய சடாசிவம் லோகேஸ்வரனை அவனது 19 ஆவது வயதில் பறிகொடுத்தார்.

விடுதலைப்புலிகளுடன் 2002 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி இணைந்து கொண்டார். பிள்ளையை வன்னி எங்கும் தேடி அலைந்த தாய் இரண்டு வருடங்களுக்கு பின் புதுக்குடியிருப்பில் சந்தித்தார்.

பிள்ளையை கட்டித் தழுவி வீடு வருமாறு கூறிய போதும் பிள்ளை வரவில்லை. இறுதிப் போரும் தொடங்கியது.

தனது பிள்ளைக்கு எதுவும் நேர்ந்து விடக்கூடாது என தினமும் கடவுளிடம் மன்றாடிய தாய், இன்றும் தனது பிள்ளையின் வருகைக்காக காத்துக் கண்ணீருடன் வேண்டி நிற்கின்றாள்.

போர் முடிவடைந்த பின்னர் 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 28 ஆம் திகதி மன்னார், உயிலங்குளம் பகுதியில் இருந்து சரஸ்வதிக்கு தொலைபேசி அழைப்பு ஒன்று வந்தது. அது தனது பிள்ளையின் அழைப்பு தான் என்று கூறுகின்றார் இந்தத் தாய்.

மனித உரிமை ஆணைக் குழு, பொலிஸ் நிலையங்கள், புலனாய்வுத்துறையினர், இராணுவ முகாம்கள், ஜனாதிபதி ஆணைக்குழு என இந்தத் தாய் பலரிடமும் சென்று தனது மகன் தொடர்பாக முறையிட்டார்.

அதன்பின் 2014 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 19 ஆம் திகதி கொழும்பில் இருந்து வந்த குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தாம் கொண்டு வந்த ஆவணங்களை காட்டி சில தகவல்களைப் பெற்றுள்ளனர்.

அதன்போது அவர்கள் வைத்திருந்த மூன்று புகைப் படங்களில் இந்தத் தாயின் மகன் லோகேஸ்வரனின் புகைப்படமும் இருந்துள்ளது.

அதன்பின் இன்று வரை மகன் தொடர்பாக எந்தத் தகவலும் இல்லாது அவனது விடுதலைக்காக கண்ணீருடன் நாளாந்தம் தனது கடமைகளைச் செய்தவாறு வாழ்கின்றார்.



மேலும், தனது மகனை புலனாய்வுத்துறையினர் தான் வைத்திருக்கின்றனர். அரசியல் கைதிகளை விடுவிக்கும் போது தனது மகனும் வந்து விடுவான் என்ற ஏக்கத்துடனும் நம்பிக்கையுடன் வாழ்ந்து வருகிறார். (எ-81)

# கடற்புலிகளின் பாசறைகள் இப்போது காட்சியகமாக!




முல்லைத்தீவு, மே 08

முள்ளிவாய்க்கால் மேற்குக் கரையோரப் பகுதியில் யுத்த கால இறுதி வேளையில் விடுதலைப் புலிகளின் கடற்படைப் பிரிவு செயற்பட்டு வந்தது. அந்தப் பகுதி கடற்புலிகளின் செல்வாக்குமிக்க - பலம் பொருந்திய - கோட்டையாக இருந்தது.

அங்கு கடற்புலிகளின் பாசறைகள் இருந்தன. அந்தப் பாசறைகள் தற்போது பொதுமக்கள் பார்வையிடும் காட்சியகமாக மாறியுள்ளது.

தென்னிலங்கையில் இருந்து படையெடுத்து வரும் பெரும் எண்ணிக்கையான மக்கள் இந்தக் காட்சி வளாகத்துக்குள் சென்று பார்வையிட்டுத் திரும்புகின்றனர். (இ-ச)




# எங்களுக்குச் சொந்தமான தேங்காய்களையே எமக்கே விற்கும் படையினர்!

## இரணைதீவு மக்கள் வேதனை



கொழும்பு, மே 08

எங்களது காணிகளில் விளைந்த - எங்களுக்குச் சொந்தமான தேங்காய்களைக் கொண்டு வந்து எங்களிடமே விற்கின்றனர் கடற்படையினர்.

இவ்வாறு தங்களது வேதனையை வெளிப்படுத்தினர் இரணைதீவு மக்கள்.

பூநகரி - இரணைதீவு மக்கள் தங்களின் சொந்த இடத்திற்குச் செல்வதற்காக நேற்று ஏழாவது நாளாகவும் தொடர்ந்து கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தங்களின் நிலை குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில் -

"இரணைதீவில் சுதந்திரமான - வசதியான வாழ்க்கையை வாழ்ந்தோம். பல தொழில்கள் இருந்தன. நாங்கள் கஷ்டப்படவில்லை. ஒன் றாக, ஒற்றுமையாகக் கூடி வாழ்ந்தோம்."

"இப்போது தென்னைகள் வளர்ந்து காய்க்கின்றன. கடற்படையினர் எங்களது தேங்காய்களை எங்களிடமே கொண்டு வந்து விற்கின்றனர்."

"எங்களது காணிகளில் குடியிருந்துகொண்டு எங்களுக்கு அனுமதி இல்லை என்று கூறுகின்றனர். இது மிகவும் வேதனையாக உள்ளது."

"சொர்க்கமே என்றாலும் சொந்த ஊரைப் போல வராது இரணைதீவுக்குச் செல்ல விடுங்கோ" - என அவர்கள் கண்ணீருடன் கோரிக்கை விடுக்கின்றனர்.

## ஏழாவது நாளாகவும் நேற்று போராட்டம்

இதேவேளை, வடக்கு மாகாண எதிர்க்கட்சித்தலைவர் சி.தவராசா மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் ஆகியோர் நேரில் சென்று போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களுடன் அளவளாவினர். அவர்களுக் குத் தங்களின் ஆதரவையும் தெரிவித்துள்ளனர். (இ-ச)

# வவுனியா வைத்தியசாலை வளாகத்தில் நேற்று விளையாட்டு நிகழ்வுகள்

## வைத்தியர்கள், தாதியர்கள், ஊழியர்கள் பங்குபற்றினர்





வவுனியா பொது வைத்தியசாலையின் சிங்கள, தமிழ் புதுவருடப்பிறப்பை முன்னிட்டு விளையாட்டு நிகழ்வுகள், வைத்தியசாலை வளாகத்தில் பணிப்பாளர் கு.அகிலேந்திரன் தலைமையில் நேற்று நடைபெற்றன.

புதுவருட தினத்தை முன்னிட்டு வருடாந்தம் நடத்தப்படும் கிராமிய, பாரம்பரிய, கலாசார, விளையாட்டுக்களான கயிறு இழுத்தல், சைக்கிள் ஓட்டம், முட்டி உடைத்தல், கபடி மற்றும் ஓட்டப் பந்தய நிகழ்வுகள் நடைபெற்றன. வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் வவுனியா பொது வைத்தியசாலையின் வைத்தியர்கள், தாதியர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் கலந்துகொண்டனர். (இ-ச-100)

# சிறி சபாரத்தினத்தின் நினைவஞ்சலி நேற்றுமுன்தினம் வவுனியாவிலும்...!



வவுனியா, மே 08

தமிழ்ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) மறைந்த தலைவர் சிறி சபாரத்தினத்தின் 31ஆவது ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வும் தமிழ்த் தேசிய ஒற்றுமை வாரமும் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெற்றன.

ரெலோ இயக்கத் தலைவரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த அஞ்சலிக் கூட்டத்தில் ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ்பிறேமச் சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வட மாகாண சபைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், வட மாகாணப் போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன், ரெலோ இயக்க செயலாளரும் முன்னாள் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான என்.ஸ்ரீகாந்தா, வட மாகாண சபை உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன், செ.மயூரன், இ.இந்திரராசா, ம.தியாகராசா, க.சிவநேசன், புவனேஸ்வரன், கிழக்கு மாகாணசபை உறுப்பினர் கருணாகரன் (ஜெனா), வவுனியா தெற்குப் பிரதேசசபைச் செயலாளர் கிஷோர் சுகந்தி, கட்சிப் பிரதிநிதிகள் எனப் பலரும் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். (இ-100)

# பைஸரின் வீட்டை முற்றுகையிடுவோம் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தத் தவறினால்

## நேற்று கூட்டு எதிரணியினர் மிரட்டல்



கொழும்பு, மே 08

உள்ளூராட்சிசபைத்தேர்தல்களை விரைவில் நடத்தத் தவறினால், அமைச்சர் பைஸர் முஸ்தபாவின் வீட்டை முற்றுகையிடுவோம்.

- இவ்வாறு கூட்டு எதிர்க் கட்சியினர் எச்சரித்துள்ளனர்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய கூட்டு எதிரணியைப் பிரதிநிதித்துவம் செய்யும் மாகாணசபை உறுப்பினர்கள் இதனைத் தெரிவித்தனர்.

கூட்டு எதிர்க்கட்சியின் மே தினக் கூட்டத்தில் திரண்டிருந்த மக்கள் கூட்டத்தைக் கண்டு அரசு அச்சம் அடைந்துள்ளது.

அதன் காரணமாகவே தேர்தலை நடத்த அரசு தயக்கம் காட்டி வருகின்றது. தேவையான நேரத்தில் தேர்தலை எதிர்கொள்ளத் தயாராக இருக்கின்றோம்.

எனவே, விரைவில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை அரசு நடத்தவேண்டும். நடத்தத் தவறினால் அமைச்சர் பைஸர் முஸ்தபாவின் வீட்டை முற்றுகையிடுவோம்." - என்றும் அவர்கள் கூறியுள்ளனர். (இ-ச)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.10 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள ... லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் ... 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.05.2017 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.